ஸ்ரீ:

ஸ்ரீ க்ருஷ்ணாய பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ க்ருஷ்ணத்வைபாயனாய நம:

# ஸ்ரீ மஹாபாரதம்.

## ஸ்திரீபர்வம்

### முதலாவது அத்யாயம்.

### ஜலப்ரதானிகபர்வம்.

நாராயணம் நமஸ்க்ருத்ய நரம் சைவ நரோத்தமம் |
தேவீம் ஸரஸ்வதீம் வ்யாஸம் ததோ ஜயமுதீரயேத் ||

புத்திரர்கள் முதலானவர்களைக் குறித்துத் துக்கிக்கின்ற திருதராஷ்டிரனை ஸஞ்சயன் ஸமாதானம்செய்தது.)

ஜனமேஜயர், "ரிஷியே! துர்யோதனனும் எல்லாச்சேனைகளும் கொல்லப்படவே, அதைக்கேட்டுத் திருதராஷ்டிர மஹாராஜன் என்ன செய்தான்? அவ்வாறே குருவம்சத்தில் உதித்தவரும் பெரியமனமுள்ளவரும் அரசருமான தர்மநந்தனரும் கிருபர்முதலான அந்த மூவரும் யாதுசெய்தனர்? அஸ்வத்தாமாவினுடைய செய்கையும், (கிருஷ்ணனாலும் அஸ்வத்தாமாவினாலும்) பரஸ்பரம் செய்யப்பட்ட சாபமும் †கேட்கப்பட்டன. ஸஞ்சயன் சொன்னபடி மேல்நடந்த விருத்தாந்தத்தை உரைப்பீராக" என்று வினவ, வைசம்பாயனர் சொல்லலானார்.

"ஜயசாலிகளுள் சிறந்தவரே! நூறுபிள்ளைகளும் கொல்லப்பட்டவுடன், சைன்யமுற்றவனும் கிளைகள்வெட்டப்பட்ட மரம் போன்றவனும் புத்திரசோகத்தினால் நான்குபக்கத்திலும் தவிக்கும்

---

இதன் உரை முதலியவற்றை முன்பர்வங்களின் தொடக்கத்திற் காண்க.

† வேறுபாடம்.

படி செய்யப்பட்டவனும் தியானத்தினால் மௌனத்தை அடைந்தவனும் சிந்தையினால் கவரப்பட்டவனும் பூமிக்குஇறைவனுமான திருதராஷ்டிரராஜனைக் குறித்து ஸஞ்சயன் (பின்வரும்) வாக்கியத்தை உரைக்கலானான். "மஹாராஜரே! ஏன் துக்கிக்கிறீர்? துக்கத்தில் உதவிபுரிவோர் இல்லை. பிரஜாநாதரே! பதினெட்டு அக்ஷௌஹிணிகள் கொல்லப்பட்டன. ஜயிக்கப்பட்ட இந்தப் பூமியானது அரசர்களால் விடுபட்டதும் உத்ஸவத்தை இழந்ததுமாகப்போகிறது. பற்பல ஜாதியைச்சேர்ந்த அரசர்களனைவரும் பற்பல திக்குகளிலிருந்து வந்துசேர்ந்து உம்முடைய புத்திரனால் நாசம் அடைந்தார்கள். அரசரே! மாண்டவர்களான பிதாக்களுக்கும் புத்திரர்களுக்கும் பௌத்திரர்களுக்கும் ஞாதிகளுக்கும் அவ்வாறே நண்பர்களுக்கும் குருக்களுக்கும் மற்ற அநுசரர்களுக்கும் ப்ரேதகார்யங்களனைத்தையும் வரிசைக்கிரமமாகச் செய்விப்பீராக" என்று சொன்னான். புத்திரபௌத்திரர்களுடைய வதத்தினால் பீடிக்கப்பட்டவனும் அவமதிக்கத்தகாதவனுமான திருதராஷ்டிரன் துக்ககரமான அந்த வாக்கியத்தைக்கேட்டுக் காற்றினால் முறிக்கப்பட்ட மரம்போலப் பூமியில்விழுந்தான். திருதராஷ்டிரன், "புத்திரர்களையும் மந்திரிகளையும் எல்லா ஸுஹ்ருத்துக்களையும் மாளக்கொடுத்தவனான நான் இந்தப்பூமியில் ஸஞ்சரித்துக்கொண்டு துக்கத்தை அடையப்போகிறேன்; இது நிச்சயம். ஸஞ்சய! சிறகுகளை இழந்த கருடன்போலப் பந்துக்களை இழந்த நான் இப்பொழுது ஜீவித்திருப்பதினால் யாது பயன்? அறிவுமிக்கவனே! நாடு கவரப்பட்டவனும் அவ்வாறே ஸுஹ்ருத்துக்களும் புத்திரர்களும் கொல்லப்பட்டவனுமான நான் க்ஷீணித்த கிரணங்களுடன்கூடின சூரியன் போலப் பிரகாசிக்கப்போகிறதில்லை. ஸுஹ்ருத்துக்கள் பலவாறுஞ்சொல்லுகின்ற பரசுராமர் தேவரிஷியான நாரதர் கிருஷ்ணத்வைபாயனர் இவர்களுடைய வாக்கியம் என்னால் அநுஷ்டிக்கப்படவில்லை. கிருஷ்ணன் ஸபையின் நடுவில் என்னைநோக்கி, 'அரசரே! உமக்கு வைரம் வேண்டாம். புத்திரனை வசப்படுத்திக்கொள்ளும்' என்று எனக்கு நன்மையாகக்கூறிய வாக்கியத்தையும் அநுஷ்டிக்காமல் கெட்டபுத்தியுள்ள நான் அதிகமாகத் தவிக்கிறேன். ஸுகத்தைத்தரத்தக்கதான பீஷ்மருடைய சொல்லை நான் கேட்கவில்லை. அவ்வாறே விருஷபம்போலக்கர்ஜிக்கின்ற துர்யோதனன், துச்சாஸனன், கர்ணன் இவர்களுடைய வதத்தையும் துரோணராகிறசூரியனுடைய கிரகணத்தையும் கேட்டு என் உள்ளம் பிளக்கப்படுகிறது. ஸஞ்சய! எந்தப்பாவத்தினுடைய பலமா

னது இப்பொழுது இவ்விடத்தில் மூடனை என்னால் அனுபவிக்கப் படுகிறதோ அப்படிப்பட்ட பாவத்தைச் சிறிதேனும் முன்னேசெய்ததாக எனக்கு நினைவில்லை. பிரம்மதேவர் என்னைத் துக்ககரமான காரியங்களில் சேர்ப்பித்தமையால் நிச்சயமாக என்னால் முற்பிறப்புக்களில் தீவினை சிறிது செய்யப்பட்டிருக்கிறது. எனக்குப் பிராயமுதிர்ச்சியும் எல்லாப் பந்துக்களுடைய நாசமும் * ஸுஹ்ருத்துக்கள் மித்திரர்கள் இவர்களின் நாசமும் தெய்வச்செயலால் கிட்டிவந்துவிட்டன. பூமியில் அதிக துக்கமுள்ள மனிதன் என்னைத் தவிர வேறுயாவன் இருக்கிறான்? ஆதலால், நல்லவிரதத்தையுடைய பாண்டவர்கள், திறக்கப்பட்டிருக்கிறதும் பிரம்மலோகத்துக்குச் செல்வதுமான நீண்டவழியை அடைந்தவனான என்னை இப்பொழுதே பார்க்கட்டும்" என்று சொன்னான். அடிக்கடி புலம்புகின்றவனும் அளவற்றசோகத்தைச் சிந்திக்கின்றவனுமான அந்த அரசனுடையசோகத்தைப் போக்கக்கூடிய வாக்கியத்தை ஸஞ்சயன் உரைக்கலானான்.

"அரசரே! சோகத்தை விலக்கிவிடும். அரசர்களுள் சிறந்தவரே! விருத்தர்களிடமிருந்து வேதார்த்தமான நிச்சயங்களும் பற்பல சாஸ்திரங்களும் ஆகமங்களும் உம்மால் கேட்கப்பட்டிருக்கின்றன. ஸ்ருஞ்சயன் புத்திரசோகத்தால் பீடிக்கப்பட்டிருக்குந் தருணத்தில் முற்காலத்தில் ரிஷிகள் சொன்னதையும் அறிந்திருக்கிறீர். உம்முடையபுத்திரன் யௌவனத்துடன் கூடினவனாய் கொழுப்பை அடைந்திருக்குந்தருணத்தில் நண்பர்கள் சொல்லிய அர்த்தவாக்கியமானது ப்ரயோஜனத்தில் சோர்வுள்ளவரும் கொடுக்க விருப்பமில்லாதவருமான உம்மால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஒருமித்தமான ஸ்வகாரியமும் நிறைவேற்றிக்கொள்ளப்படவில்லை. கூர்முனையுள்ள கத்தி போன்ற உமது புத்தியைக்கொண்டு காரியஞ்செய்திருக்கிறீர். மகாராஜரே! மஹா பாகுபலமுள்ளவரே! எவனுக்குத் துச்சாஸனனும் கெட்டஎண்ணமுள்ளவனான கர்ணனும் துஷ்டாத்மாவான சகுனியும் துர்ப்புத்தியுள்ள சித்ரஸேனனும் மந்திரிகளோ, எவனால் அளவில்லாத உலகமனைத்தும் சல்யமயமாகச் செய்யப்பட்டதோ, உம்முடைய அந்தப் புத்திரனால் சொல்லப்பட்டவர்களுள் முதியவரான பீஷ்மர், காந்தாரி, விதுரர், துரோணர், சாரத்வதரான கிருபர், கோவிந்தர், புத்திமானான நாரதர், அவ்வாறே மற்றரிஷிகள் அளவுகடந்த தேஜஸுள்ளவரான வியாஸர் இவர்களுடைய வசனம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. க்ஷத்திரியர்கள் எல்லாரும் நாசஞ்செய்யப்பட்

* சாந்திபர்வம், 380-ம் பக்கம் முதற் காண்க.

டார்கள். சத்துருக்களுடைய புகழானது விருத்திசெய்யப்பட்டது. யுத்தமானது அதர்மத்துடன்கூடினதென்று ஏதோவொன்றை நித்தியம் சொல்லிக்கொண்டு நீரும் மத்யஸ்தராகவன்றோ இருந்தீர்? தகுந்ததான வசனம் ஒன்றையும் நீர் சொல்லவில்லை. பாரத்தைப் பொறுப்பவரான உம்மால் பாரமானது தராசினால் ஸமமாகநிறுக்கப்படவில்லை. சென்றுபோனவிஷயத்தைப்பற்றிப்பச்சாதாபத்தை அடையாமலிருக்கும்படி ஆதியிலேயேமனிதன் முறைப்படி நடந்துகொள்ளவேண்டும். அரசரே! புத்திரனிடத்தில் பேராவலுள்ள நீர் அவனுக்குப் பிரியத்தைச்செய்ய விரும்பினீர். இந்தப்பச்சாத்தாபத்தை அடைந்தீர். நீர் துக்கிப்பதற்குத் தகுந்தவரல்லீர். எவன் தேனைமாத்திரம்பார்த்து மலையின் நுனியிலிருந்து கீழேவிழுதலைக் கவனிக்கவில்லையோ, மதுவினிடத்திலுண்டான பேராவலால் தவறிவிழுந்தவனை அந்தமனிதன் உம்மைப்போலத் துக்கத்தையே அடைகிறான். துக்கிக்கிறவன் கார்யஸித்திகளை அடையான். துக்கிக்கிறவன் ஸுகத்தை அடையான். துக்கிக்கிறவன் ஸம்பத்தை அடையான். துக்கிக்கிறவன் ஜயத்தை அடையான். தானே நெருப்பை உண்டுபண்ணி அந்தநெருப்பினால் எவன் சூழப்பட்டவனாகவும் எரிக்கப்படுகிறவனாகவும் மீண்டும்தாபத்தை அடைகிறானோ அவன் பண்டிதனாகான். புத்திரர்களுடன்கூடின உம்மாலேயே வாக்கியமாகிறவாயுவினால் விருத்திசெய்யப்பட்டதும் பேராசையாகிறநெய்யினால் நன்றாக நனைக்கப்பட்டதுமான இந்தப் பார்த்தர்களாகிற நெருப்பானது மூட்டப்பட்டது. நன்குமூட்டப்பட்ட அந்தஅக்னியில் உம்முடையபுத்திரர்கள் விட்டில்கள்போல விழுந்தார்கள். கேசவராகிறநெருப்பினால் மிச்சமில்லாமல் எரிக்கப்பட்டிருக்கிற அந்த உமது புத்திரர்களைப்பற்றி நீர் விசனிக்கலாகாது. அரசரே! கண்ணீர்விழுதலால் முகக்கலக்கமுள்ளவராயிருத்தலென்பது சாஸ்திரத்தில் காணப்படாததன்றோ? பண்டிதர்கள் இதைக் கொண்டாடுகிறதில்லை. இவைகள் நெருப்புப்பொறிகள்போல இந்த மனிதர்களைக் கொளுத்துகின்றனவல்லவா? புத்தியினால்மனத்தளர்ச்சியை விட்டுவிடும். தைர்யத்தினால் மனத்தை நிலைநிறுத்திக்கொள்ளும்” என்றுசொன்னான். பகைவர்களைத் தவிக்கச்செய்பவரே! மஹாத்மாவான அந்தஸஞ்சயன் இவ்வண்ணம் தேறுதலடையச்செய்தான். விதுரர் மறுபடியுமே புத்திபூர்வமாகத் திருதராஷ்டிரனுக்குப் பின்வருமாறு கூறலானார்.

## இரண்டாவது அத்யாயம்.

## ஜலப்ரதானிகபர்வா. (தொடர்ச்சி.)

(விதுரர் சாஸ்திரார்த்தங்களைச்சொல்லித் த்ருதராஷ்டிரனுடைய
சோகத்தைப் போக்கியது.)

பிறகு, விதுரர் அமிருதமயம் போன்ற வாக்கியங்களால் மனக்
களிப்பு உண்டாகும்படி செய்துகொண்டு புருஷச்ரேஷ்டனான த்ருத
ராஷ்டிரனைக்குறித்துச் சொல்லியதைக் கேட்டுக்கொள்ளும். விது
ரர், "அரசரே! எழுந்திரும். ஏன் படுத்திருக்கிறீர்? காரியத்தினால்
மனத்தை நிலைநிறுத்திக்கொள்ளும். உலகத்தாருக்குத் தலைவரே! இது
தான் எல்லாப்பிராணிகளுக்கும் முடிவான கதி. எல்லாவளர்ச்சி
களும் குறைதலை முடிவாகக்கொண்டிருக்கின்றன. உயர்வுகள் விழு
தலை முடிவாகக் கொண்டிருக்கின்றன. சேர்க்கைகள் பிரிதலை முடி
வாகக்கொண்டிருக்கின்றன. உயிரும் மரணத்தை முடிவாகக்
கொண்டது. பாரதரே! க்ஷத்திரியர்களுள் சிறந்தவரே! யமன் சூர
னையும் பயப்படுகிறவனையும் இழுக்கும்போது ஏன் அந்த க்ஷத்திரியர்
கள் போர்புரியமாட்டார்கள்? யுத்தஞ்செய்யாதவன் இறந்துபோகி
றான். யுத்தஞ்செய்கிறவனும் உயிரோடிருக்கிறான். மஹாராஜரே!
காலத்தை அடைந்து ஒருவனாவது அதனைத்தாண்டவில்லை. பார
தரே! பிராணிகள் ஆதியில் இல்லாமலிருந்து மத்தியிலிருந்து கடை
சியில் அழிந்தேபோகின்றன. அந்த விஷயத்தில் என்ன புலம்பல்?
சோகத்தை அடைகிறவன் மரித்தவனைப் பின்தொடருகிறதுமில்லை.
துக்கிக்கிற மனிதன் தான் மரிக்கிறதுமில்லை. உலகம் இவ்வண்
ணம் இயற்கையாக இருக்கும் ஸமயத்தில் யாது பயனைக்கருதி
துக்கப்படுகிறீர்? காலமானது நானாவிதமான பிராணிகளைத்
தையும் நிச்சயமாக இழுக்கிறது. குருக்களுள் சிறந்தவரே! கா
லத்துக்கு ஒருவனாவது வேண்டியவனுமல்லன்; விரோதியும்
அல்லன். பரதர்களுள் சிறந்தவரே! காற்றானது புல்நுனிகளைத் தன்
வசத்தை அடையும்படிசெய்வதுபோலக் காலமானது பிராணிகளைத்
தன் வசப்படுத்திக்கொள்ளுகிறது. ஒருகூட்டமாய்ப் புறப்பட்டுச் செல்
லுகின்றவர்களும் வேறிடத்திற்குச் செல்வதை ஸ்வபாவமாகக்கொண்
டவர்களுமான அனைவருள்ளும் எவனுக்குக் காலம்போ அவன் முந்திச்
செல்லுகிறான். அந்த விஷயத்தில் ஏன் புலம்பவேண்டும்? அர
சரே! சாஸ்திரங்கள் பிரமாணமானால் யுத்தத்தில் கொல்லப்பட்
டிருக்கிற இவர்களைப்பற்றி நீர் துக்கித்தல் தகாது. அவர்கள் உத்தம

கதியை அடைந்தார்கள். எல்லாரும் வேதாத்யயனம் செய்தவர்கள் அன்றோ? எல்லாரும் விரதத்தை அநுஷ்டித்தவர்கள். எல்லாரும் (யுத்தத்தில்) எதிர்த்து நின்றே உயிர்துறந்தார்கள். அந்தவிஷயத்தில் புலம்பல் என்ன? பார்வைக்குத்தெரியாத இடத்தினின்று வந்தார்கள்; மறுபடியும் கண்ணுக்குத்தெரியாமையை அடைந்தார்கள். இவர்கள் உமக்குஸம்பந்தப்பட்டவர்களல்லர்; அவர்களுக்கு நீரும் ஸம்பந்தப்பட்டவரல்லீர். அந்தவிஷயத்தில் ஏன் புலம்பவேண்டும்? கொல்லப்பட்டவன் ஸ்வர்க்கத்தை அடைகிறானன்றோ? ஜயித்தால் கீர்த்தியை அடைகிறான். இரண்டும் நமக்கு அதிககுணமுள்ளனவே. யுத்தத்தில் பலனில்லாமலிருத்தல் இல்லை. இந்திரன் அவர்களுக்கு விரும்பியவற்றையெல்லாம் கொடுப்பனவான உலகங்களை அமைப்பான். பரதர்களுள் சிறந்தவரே! இந்திரனுக்கு இவர்கள் அதிதிகளாகிறார்களன்றோ? சூரர்களான மனிதர்கள் யுத்தத்தில் கொல்லப்பட்டவர்களாகி எவ்வண்ணம் ஸ்வர்க்கத்தை அடைகிறார்களோ அவ்வண்ணம் தக்ஷிணைகளுடன்கூடின யஜ்ஞங்களாலும் தவங்களாலும் வித்தையினாலும் அடைகிறதில்லை. சூரர்களுடையதேகங்களாகிற அக்னிகளில் அவர்கள் பாணங்களாகிற ஆகுதிகளை ஹோமம்செய்தார்கள்; தேஜஸ்விகளான அந்தச் சூரர்கள் ஹோமஞ்செய்யப்படுகின்றபாணங்களையும் ஒவ்வொருவரும்பொறுத்தார்கள். அரசரே! ஸ்வர்க்கத்துக்கு ஸாதகமான உத்தமமார்க்கத்தை இவ்வண்ணம் உமக்கு உரைக்கிறேன். இவ்வுலகில் க்ஷத்திரியனுக்கு யுத்தத்தைக்காட்டிலும் மேலானது ஒன்றும் இல்லை. மஹாத்மாக்களும் யுத்தத்தில் ஸமர்த்தர்களும் சூரர்களுமான அந்த க்ஷத்திரியர்கள் உத்தமமான மனோரதங்களைப் பெற்றார்கள். எல்லாரும் துக்கிக்கப்படத்தக்கவர்களல்லர். புருஷசிரேஷ்டரே! உம்மை நீரே திருப்தியடையச் செய்துகொண்டு துக்கத்தைப் பாராட்டாமலிரும். நீர் இப்பொழுது துக்கத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டுச் சரீரத்தை விடத்தக்கவரல்லீர். ஆயிரம் தாய்களும் ஆயிரம் தந்தைகளும் நூறுக்கணக்கான புத்திரர்களும் மனைவிகளும், ஸம்ஸாரங்களை அநுபவிக்கப்பட்டனர். அவர்கள் எவனுக்கு ஸம்பந்தப்பட்டவர்கள்! நாம்தாம் யாருக்கு ஸம்பந்தப்பட்டவர்கள்! ஒவ்வொருநாளிலும் சோகத்துக்கிடமான ஆயிரங்களும் பயத்துக்கிடமான நூறுகளும் மூடனை வந்து அடைகின்றன; பண்டிதனை அடையா. மனிதர்களுள் சிறந்தவரே! காலத்துக்கு ஒருவனும் நண்பனும் அல்லன்; பகைவனும் அல்லன். காலம் ஒருஸமயத்திலும் மத்யஸ்தமாக இருக்கிறதில்லை. காலம் அனைத்தை

யும் இழுக்கிறது. காலம் பூதங்களைப் பக்குவம் செய்கிறது. காலம் பிரஜைகளை ஸம்ஹரிக்கிறது. பிராணிகள் உறங்குந்தருணத்திலும் காலமானது விழித்துக்கொண்டிருக்கிறது. காலமானது எவ்விதத்தினாலும் தாண்டமுடியாததன்றோ? யௌவனம், ரூபம், உயிர், பொருட்குவியல், ஆரோக்யம், இஷ்டர்களோடு சேர்ந்து வாழ்தல் இவைகள் நிலையில்லாதவை. இவைகளில் பண்டிதன் ஆசைவைக்கக்கூடாது. ஒருவன் எல்லாருக்கும் பொதுவான துக்கத்தைப்பற்றித் துக்கிக்கக்கூடாது. அதற்காகத் தான் மரித்தாலும் அந்தத்துக்கம் இவனுக்கு நிவிர்த்தியாகாது. பராக்கிரமத்தைப் பார்ப்பனேயாகில் துக்கிக்காதவனை இருந்துகொண்டு அதற்குப் பரிகாரத்தைச் செய்யவேண்டும். அதனைச் சிந்திக்காமலிருப்பதென்னும் இதுதான் துக்கத்துக்கு மருந்து. ஆலோசிக்கிறதால், அது குறைகிறதில்லை. பின்னும் அதிகமாக விருத்தியும் அடைகிறது. அல்ப புத்தியையுடைய மனிதர்கள் வேண்டாத காரிய ஸம்பந்தத்தினாலும் ப்ரிய வஸ்துவின் பிரிவினாலும் மனோதுக்கங்களை அடைகிறார்கள். சென்றதைப்பற்றித் துக்கிப்பதால் அறமோ பொருளோ இன்பமோ (ஒன்றும்) உண்டாகா. அக்காரியப்ரயோஜனத்தையும் அடைகிறதில்லை. அறம்பொருளின்பங்களினின்றும் நழுவும்படி செய்யப்படுகின்றான். மனிதர்கள் விஷயங்களில் பற்றுதலை அடியாகக் கொண்டு உண்டான ஒருவரையொருவர் தாண்டுந் நிலையை அடைந்து திருப்தியில்லாதவர்களாகி மயங்குகிறார்கள். பண்டிதர்கள் ஸந்தோஷத்தை அடைகிறார்கள். அறிவினால் மனோதுக்கத்தைப் போக்கவேண்டும். ஔஷதங்களால் சரீர துக்கத்தை நிவிர்த்தி செய்துகொள்ளவேண்டும். இது விஞ்ஞான ஸாமர்த்தியம். பாலர்களைப்போல் புத்திகுறைவை அடையக்கூடாது. பூர்வம் செய்த கர்மமானது மனிதன் படுத்துக்கொண்டிருந்தால் கூடப் படுத்திருக்கிறது; நின்றால் நிற்கிறது; ஓடினால் ஓடுகிறது. எந்த எந்த நிலைமையில் எந்த எந்த நன்மைதீமைகளைச் செய்கிறானோ அந்த அந்த நிலைமையில் அந்த அந்தப் பயனை அடைகிறான். எவன் எந்த எந்த சரீரத்தோடு எந்த எந்தக் கர்மாவைச் செய்கிறானோ அவன் அந்த அந்தச் சரீரத்தினால் அந்த அந்தப்பயனை அடைகிறான். தனக்குத் தானே பந்து. தனக்குத்தானே சத்துரு. தான் செய்த நன்மைக்கும் தீமைக்கும் தானே ஸாக்ஷி. நல்லசெய்கையினால் ஸௌக்யம்; பாவத்தொழிலால் துக்கம். எல்லா இடத்திலும் செய்யப்பட்டதே பலிக்கி

றது. ஓரிடத்திலாவது செய்யப்படாதது பலிக்கிறதில்லை. உம்மைப் போன்ற புத்திசாலிகள் ஞானவிருத்தமானவையும் அநேக அபாயங்களுள்ளவையும் அடியோடு நாசஞ்செய்யும் தன்மையுள்ளவையுமான கார்யங்களில் முயல்வதில்லை" என்றார்

## மூன்றாவது அத்யாயம்.

## ஜலப்ரதாநிகபர்வம். (தொடர்ச்சி.)

(விதுரர் திருதராஷ்டிரனுடைய சோகத்தைப் போக்குவதற்காகச் சாஸ்திரார்த்தத்தைக் கூறியது.)

திருதராஷ்டிரன், "மஹாப்ராஜ்ஞனே! நல்லவசனத்தை உரைத்தாய். என்னுடைய இந்தச்சோகம் போய்விட்டது. மீண்டும் வாக்கியங்களை உண்மையாகக் கேட்கவிரும்புகிறேன். வேண்டாதவைகள் நேர்வதனாலும் வேண்டியவைகள் நேராமற்போவதனாலும் உண்டாகிற மனோதுக்கத்தைப் பண்டிதர்கள் எவ்வாறு விலக்கிக்கொள்ளுகிறார்கள்?" என்று வினவ, விதுரர் சொல்லலானார்.

"மனமானது எந்தஎந்தத் துக்கத்தினின்றும் ஸுகத்தினின்றும் விடப்படுகிறதோ அந்த அந்தத் துக்கத்தினின்றும் ஸுகத்தினின்றும் சாந்தியை அடைந்து கற்றறிந்தவன் நல்லகதியை அடைகிறான். நரஶ்ரேஷ்டரே! ஆலோசிக்கப்படுமாகில், இவை அனைத்தும் நிலையில்லாதவை. உலகம் வாழைக்குழைப்பானது. இதற்கு வயிரம் இல்லை. எப்பொழுது பேரறிவாளர்களும் மூடர்களும் தனிகர்களும் வறியவர்களுமாகியஎல்லாரும் மரணத்தைஅடைந்துகவலையற்றுஉறங்குகிறார்களோ அப்பொழுது தசையில்லாதவையும் எலும்புகள் மிகுதியாக உள்ளவையும் நரம்புக் கட்டுக்களுள்ளவையுமான சரீரங்களால் அவர்களுக்கு ஜனங்கள் குலரூபாதிகளை அறியவேண்டி என்ன விசேஷத்தைப் பார்க்கின்றனர்? ஒருவருக்கொருவர்வஞ்சகபுத்தியைஉடையவர்களாகி மனிதர்கள் யாதுகாரணத்தினால் (அபகாரத்தைச்செய்ய) விரும்புகிறார்கள்? பண்டிதர்கள் மனிதர்களுக்குத் தேகங்களையேவீடென்று சொல்லுகிறார்கள். காலத்தினால் அவைகள் சேர்க்கப்படுகின்றன. பிரிக்கவும்படுகின்றன. * லிங்கசரீரம் ஒன்றே மங்களகரமானது. எவ்வாறு மனிதன் பழைய வஸ்திரத்தையோ புதிய வஸ்திரத்தையோ விட்டுவிட்டு வேறொரு வஸ்திரத்தை விரும்புகின்

ஞானேந்திரியம் ரு, கர்மேந்திரியம் ரு, ப்ராணன் ரு, மனம் க; ஆக கசு.

ருனே சரீரிகளுக்குச் சரீரங்களும் அவ்வாறே ஆகின்றன. விசித்ர வீர்யருடைய குமாரரே! இவ்வுலகில் உண்மையாகவே பிராணிகள் தம்மால் செய்யப்பட்ட வினையினாலேயே துக்கத்தையோ, ஸுகத்தையோ அடைகின்றன. பரதவம்சத்தில் பிறந்தவரே! கர்மத்தினால் ஸ்வர்க்கமும் ஸுகமும் துக்கமும் அடையப்படுகின்றன. ஒருவன் ஸ்வதந்திரமில்லாதவனாகவோ ஸ்வதந்திரமுள்ளவனாகவோ இருந்து கொண்டு அதனால் அந்த (அனுபவமாகிய) பாரத்தைத் தாங்குகிறான். ப்பாரதரே! எவ்வாறு மண்பாண்டமானது சக்ரத்தில் ஏறியிருக்கும்பொழுதோ, அல்லது பாத்திரமாகச் செய்யப்படும்பொழுதோ, அல்லது செய்யப்பட்டவுடனேயோ, குறைவாயிருக்கும்பொழுதோ, (சக்ரத்தினின்று) இறக்கவேண்டியபொழுதோ, அல்லது இறக்கினபிறகோ, அல்லது ஈரமாயிருக்கும்பொழுதோ, உலர்ந்திருக்கும்பொழுதோ, அல்லது (சூளையில்) சுடப்படும்பொழுதோ, எடுக்கப்படும்பொழுதோ, வைக்கப்படும்பொழுதோ, அல்லது ஆளப்படும்பொழுதோ நாசத்தைஅடைகின்றதோ, அவ்வாறே சரீரிகளுடைய சரீரங்கள் நாசமடைகின்றன. மனிதன் கர்ப்பத்திலிருக்கும்பொழுதோ, பிறந்தவுடனேயோ, அல்லது பத்துநாள்சென்றோ, அரைமாதம்சென்றோ, அல்லது ஒருமாதமாவது ஒருவருஷமாவது இரண்டு வருஷங்களாவது கழிந்தோ, யௌவனத்திலோ, நடுவயதிலோ, கிழத்தனத்திலோ நாசமடைகிறான். பிராணிகள் முன்செய்தவினைகளால் உண்டாகின்றன; அழிகின்றன. இவ்வாறு விருத்திபண்ணப்பட்டிருக்கின்ற உலகத்தின் விஷயத்தில் நீர் ஏன் அனுதாபப்படுகின்றீர்? அரசரே! விளையாட்டுக்காக ஜலத்தில்செல்லுகின்றவன் எவ்வாறு மேலேஎழுந்திருப்பனோ, மூழ்குவனோ, நீந்துவனோ அவ்வாறே ஆழ்ந்தஸம்ஸாரமாகிறகடலில் மேலே எழுந்திருத்தலும் கீழே அமிழ்தலும் உண்டாகின்றன. அல்பபுத்தியுள்ளவர்கள் கர்மபந்தத்தால் கட்டப்படுகிறார்கள்; துன்பப்படுத்தப்படுகிறார்கள். பிராணிகளுடைய சேர்க்கையை அறிந்தவர்களான எந்தப்புத்திமான்கள் பிறப்பிறப்புக்களுடைய முடிவைஅடைய எண்ணம் கொண்டவர்களாக நடுவில் நிற்கின்றார்களோ அவர்கள் உத்தமகதியை அடைகின்றார்கள்" என்று கூறினார்.

## நான்காவது அத்யாயம்.

## ஜலப்ராதானிகபர்வம். (தொடர்ச்சி.)

(விதுரர் ஜீவன் கர்ப்பத்தில்வாஸம்செய்கின்றவிதத்தைக் கூறியது.)

திருதராஷ்டிரன், "பேசுகிறவர்களுள் சிறந்தவனே! ஸம்ஸாரமாகிற *காடானது எவ்வித ஸ்வபாவமுள்ளதென்று அறியத்தக்கது? நான் இதைக்கேட்க விரும்புகின்றேன். வினவுகின்ற எனக்கு உண்மையை உரைப்பாயாக" என்று வினவ, விதுரர் சொல்லலானார். 'ஜீவன் உத்பத்திதினம்தொடங்கிப் பிராணிகளுடைய எல்லாச்செய்கைகளையும் காண்பவனாகி இவ்வுலகில் முதலில் சுக்லசோணிதத்தில் வாஸம்செய்கிறான்; பிறகு, முந்தினதினத்தைக்காட்டிலும் விருத்திநிலைமையினால் ஒருவிதமான பரிணாமத்தைப் பெறுகின்றான். பிறகு, அவன் ஐந்தாவதுமாதம் சென்றவுடன், மாம்ஸத்தை ஏற்படுத்திக்கொள்ளுகிறான். பிறகு, அடுத்த மாதத்தில் கர்ப்பமாகிய ஜீவன் ஸர்வாங்கங்களாலும் நிறைந்தவனாகின்றான். மாம்ஸரக்தங்களுடைய பூச்சாகிற அசுத்தத்தினிடையில் வாஸம்பண்ணுகின்றான். பிறகு, அந்த ஜீவன் வாயுவேகத்தினால் கால்மேலாகவும் தலைகீழாகவும் யோனித்வாரத்தை அடைந்து அநேகங்லேசங்களை அடைகின்றான். முன் செய்த வினைகளுடன்கூடின அந்தஜீவன் அந்தயோனியினால் நெருக்கப்படுகிற உபத்திரவத்தினின்று விடுபட்டுப் பிறப்பை அடைந்து வேறுஉபத்திரவங்களைப் பார்க்கிறான். நாய்கள் மாம்ஸத்தைத் தொடருவதுபோலக்கிரகபீடைகள் அவனைத்தொடர்கின்றன. பிறகு, வேறு காலம் வரும்போது, தன்னுடைய வினைகளாலே துன்பப்படுகின்றவனாக ஜீவித்துக்கொண்டிருக்கின்ற அந்தஜீவனை அவ்வாறே வியாதிகளும் அணுகுகின்றன. நராதிபரே! இந்திரியங்களாகிய கயிறுகளால் கட்டப்பட்டவனும் ஸங்கத்தில் விருப்பமுள்ளவனும் நோயுள்ளவனுமான அந்தஜீவனைப் பற்பலவிசனங்கள் தொடருகின்றன. மீண்டும் அந்தவிசனங்களால் துன்பப்படுத்தப்படுகின்ற அந்தஜீவன் திருப்தியடைகின்றதேயில்லை. அப்பொழுது அந்தஜீவன் தானசெய்கிறதை நல்லதென்றாவது கெட்டதென்றாவது அறிகிறதில்லை. †தியானயோகத்திலிருப்பவர்கள் தம்மைக் காப்பாற்றிக்கொள்ளுகிறார்கள்; இவனோ யமலோகம் ஸமீபிப்பதை அறிகிறதில்லை.' முடிவுக்காலத்தில் யமதூதர்களால் இழுக்கப்பட்டு மாணத்தை அடைகிறான்

* 'கஹனம்' என்பது மூலம். 'கடல்' என்றும் பொருளுண்டு.
† வேறுபாடம்.

இந்திரியங்களின் செய்கைகளற்றவனாக (தன்) புண்யபாபங்களுக்கேற்ற விஷயத்தை அனுபவிக்கிறான். இங்ஙனம் அனுபவிக்கும்பொழுது அந்தஜீவன் மறுபடியுமே தான் கர்மபந்தங்களால் கட்டப்படுவதை *அலக்ஷியஞ்செய்கிறான். அந்தோ! உலகமானது அதிகமாக வஞ்சிக்கப்பட்டிருக்கிறது; பேராசையினாலும் வசப்படுத்தப்பட்டிருக்கிறது; பேராசையினாலும் க்ரோதத்தினாலும் மதத்தினாலும் பயித்தியம்கொண்டு தன்னைத்தெரிந்துகொள்ளுகிறதில்லை. நற்குலத்தில் பிறந்தவன் இழிகுலத்தில் பிறந்தவர்களை நிந்தித்துக்கொண்டு ஆனந்தப்படுகிறான். தனமதத்தினால் கர்வம் கொண்டவன் தரித்திரர்களை நிந்தித்துப் பிறரை மூர்க்கர் என்று சொல்லுகிறான். தன்னை நன்றாகப் பார்க்கிறதில்லை. பிறர்மீது தோஷங்களை ஆரோபணம்செய்கிறான். தன்னை அடக்கிஆண்டுகொள்வதற்கு விரும்புகிறதில்லை. கற்றறிந்தவர்களோ, மூர்க்கர்களோ, தனிகர்களோ, தரித்திரர்களோ, குலீனர்களோ, இழிகுலத்தார்களோ, மானிகளோ, மானமில்லாதவர்களோ எல்லாரும் எப்பொழுது உயிரை இழந்து இடுகாட்டை அடைந்து மாம்ஸமற்றவைகளும் எலும்புகள் மிகுந்தவைகளும் நரம்புகளால் கட்டப்பட்டவைகளுமான தேகங்களுடன் உறங்குகின்றார்களோ அச்சமயத்தில் மற்ற ஜனங்கள், அவர்களின் விஷயத்தில் குலரூபவித்யாஸங்களைத் தெரிந்துகொள்ளக்கூடிய என்ன விசேஷத்தைக் காண்கிறார்கள்? எல்லாரும் பூமியில் ஸமமாகவே வைக்கப்பட்டு உறங்குகின்றார்களாதலால், இவ்வுலகத்தில் அறிவீனர்கள் ஏன் ஒருவரையொருவர் வஞ்சிப்பதற்கு விரும்புகின்றார்கள்? எவன் வெளிப்படையாயும் மறைவாயுமுள்ள இந்தஸ்ருதியைக்கேட்டு நிலையற்றதான இந்த ஜீவலோகத்தில் பிறந்தது முதல் தர்மத்தை ரக்ஷித்துக்கொண்டிருப்பனோ அவன் உத்தமகதியை அடைகிறான். மனிதர்களுக்கு நாதரே! எவன் இவ்வண்ணம் எல்லாவற்றையும்அறிந்து தத்வத்தை அனுஸரிக்கிறானோ அவன் (ஸம்ஸார) வழியினின்று (தன்னை) விடுவித்துக்கொள்ளுகிறான்" என்று கூறினார்.

---

வேறுபாடம்.

## ஐந்தாவது அத்யாயம்.

## ஜலப்ரதானிகபர்வம். (தொடர்ச்சி.)

(விதுரர் ஸம்ஸாரமுதலானவைகளைக் காடுமுதலானவைகளாக நிரூபித்தது.)

திருதராஷ்டிரன், "அறியமுடியாத தர்மத்தை நன்றாக அறியக் கூடிய இந்தப் புத்திமார்க்கம்அனைத்தையும் எனக்கு விரிவாகஉரைப் பாயாக" என்றுவினவ, விதுரர் சொல்லலானார்.

"பரமரிஷிகள் ஸம்ஸாரமாகிறகாட்டை எவ்வாறிருப்பதாகச் சொல்லுகிறார்களென்பதை ஸ்வயம்புவான பரமாத்மாவை நமஸ் கரித்து இந்தச்சமயத்தில் உமக்கு உரைக்கப்போகிறேன். பெருங் காட்டிலிருக்கின்ற ஒரு பிராம்மணன், எளிதில் பிரவேசிக்கமுடியாத தும் மாம்ஸாசிகளால் நிறைந்ததுமான மற்றொரு பெருங்காட்டை அடைந்தானாம். அதிகோரமான பேரொலியுள்ளவைகளும் ஊனுண் பவைகளும் அதிபயங்கரமாக இருப்பவைகளும் அதிகஉக்கிரமான வடிவமுள்ளவைகளுமான ஸிம்மம் புலி யானை கரடிகளுடைய கூட் டங்களால் நாற்புறங்களிலும் சூழப்பட்ட அந்தக்காடானது பார்ப் பதற்கு மிக்கபயங்கரமாக இருந்ததனால் அதைக்கண்டு அந்தப் பிராம் மணனுடைய உள்ளமானது அதிக பயத்தைஅடைந்தது. சத்துருக் களைத் தவிக்கச்செய்பவரே! ரோமங்கள் சிலிர்த்தன; விகாரங்களும் உண்டாயின. அவன் எவ்விடத்தில் ரக்ஷணம்உண்டாகுமென்று எல்லாத்திசைகளையும் நோக்கி இங்குமங்கும் ஓடி அந்தவனத்தில் திரிந்தான். அவன் பயத்தினால் பீடிக்கப்பட்டு அவைகளுடைய நாசத் தைவிரும்பி விரைவாகஓடினான். நெடுந்தூரம் விலகிச் செல்லவு மில்லை. அவைகளால் பிரிக்கப்படவுமில்லை. பிறகு, அதிகோரரூபி யான ஒரு ஸ்திரீயினால் இருகைகளாலும் கட்டப்பட்டவனான அந்தப் பிராம்மணன், மறைந்ததும் நான்குபக்கங்களிலும் வலைகளால் மூடப் பட்டதும் மலைகள்போல் உன்னதமான ஐந்துதலைநாகங்களாலும் ஆகாயத்தைத் தொட்டுக்கொண்டிருக்கிற பெரியவிருக்ஷங்களாலும் நாற்புறங்களிலும்சூழப்பட்டதுமான ஒருபெருங்காட்டைக்கண்டான். அந்தக்காட்டின்நடுவில் புற்களால் சூழப்பட்டவைகளும் மறைந்த வைகளுமான கொடிகளால் நாற்புறமும்சூழ்ந்து மூடப்பட்ட ஒரு கிணறுஇருந்தது. மறைந்திருந்த அந்தக்கிணற்றில் அந்தப்பிராம் மணன் விழுந்தான். அதில்தொங்குகிற நெருங்கிய கொடிகளுடைய

கூட்டத்தில் அவன் தொற்றிக்கொண்டவனானான். அவன் அந்தக் கிணற்றில் கால்மேலாகவும் தலைகீழாகவும் காம்பினால் தாங்கப்பட்ட பெரிய பலாப்பழம்போலத் தொங்கினான். மேலும், அந்த இடத்திலும் அவனுக்கு மீண்டும் வேறு உபத்திரவம் உண்டாயிற்று. அவன் கிணற்றின் நடுவில் மஹாபலமுள்ள ஒருபெரிய ஸர்ப்பத்தைக் கண்டான். கிணற்றினுடைய தலைக்கட்டில் ஆறுமுகமுள்ளதும் கறுப்பு மேலிட்ட பலநிறமுள்ளதும் பன்னிரண்டுகால்களால் ஸஞ்சரிக்கின்றதும் கொடிகளாலும் விருக்ஷங்களாலும் நன்றாக மூடப்பட்டதும் அடைவிலே நான்குபக்கங்களிலும் ஸஞ்சரிக்கின்றதுமான பெரிய யானையைக் கண்டான். அந்தப்பிராம்மணன் அந்தமரத்தினுடைய கிளையைப் பிடித்துக்கொண்டு தொங்குகிறபோது அந்தமரத்தினுடைய பெருங்கிளைகளிலும் சிறுகிளைகளிலும் பற்பலரூபமுள்ளவைகளும் கோரரூபமுள்ளவைகளும் பயங்கரமாயிருப்பவைகளும் முன்பே அந்த வாஸஸ்தானத்திலுண்டானவைகளுமான வண்டுகள் தேனைச் சூழ்ந்து மொய்த்துக்கொண்டிருந்தன. பரதர்களுள் சிறந்தவரே! ஒரு பாலன் குடித்துப் போதுமென்று திருப்தியடையாதவையும் பிராணிகள் குடிக்கத்தக்கவையுமான அந்தத்தேனை மறுபடியும் மறுபடியும் அவைகள் விரும்பின. அப்பொழுது அந்தத் தேனினுடைய தாரையானது பலவாறாகப் பெருகிக்கொண்டிருந்தது. தொங்குகின்ற அந்த மனிதன் எப்பொழுதும் அந்தமதுத்தாரையைக் குடிக்கலானான். ஸங்கடத்திலிருந்துகொண்டு மதுவைக்குடிக்கின்ற அந்தமனிதனுடைய தாகமானது ஒழியவுமில்லை. அவன் நித்யம் திருப்தியடையாதவனாக மறுபடியும் மறுபடியும் அந்த மதுத்தாரையை அடைவதற்கு விரும்பினான். அரசரே! அவனுக்கு உயிரில் வெறுப்பு உண்டாகவில்லை. மனிதனுக்கு அந்தஸ்திதியிலும் உயிரில் ஆசையானது நிலைபெற்றிருந்தது. கறுப்பாகவும் வெளுப்பாகவுமிருக்கிற எலிகள் அந்த விருக்ஷத்தின்வேர்களை அறுக்கின்றன. துஷ்டமிருகங்களிருப்பதனாலும் மிக்க உக்கிரரூபமுள்ள ஸ்திரீயிருப்பதனாலும் அந்தக்காட்டானது உள்ளேசெல்ல முடியாததாக இருந்தது. கிணற்றின்கீழே ஸர்ப்பத்தினாலும் கிணற்றின்மேலே யானையினாலும் பயமிருப்பதுடன் மரம் விழுவதினின்றும் பயமுண்டாயிற்று. (விருக்ஷத்தினுடைய வேரைப்பறிக்கின்ற) எலிகளிடத்தினின்றும் ஐந்தாவது பயம் ஏற்பட்டது. மதுவினிடம் ஆசையினால் 'தேனீக்களால் ஆறாவதான மஹாபயமும் அவனுக்கு ஏற்பட்டதாகச் சொல்லுகிறார்கள். இவ்வண்ணமாக அவன் அந்த ஸம்ஸாரமாகிற ஸாகரத்தில் தள்ளப்பட்டவனாக வஸிக்கிறான். உயிர்வாழும் ஆசையில் வெறுப்பை அடையவில்லை' என்று கூறினார்.

## ஆறுவது அத்யாயம்.

## ஜலப்ரதானிகபர்வம். (தொடர்ச்சி.)

(விதுரர் முன்சொல்லிய காடுமுதலியவற்றை விளக்கியது.)

திருதராஷ்டிரன், "சொல்லுகிறவர்களுள் சிறந்தவனே! அந்தோ! மஹாதுக்கமன்றோ? அவன் கஷ்டமான இடத்தில் வாஸம் செய்கிறான். அவனுக்கு எவ்வாறு அந்தவாஸத்தில் பிரீதியாவது ஸந்தோஷமாவது உண்டாகும்? அவன் வாஸம்செய்கிற இடமாகிய தர்மஸங்கடமான அந்தத்தேசம் எங்கே இருக்கிறது? அந்தமனிதன் அந்த மஹாபயத்தினின்று எவ்வாறு விடப்படுவான்? இவை அனைத்தையும் எனக்கு உரைப்பாயாக. அப்பொழுது அவற்றுக்குத் தக்கதைச் செய்வோம். ஏனெனில், அவனை மேலே எடுத்து விடுவதில் எனக்கு மிக்க கருணை உண்டாயிருக்கிறது" என்று சொல்ல, விதுரர் கூறலானார்.

"அரசரே! இந்த உபாக்கியானமானது மோக்ஷத்தை அறிந்தவர்களால் கூறப்பட்டது. இதனால் மனிதன் பரலோகங்களில் நல்லகதியை அடைகிறான். எது அரண்யமென்று சொல்லப்படுகிறதோ அதுபெரிய (பிறப்பும் இறப்புமாகிய) ஸம்ஸாரமே. பிரவேசிக்க முடியாத (மற்றோர்) அரண்யமென்பது பிரவேசிக்கமுடியாத இந்த ஸம்ஸாரமே. அந்தத் துஷ்டமிருகங்களென்று சொல்லப்பட்டவைகள் வியாதிகளென்று சொல்லப்படுகின்றன. அந்தக்காட்டில் பெரிய தேகத்துடன் வாஸம்செய்கிற பெண்ணை ரூபத்தையும் நிறத்தையும் நாசம்செய்கின்ற ஜரையென்று கற்றுணர்ந்தவர்கள் சொல்லுகின்றனர். அரசரே! அந்தக் கிணறென்பது சரீரிகளுடைய சரீரம். அதில் கீழே வஸிக்கின்ற பெரும்பாம்பு காலனே. அவன் தேகமெடுத்த எல்லாப் பிராணிகளுடைய பிராணனையும் வாங்குகிற அந்தகன். கிணற்றின் மத்தியில் எந்தக்கொடி தோன்றுகிறதோ, எதில் அந்தமனிதன் மாட்டிக்கொண்டானோ, எதனால் அவன் பிடிப்புள்ளவனானானோ அது சரீரிகளுக்கு உயிர்வாழ்வதிலிருக்கும் ஆசை. மன்னரே! கிணற்றின் தலைக் கட்டில் ஆறுமுகங்களுள்ள அப்படிப்பட்ட எந்தயானை அங்குள்ள மரத்தை நாற்புறங்களிலும் சுற்றிவருகிறதோ அது ஸம்வத்ஸரமென்று எண்ணப்பட்டிருக்கிறது. ருதுக்கள் முகங்களென்றும் மாஸங்கள் பன்னிரண்டுகால்களென்றும் கூறப்பட்டன. எந்த எலிகளும் அவ்வாறே *ஸர்ப்பங்களும் மரத்தின் வேரை அறுக்கின்றனவோ அவைகளைப்

---

* இவை முன் அத்யாயத்தில் கூறப்படவில்லை.

 U. V. SWAMINATHAIYAR TIRUVANMIYUR. MADRAS

பிராணிகளைப்பற்றி நன்கு ஆராய்பவர்கள் இரவென்றும் பகலென்றும் கூறுகிறார்கள். அந்தமரத்திலுள்ள தேனீக்கள் காமங்களென்று கூறப்படுகின்றன. மதுவினிடத்தினின்று பலவாறு பெருகுகின்ற அந்தத் தாரைகளைக் காமச்சுவையென்று அறியவேண்டும். அதில் மனிதர்கள் பற்றுதலுள்ளவர்களாயிருக்கிறார்கள். அறிஞர்கள் ஸம்ஸார சக்ரத்தினுடைய சுழற்சியை இவ்வாறு அறிகிறார்கள். அப்படி அறிவதனால் ஸம்ஸார சக்ரத்தினுடைய பாசங்களை எல்லாவிதத்திலும் அறுக்கிறார்கள்" என்று கூறினார்.

---

## ஏழாவது அத்யாயம்.

## ஜலப்ரதாநிகபர்வம். (தொடர்ச்சி.)

(விதுரர் தத்வத்தை உரைத்தது.)

திருதராஷ்டிரன், "ஆச்சரியம்! தத்வதர்சியான உன்னால் இந்தக்கதை கூறப்பட்டது. உன்னுடையவாக்காகிற அமிருதத்தைக்கேட்க மறுபடியுமே எனக்கு ஆவலுண்டாகிறது" என்று சொல்ல, விதுரர் சொல்லலானார்.

"எதைக் கேட்பதினால் ஸமர்த்தர்கள் ஸம்ஸாரத்தினின்று விடப்படுகிறார்களோ அப்படிப்பட்ட இந்தமார்க்கத்தினுடைய விஸ்தாரத்தை மீண்டும் உரைப்பேன்; கேளும். அரசரே! பாரதரே! நீளமான வழியையடைந்த மனிதன் எவ்வாறு ஒவ்வோரிடத்தில் இளைப்பாறுவதற்கு ஸ்தானத்தையோ வாஸத்தையோ ஏற்படுத்திக் கொள்ளுகிறானோ அவ்வாறாக அறிவிலிகள் ஸம்ஸார பரம்பரையில் கர்ப்பவாஸங்களில் வாஸஞ்செய்கின்றார்கள். பண்டிதர்கள் அதினின்று விடப்படுகின்றார்கள். ஆதலால், சாஸ்திரத்தைஅறிந்த ஜனங்கள் இதை வழியாகவேசொல்லுகிறார்கள். ப்ரவேசிக்கமுடியாததான ஸம்ஸாரமென்பதை வித்வான்கள் வனமென்று கூறுகின்றார்கள். பரதர்களுள் சிறந்தவரே! அழியத்தக்க ஜங்கமங்களுக்கும் ஸ்தாவரங்களுக்கும் அப்படிப்பட்ட இந்த உலகமென்பது நல்ல ஒரு நீர்ச்சுழல். பண்டிதன் அதில் ஆசைப்படலாகாது. மனிதர்களுக்குச் சரீரங்களையும் மனங்களையும் உடுத்துப் பிரத்யக்ஷமாகவும் மறைவாகவுமுள்ள வியாதிகள் பண்டிதர்களால் கொடியமிருகங்களென்று சொல்லப்படுகின்றன. பாரதரே! தங்களுடையவினைகளாகிற அந்தப்பெரிய துஷ்டமிருகங்களால் நித்யம் துன்பப்படுத்தப்படுகின்றவர்களும் மாண்டு

போகும்படி செய்யப்படுகின்றவர்களுமான அல்பபுத்தியுள்ளவர்கள் வெறுப்பை அடைகிறார்களில்லை. ஜனநாதரே! அந்தவியாதிகளால் விடப்பட்டாலும், பற்பலசப்தங்களாலும் ரூபங்களாலும் ரஸங்களாலும் ஸ்பர்சங்களாலும் கந்தங்களாலும் நான்குபக்கத்திலும் பிடிப்பில்லாத பெரியசேற்றில் முழுகுகின்ற அந்தமனிதனைப் பிறகு அழகைச்சிதைக்கின்ற முதுமையானது மூடவேமூடுகிறது. ஸம்வத்ஸரங்களும் ருதுக்களும் மாஸங்களும் பக்ஷங்களும் பகலிரவுகளின் ஸந்திகளும் இவனுடைய உருவத்தையும் அவ்வாறே ஆயுளையும் நாள் அடைவில் கவர்ந்துகொள்ளுகின்றன. இவைகள் காலத்தினுடையவிதிகள். கற்றறியாதவர்கள் இவற்றை அறியார்கள். எல்லாப்பிராணிகளையும் பிரம்மதேவரால் கர்மத்தினால் எழுதப்பட்டவைகளாகச் சொல்லுகிறார்கள். பிராணிகளுக்குச் சரீரம் ரதம் என்றும் புத்தி சாரதியென்றும் சொல்லுகிறார்கள். இந்திரியங்களைக் குதிரைகளென்றும் மனத்தைக் கடிவாளங்களென்றும் கூறுகின்றனர். எவன் ஓடுகின்ற அந்தக்குதிரைகளுடையவேகத்தை அனுஸரித்து ஓடுகிறானோ அவனே இந்த ஸம்ஸாரசக்ரத்தில் சக்கரம்போலச் சுழலுகிறான். எவன் அவைகளைப் புத்தியினால் அடக்குகிறானோ அடக்கின அவன் திரும்புகிறதில்லை. எவர்கள் வட்டமாகச்சுழலுகிற ஸம்ஸார சக்ரத்தில் சுழன்றுகொண்டிருந்தாலும் மயங்குவதில்லையோ அவர்கள் மறுபடியும் சுழலுவதில்லை. அரசரே! ஸம்ஸாரத்தில் பிரமிக்கின்றவர்களுக்கு இந்தத்துக்கம் உண்டாகிறதன்றோ? ஆகையால், இதை நிவிர்த்திப்பதற்காகக் கற்றுணர்ந்தவன் முயற்சியைச்செய்யவேண்டும். இதில் உபேக்ஷை செய்யவேகூடாது. இது நாலுகிளைகளுள்ளதாக வளர்கிறது. அரசரே! எந்த மனிதன் இந்திரியங்களை அடக்கினவனாகவும் குரோதத்தினாலும் லோபத்தினாலும் விடுபட்டவனாகவும் ஸந்தோஷமுள்ளவனாகவும் உண்மைபேசுகிறவனாகவும் இருக்கிறானோ அவன் சாந்தியை அடைகிறான். வேந்தரே! எதனால் துர்ப்புத்தியுள்ளவர்கள் மோகிக்கிறார்களோ அதனை யமனுடைய ரதமென்று சொல்லுகிறார்கள். நராதிபரே! நீர் எதை அடைந்திருக்கிறீரோ அதை அவனும் அடைவான். பெரியவரே! இந்தத்துக்கமானது ஆசையை இயற்கையாகக்கொண்டிருக்கிறது. பாரதரே! ராஜ்யம் நண்பர்கள் புத்திரர்கள் இவர்களுடைய நாசமானது மிக்க துக்கங்களுக்கு காரணம். ஸாதுவானவன் பெருந்துக்கங்களுக்கு மருந்தைத்தேடத் தொடங்கவேண்டும். இவ்வுலகில் மனத்தையடக்கியமனிதன் (ஸாமா

வேறுபாடம்.

னியர்களுக்கு எட்டாத பிரம்மமாகிற) லக்ஷ்யத்தையுடைய ஞானமாகிறபெருமருந்தைப் பெற்றுத் துக்கமாகிறபெரியநோயைப் போக்க வேண்டும். உறுதியான நிச்சயங்கொண்ட மனம் (மனிதனை) அந்தத் துக்கத்தினின்று விடுவிப்பதுபோல வல்லமையாவது பொருளாவது மித்ரனாவது ஸுஹ்ருத்ஜனமாவது விடுவிக்காது. பாரதரே! ஆகையால், ஆபத்தில் நட்பென்னும் சீலத்தை அடைந்து மனத்தை, அடக்குதல், விடுவது, ஜாக்ரதை இம்மூன்றும் பிரம்மலோகத்தை அடையும்படி செய்கின்ற குதிரைகள். அரசரே! எவன் சீலமாகிறகடிவாளத்தோடுகூடின மனமாகிறரதத்தில் நிலை பெறுகிறானோ அவன் ம்ருத்யுபயத்தைவிட்டுப் பிரம்மலோகத்தை அடைகிறான். அரசரே! எவன் எல்லாப்பிராணிகளுக்கும் அபயத்தைக்கொடுக்கிறானோ அவன் அழிவற்ற விஷ்ணுவினுடைய உத்தமமானஸ்தானத்தை அடைகிறான். அபயம்கொடுப்பதினால் எந்தப் பலனை மனிதன் அடைகிறானோ அது ஆயிரம்யாகங்களாலும் உண்டாகாது; நித்யமான உபவாஸங்களாலும் உண்டாகாது. பாரதரே! பிராணிகளுக்கு ஆத்மாவைக்காட்டிலும் மிக்கபிரியமானது வேறொன்றுமில்லையென்பது நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. மரணமென்பது எல்லாப்பிராணிகளுக்கும் வெறுப்பானதன்றோ? ஆதலால், பண்டிதன் எல்லாப்பிராணிகளிடத்திலும் தயை பாராட்டவேண்டும். பற்பல உபாயங்களோடு கூடியவர்களும் புத்தியாகிறவலையினால் சுற்றப்பட்டவர்களும் ஸூக்ஷ்மத்ருஷ்டி இல்லாதவர்களுமான மந்தர்கள் ஆங்காங்கு பிரமிக்கின்றார்களன்றோ? அரசரே! மிக்க ஸூக்ஷ்மத்ருஷ்டியுள்ளவர்கள் பிரம்மஸாம்யத்தைஅடைகிறார்கள். பேரறிவாளரே! அப்படிப்பட்ட நீர் இவ்வண்ணமறிந்து அவர்களுக்குப் பரலோக ஸாதகமான உத்தரகிரியைகளைச் செய்யக்கடவீர். நீர் அதனாலேயே பலத்தைஅடைவீர்" என்று கூறினார்.

---

## எட்டாவது அத்யாயம்.

## ஜலப்ரதானிகபர்வம். (தொடர்ச்சி.)

(வியாஸர் திருதராஷ்டிரனுடைய சோகத்தை விலக்கியது.)

குருசிரேஷ்டனான திருதராஷ்டிரன், விதுரருடைய அந்த வாக்கியத்தைக்கேட்டுப், புத்திரசோகத்தினால் நான்குபக்கத்திலும் வாட்டப்பட்டவனாக மூர்ச்சைஅடைந்து பூமியில் விழுந்தான். பாரதரே! அவ்வாறு பிரஜ்ஞையைஇழந்து பூமியில் விழுந்திருக்கின்ற

அந்த அரசனைப்பார்த்துப் பந்துக்களும் வியாஸரும் அவ்வாறே ஸூத ஜாதியைச்சார்ந்த விதுரரும் ஸஞ்சயனும் மற்ற ஸுஹ்ருத்துக்களும் இவருக்கு இஷ்டர்களான துவாரபாலகர்களும் ஸுகமாகவும் சீதமாகவுமிருக்கின்ற ஜலத்தினால் (கண்களையும் முகத்தையும் துடைத்து) விசிறிகளால் யத்தினத்தினால் வீசுகின்றவர்களாகக் கைகளால் சரீரத்தைத் தொட்டார்கள். அந்தநிலைமையிலிருக்கின்ற திருதராஷ்டிரனை நெடுநேரம் உபசரித்துக்கொண்டிருந்தார்கள். பிறகு, அரசன், நெடுநேரஞ்சென்று பிரஜ்ஞையையடைந்து புத்திரர்கள்விஷயமான மனோவியாதிகளால் மூடப்பட்டவனாக, "மனுஷ்யத்தன்மை நிந்திக்கத் தக்கது. மனிதப்பிறப்பிலும் எதன்மூலமாக அடிக்கடி துக்கங்கள் உண்டாகின்றனவோ அந்தப் புத்திரமித்திரகளத்திராதி *பரிக்ரஹத்தையும் நிந்திக்கவேண்டும். பிரபுவே! மித்திரநாசத்திலும் அர்த்த நாசத்திலும் ஞாதிகள் பந்துக்கள் இவர்களின் நாசத்திலும் விஷத்துக்கும் நெருப்புக்கும்ஒப்பான மிகப்பெரிதான துக்கம் அடையப் படுகிறது. எதனால் அங்கங்கள் எரிக்கப்படுகின்றனவோ, எதனால் பிரஜ்ஞை அழிகிறதோ, மனிதன் எதனால் அவமதிக்கப்பட்டவனாக மரணத்தை அடைகிறானோ அந்த மரணசாதனமான இந்தத்துக்கம் பாக்கியத்தின் மாறுபாட்டத்தால் என்னாலடையப்பட்டது. பிராணனை விடுவதைத் தவிர (வேறுவிதத்தினால்) அதனுடையமுடிவை அறிகிறேனில்லை. பிராம்மணோத்தமரே! நான் அதையும் இப்பொழுதே செய்யப்போகிறேன்" என்று நெடுநேரம் புலம்பினான். அந்தத்திருதராஷ்டிரன், மஹாத்மாவும் பிரம்மவித்துக்களுள் சிறந்தவருமான பிதாவைப்பார்த்து இவ்வண்ணமுரைத்து மயக்கமடைந்தான்; அதிக சோகத்தையும் அடைந்தான். பூமிக்குநாதனான அந்தஅரசன் சிந்தித்துக்கொண்டு பேசாமலிருந்தான். பிரபுவான வியாஸர் அந்த அரசனுடைய அந்தவசனத்தைக்கேட்டுப் புத்திரசோகத்தினால் பீடிக்கப் பட்டிருக்கிற புத்திரனைப்பார்த்து ஒருவசனத்தை உரைக்கலானார்.

"திருதராஷ்டிர! நீண்ட கைகளையுடையவனே! அருமைப்புதல்வா! சொல்வேன்; கேள். பிரபுவே! சாஸ்திரங்களை உணர்ந்தவனும் மேதாவியும் தர்மங்களிலும் அர்த்தங்களிலும் ஸமர்த்தனுமாயிருக்கிறாய். பகைவர்களைத் தவிக்கச்செய்பவனே! உனக்குத் தெரியாமலிருந்து (இனி) தெரிந்துகொள்ளவேண்டியது ஒன்றுமில்லை. பிராணிகள் அநித்யமானவை என்பதை அறிந்திருக்கிறாய். ஸம்சயமில்லை. அருமைமைந்தனே! ஜீவலோகம் நிலையற்றதாகவும்

* தமரென்னும் பற்று.

(பரலோகத்தில்) ஸ்தானமானது நிலைத்ததாகவும் உயிர் மரணத்தை முடிவாகக்கொண்டதாகவும் இருக்கும்பொழுது, ஏன் வியஸனிக்கிறாய். ராஜேந்திர! இந்தவைரம் உண்டானது உனக்கு நேரில் தெரிந்ததே; உன்னுடைய புத்திரனைக் காரணமாகக்கொண்டு காலத்தின்சேர்க்கையால்உண்டுபண்ணப்பட்டது. அரசனே! கௌரவர்களுக்கு க்ஷயமானது அவசியமாக உண்டாகத்தக்கதாக இருக்கும் ஸமயத்தில் உத்தமகதியை அடைந்த அந்தச்சூரர்களைப்பற்றி யாது காரணத்தினால் துக்கப்படுகிறாய்? மஹாபாகுபலமுள்ளவனே! ஜனநாதனே! அறிந்தவனும் மஹாத்மாவுமான விதுரனால் (வைரத்தை) தணித்தலைப்பற்றி எல்லாவிதத்தினாலும் முயற்சிசெய்யப்பட்டது. நெடுங்காலம் முயன்றுங்கூட ஒருபிராணியினாலும் தெய்வத்தினால் உண்டுபண்ணப்பட்ட வழியானது அடக்குவதற்கு ஸாத்யப்படாது என்பது என்னுடைய எண்ணம். தேவதைகளுடைய எந்தக்காரியம் நேரில் என்னால் கேட்கப்பட்டிருக்கிறதோ அதை உனக்கு மனத்தேறுதலுக்காக நான் உரைப்பேன். நான் முற்காலத்தில் சிரமமில்லாதவனாக நான்குபக்கங்களிலும் ஸஞ்சரித்துக்கொண்டு இந்திரஸபையை அடைந்தேன். அவ்விடத்தில் எப்பொழுதும் ஒன்றுசேர்ந்திருந்த தேவர்களையும் நாரதனை முதன்மையாகக்கொண்ட சிறந்த எல்லாத்தேவரிஷிகளையும் கண்டேன். பூமிக்கு நாதனே! காரியத்துக்காகத் தேவதைகளுடைய ஸமீபத்தில் வந்திருந்த பூமியையும் நான் அந்த இடத்தில் பார்த்தேன். அப்பொழுது பூமியானவள், ஒன்றுகூடியிருக்கின்ற தேவர்களிடம்போய், 'மஹாபாக்கியசாலிகளே! அப்பொழுது பிரம்மதேவருடைய கிருஹத்தில் நீங்கள் எனக்குப் பிரதிஞ்ஜை செய்தகாரியத்தைச் சீக்கிரம் செய்யவேண்டும்' என்று சொன்னாள். அவளுடைய அந்தவசனத்தைக்கேட்டு லோகங்களால் நமஸ்கரிக்கப்பட்டவரும் பிரபுவுமான விஷ்ணுவானவர் சிரித்துக்கொண்டு தேவஸபையில் அந்தப் பூமியைப்பார்த்து, 'திருதராஷ்டிரனுடைய நூறுபிள்ளைகளுள் எவன் மூத்தவனாகவும் துர்யோதனனென்று பிரஸித்தனாகவும் இருக்கிறானோ அவன், உன்னுடைய காரியத்தைச் செய்வான். அந்த மன்னவனை அடைந்து செய்ய வேண்டியதைச் செய்துகொண்டவளாவாய். அவனுக்காக அடிக்குந்தன்மையுள்ள மன்னவர்கள் குருக்ஷேத்திரத்தை வந்தடைந்து உறுதியான சஸ்திரங்களால் ஒருவரைஒருவர் கொல்லப்போகிறார்கள். தேவி! ஆதலால், யுத்தத்தில் உன்னுடைய பாரத்துக்கு நாசம் உண்டாகப்போகிறது. கல்யாணி! சீக்கிரமாக உன்னுடைய

இருப்பிடத்திற்குச் செல். உலகங்களைத் தாங்கு' என்கிற வசனத்தை உரைத்தார். அரசனே! நராதிபனே! அவனே உலகங்களை அழிப்பதன்பொருட்டுக் கலியினுடைய அம்சமாகவும் பொறாமையுள்ளவனாகவும் பலமுள்ளவனாகவும் சூரனாகவும் குரோதமுள்ளவனாகவும் எவ்விதத்திலும் ஸமாதானப்படுத்தக் கூடாதவனாகவும் காந்தாரியினுடைய வயிற்றில் உன்னுடைய பிள்ளையாகத்தோன்றினான். தெய்வஸங்கல்பத்தால் அவனுக்கு அப்படிப்பட்ட பிராதாக்கள் தோன்றினார்கள். மாதுலனான சகுனியும் பரமஸகாவான கர்ணனும் ஒன்றுசேர்ந்த மன்னர்களும் பூமியில் நாசத்தின்பொருட்டுத் தோன்றினார்கள். அரசன் எவ்வித இயற்கையுள்ளவனாகத் தோன்றுகிறானோ அவனுடைய ஜனங்களும் அவ்வித இயற்கையுள்ளவர்களாகத் தோன்றுகிறார்கள். எஜமானன் தார்மிகனாக இருப்பானாகில் அதர்மவானும் தர்மவானாவன். எஜமானனுடைய குணதோஷங்களால் வேலைக்காரர்கள் குணதோஷமுள்ளவர்களாவார்கள். இந்த விஷயத்தில் ஸம்சயம் இல்லை. வேந்தனே! துஷ்டனான அரசனை அடைந்து உன்னுடைய புத்திரர்கள் போய்விட்டார்கள். நீண்டகைகளை உடையவனே! தத்துவங்களை அறிந்தவரான நாரதர் இந்த அர்த்தத்தை அறிகிறார். பூமிக்கு நாதனே! உன்னுடைய புத்திரர்கள் தத்தம் குற்றத்தினால் நாசமடைந்தார்கள். ராஜேந்திரனே! அவர்களைப்பற்றி நீ துக்கப்படாதே.' 'துக்கத்திற்குக் காரணமில்லையன்றோ? பாரதனே! பாண்டவர்கள் உனக்குச் சிறிதும் தீங்கிழைக்கவில்லை. எவர்களால் இந்தப்பூமியானது நாசமடையும்படி செய்யப்பட்டதோ உன்னுடைய அந்தப் புத்திரர்கள் துராத்மாக்கள். முந்தியே நாரதரால் யுதிஷ்டிரனுடைய ராஜஸூயயாகஸபையில், 'குந்திநந்தனா! உனக்கு மங்களம். ஸம்சயமில்லை. பாண்டவர்களும் எல்லாக்கௌரவர்களும் ஒருவரையொருவர் எதிர்த்துப் போர்புரிந்து உயிரை இழக்கப்போகிறார்கள். நீ செய்யவேண்டியதைச் செய்வாயாக' என்று சொல்லியிருக்கிறார். பாண்டவர்கள் நாரதருடைய வசனத்தைக் கேட்டு அவ்வண்ணம் செய்தார்கள். ஸநாதனமான இந்தத் 'தேவரஹஸ்யம்முழுதும் உனக்கு உரைக்கப்பட்டது. பிரபுவே! எவ்வாறு இச்செய்கையானது தெய்வத்தினால் செய்யப்பட்டதென்றறிந்து, உனக்குச் சோகநாசம் உண்டாகும்? உயிர்களில் எவ்வாறு தயைஉண்டாகும்? பாண்டுபுத்திரர்களிடம் எவ்வாறு நேசம்உண்டாகும்? மகாபாகுபலமுள்ளவனே! சிறந்த கைகளுள்ளவனே! குரு

ஸ்ரேஷ்ட ! இந்தவிஷயமானது முந்தியே என்னால் கேட்கப்பட்டது. ராஜஸூயயாகத்தில் தர்மராஜனுக்குச் சொல்லப்பட்டது. என்னால் (இந்த) ரஹஸ்யமானது உரைக்கப்பட்டவுடன், தர்மநந்தனன் கௌரவர்களுடன் சண்டையில்லாமலிருப்பதற்காக முயன்றான். தெய்வமானது அதிகபலமுள்ளதன்றோ ? அரசனே ! ஸ்தாவரமும் ஜங்கமமுமான பிராணியினால் எவ்விதத்தினாலும் தெய்வத்தினுடைய விதியானது தாண்டத் தக்கதன்றன்றோ? பாரத ! தர்மத்தை முக்யமாகக் கொண்டவனும் சிறந்த அறிவுள்ளவனுமான நீ பிராணிகளின்போக்குவரவுகளை அறிந்தும் அந்தத்தெய்வவிதியில் மயக்கமடைகிறாயே. யுதிஷ்டிரராஜன், நீ துக்கத்தினால் நன்கு வாட்டப்படுகிறாயென்றும் அடிக்கடி மதிமயக்கமடைகிறாயென்றும் அறிந்தால் பிராணனையும் விட்டுவிடுவான். வீரனையுதிஷ்டிரன் (விலங்கு பறவை முதலிய) திர்யக்ஜாதிகளிடத்தில்கூட எப்பொழுதும் தயையுள்ளவன். ராஜேந்திர ! அவன் எவ்வாறு உன்விஷயத்தில் தயைபாராட்டாமலிருப்பான் ? பாரத ! என்னுடைய ஆணையினாலும் மீட்சியில்லாத தெய்வத்தினுடையகதியினாலும் பாண்டவர்களுடைய காருண்யத்தினாலும் உயிரைத்தரித்திரு. அப்பா ! இவ்வாறு இருக்கின்ற உனக்கு உலகத்தில் கீர்த்தி உண்டாகும். மிக்கபெரிய தர்மார்த்தங்கள் உண்டாகும். தவமும் நெடுங்காலம் செய்யப்பட்டதாகும். மஹாராஜனே ! எரிகிற நெருப்பைப்போல் உண்டாயிருக்கிற புத்திரசோகத்தை எப்பொழுதும் ஸத்புருஷனான நீ அறிவாகிற ஜலத்தினால் அவித்துவிடு" என்று உரைத்தார்.

அளவற்ற தேஜஸையுடையவரான அந்த வியாஸருடைய அந்த வசனத்தைக்கேட்டு, திருதராஷ்டிரன் ஒரு முகூர்த்தகாலம் ஆலோசித்து (பின்வருமாறு) உரைக்கலானான். "ப்ராம்மணேந்தமரே ! பெரிதான சோகஸமூகத்தினால் நான் நன்கு தூண்டப்பட்டிருக்கிறேன். அடிக்கடி மதிமயக்கமடைகின்ற நான் என்னை அறியவில்லை. தெய்வத்தினது கட்டளையினாலுண்டான உம்முடைய இந்தவசனத்தைக்கேட்டு நான் உயிரைத்தரிக்கப்போகிறேன். துக்கிக்காமலிருப்பதற்கும் முயல்வேன்" என்று சொன்னான். ராஜேந்திரரே! ஸத்யவதிநந்தனரான வியாஸர் திருதராஷ்டிரனுடைய இந்த வசனத்தைக் கேட்டு அந்த இடத்திலேயே அந்தர்த்தானத்தை அடைந்தார்" என்று சொன்னார்.*

---

## அதிகபாடத்தின் முதலாவது அத்யாயம்.

ஜனமேஜயர் சொல்லுகிறார். "ப்ரம்மரிஷிய ! பகவானான வ்யாஸர் சென்றவுடன், பூமிக்கிறைவனான திருதராஷ்டிரன் என்னசெய்தான் ? அதனை

## ஒன்பதாவது அத்யாயம்.

## ஜலப்ரதானிகபர்வம். (தொடர்ச்சி.)

(திருதராஷ்டிரன், மரித்தவர்களைப்பார்க்கக் காந்தாரிமுதலியவர்களுடன் போர்க்களத்தை நோக்கிச் சென்றது.)

ஜனமேஜயர், "பிரம்மரிஷியே! வியாஸர் போனவுடன், தர்மாத்மாவும் பூமிக்கு நாதனுமான திருதராஷ்டிரன் என்னசெய்தான்? அதனை எனக்கு விஸ்தாரமாக உரைக்கக்கடவீர்" என்று வினவ, வைசம்பாயனர் சொல்லலானார்.

"புருஷச்ரேஷ்டனான திருதராஷ்டிரன் இதனைக்கேட்டு நெடுநேரம் சிந்தித்துப் புத்தியை இழந்தவனாகி ஸஞ்சயனை நோக்கி, "குதிரைகளைப் பூட்டு" என்றுசொல்லி விதுரரைப்பார்த்து, "க்ஷத்தாவே! காந்தாரியையும் மற்றப்பாரதஸ்திரீகளனைவரையும் அவ்வாறே குந்தியையும் என்னருகில் விரைவாக அழைத்துவா" என்றுசொன்னான். தர்மாத்மாவான திருதராஷ்டிரன் தர்மங்களை அறிந்தவர்களுள் சிறந்தவரான விதுரரைப்பார்த்து இவ்வண்ணம் உரைத்துச் சோகத்தினால் மிகஅடிக்கப்பட்ட அறிவையுடையவனாக வாகனத்திலேயே ஏறினான். புத்திரசோகத்தினால் பீடிக்கப்பட்டிருக்கிற காந்தாரியும் பர்த்தாவினுடைய வசனத்தினால் ஏவப்பட்டவளாகக் குந்தியுடனும் மற்ற ஸ்திரீகளுடனும் அரசனிருக்குமிடத்துக்கு ஓடிவந்தாள். அந்த ஸ்திரீகள் அரசனிடம்வந்து மிக்க சோகத்துடன் ஒருவரை ஒருவர் அழைத்து ஆயாஸமடைந்தவர்களாகப் பிறகு மிகஇரைந்து அலறினார்கள். விதுரர் அவர்களை ஸமாதானப்படுத்தினார். பிறகு, அவர்களைக் காட்டிலும் மிக்கதுன்பமடைந்தவரான அந்தவிதுரர் பாஷ்பங்களால் குரல் தடுமாறுகின்ற அந்தஸ்திரீகளைத் தாமே (வாகனங்களில்) ஏற்றும்

---

எனக்கு விரித்துரைக்கக்கடவீர். அப்பொழுதே, அரசரும் கௌரவரும் பெரிய மனமுள்ளவருமான தர்மபுத்திரரும் க்ருபர் முதலான மூவரும் யாதுசெய்தனர்? அச்வத்தாமாவினுடைய செய்கையைக் கேட்டேன். ஒருவரையொருவர் சபிக்கும்படி செய்யப்பட்டதையும் கேட்டேன். ஸஞ்சயன் சொல்லியதும் மேல் நடந்ததுமான விருத்தாந்தத்தை உரைப்பீராக" என்று வினவ, வைசம்பாயனர் சொல்லலானார்.

"துர்யோதனனும் கொல்லப்பட்டுச் சேனையும் முழுதும் கொல்லப்படவே, ஸஞ்சயன் அறிவையிழந்தவனாகித் திருதராஷ்டிரனை அடைந்து சொல்லுகிறான். "அரசரே! பற்பல தேசங்களிலிருந்துவந்த பற்பல தேசத்தரசர்கள்

படி செய்து, (பிறகு) பட்டணத்தினின்று புறப்பட்டார். பிறகு, எல்லாக் கௌரவர்களுடைய வீடுகளிலும் உரக்க சத்தமுண்டாயிற்று. சிறுவர்கள் தொடங்கிப் பட்டணமனைத்தும் சோகத்தினால் பீடிக்கப்பட்டதாயிற்று. எந்த ஸ்திரீகள் முன்பு தேவகணங்களாலும் பார்க்கப்படவில்லையோ அந்த ஸ்திரீகள் நாதர்கள் கொல்லப்பட்டவர்களாக அப்பொழுது ஸாதாரண ஜனங்களாலும் பார்க்கப்பட்டார்கள், அவர்கள் மிக்க மங்களகரமான கூந்தல்களை விரித்துக் கொண்டும் பூஷணங்களைக் கழற்றி எறிந்தும் ஒற்றை வஸ்திரத்தைத் தரித்தவர்களாக நாதனற்றவர்கள்போல நான்கு பக்கத்தினின்றும் வெளியில் வந்தார்கள். அந்த ஸ்திரீகள், மலைகளுடைய குகைகளினின்று யூதபதியை இழந்த பெண்மான்கள்போல வெண்மையான மலைபோன்ற உருவமுள்ள மாளிகைகளினின்று வெளிப்பட்டார்கள். அரசரே! பலபிரிவாக அப்பொழுது வெளியில்புறப்பட்ட அந்த மாதர்களுடைய கூட்டங்கள் சோகத்தினால் பீடிக்கப்பட்டவைகளாக நாட்டியம்பயிலுமிடத்தில் பெண்குதிரைக்குட்டிகளுடைய கூட்டங்கள் ஓடுவதுபோல ஓடின. (தெய்வத்தினால்) கெடுக்கப்பட்ட அந்தப் பெண்கள் கைகளைப் பிடித்துக்கொண்டு மைந்தர்களையும் உடன்பிறந்தார்களையும் தந்தையர்களையும் பற்றி அலறுகின்றவர்களாக யுகாந்தத்தில் நேர்வதுபோன்ற ஜனநாசத்தைக் கண்டார்கள். புலம்புகின்றவர்களும் அழுகின்றவர்களும் ஆங்காங்கு ஓடுகின்றவர்களுமான மாதர்கள் சோகத்தினால் அறிவழிக்கப்பட்டவர்களாகிச் செய்யவேண்டியதை அறியவில்லை. எந்த ஸ்திரீகள் முன்பு தோழிமார்களிடத்திலும் வெட்கப்படுவார்களோ அவர்கள் ஒற்றையாடை உடுத்தவர்களாகவும் வெட்கமில்லாதவர்களாகவும் மாமியார்களுக்கெதிரில் நின்றார்கள். அரசரே! எந்த மங்கையர்கள் மிகச்சிறிய சோகங்களிலும் ஒருவரையொருவர் தேற்றிக்கொள்வார்களோ அவர்கள் சோகத்தினால் தளர்ச்சி

---

அனைவரும் உம்முடைய புத்திரர்களோடு பித்ருலோகத்தை அடைந்தார்கள். பாரதரே! எப்பொழுதும் வேண்டப்பட்டும் வைரத்தையுடைய முடிவைச் செய்ய விரும்பிய உம்முடைய புத்திரனால் பூமிமுழுவதும் நாசமடையும்படி செய்யப்பட்டது. பூமிக்கு நாதரே! வரிசையாக எல்லாப்பிள்ளைகளுக்கும் பேரன்மார்களுக்கும் தந்தையர்களுக்கும் பிரேதகாரியங்களைச் செய்வியும்'' என்றான். ஸஞ்சயனுடைய கோரமான அவ்வார்த்தையைக்கேட்டுப் பூமிக்கு நாதனான அந்தத்திருதராஷ்டிரன் உயிரிழந்தவன்போல அசைவற்றுப் பூமியில்விழுந்தான். பூமியில் படுத்துக்கொண்டிருக்கின்ற அந்தப்பூபதியை அணுகி எல்லாத் தர்மங்களையுமறிந்தவரான விதுரர் இவ்வசனத்தை உரைக்கலானார்.

யுள்ளவர்களாக ஒருவரை ஒருவர் பார்த்தார்கள். அரசன் அழுகின்ற ஆயிரக்கணக்கான அந்தஸ்திரீகளால் சூழப்பட்டவனாகவும் தீனனாகவும் போர்க்களத்தைக்குறித்து நகரத்தினின்று விரைவாகப் புறப்பட்டான். சில்பிகளும் வியாபாரிகளும் வைசியர்களும் வேலைசெய்து பிழைக்கின்ற மற்ற எல்லாரும் அரசனை முன்னிட்டுக்கொண்டு நகரத்தினின்று வெளியில் புறப்பட்டார்கள். கௌரவர்களுக்கு அழிவுண்டாயிருக்கிற தருணத்தில், துன்பமுற்றவர்களும் விசேஷமாக அலறுகின்றவர்களுமான அவர்களுடைய பெரியசத்தமானது உலகங்களைத் துன்பமடையும்படி செய்துகொண்டு தோன்றியது. யுகாந்தகாலம்வந்த தருணத்தில் எரிக்கப்படுகின்ற பிராணிகளுக்கு நாசம் வருவதுபோல நாசம் வந்துவிட்டதென்று பிராணிகள் எண்ணின. மஹாராஜரே! கௌரவர்களுக்கு அழிவுண்டானபொழுது மிக்கஅன்புள்ளவர்களான அந்தப் பட்டணத்துஜனங்கள் மிக்க மனவருத்தமுற்றவர்களாக அப்பொழுது மிக அலறினார்கள்" என்று கூறினர்.

---

## பத்தாவது அத்யாயம்.

## ஜலப்ரதானிகபர்வம். (தொடர்ச்சி.)

(போர்க்களத்தைக் காணச்சென்ற திருதராஷ்டிரன் வழியில் கிருபர்முதலானவர்களைக் கண்டதும், அவர்கள் திருதராஷ்டிரனைத் தேற்றிச்சென்றதும்.)

பிறகு, ஒரு குரோசதூரம் சென்று சாரத்வதரான கிருபர், துரோணபுத்திரர், கிருதவர்மா என்கிற அந்த மஹாரதர்களைக் கண்டார்கள். அவர்களோ தலைவனும் குருடனும் அழுகின்றவனுமான அரசனைப் பார்த்தவுடனே கண்ணீரினால் தடுமாறும் குரலுடன்

"அரசரே! எழுந்திரும். ஏன் படுத்திருக்கிறீர்? பாரதர்களில் சிறந்தவரே! நீர் விசனமடையவேண்டாம். லோகேஶ்வரரே! இது எல்லாப்பிராணிகளுக்கும் முடிவிலுள்ள கதி. பாரதரே! பிராணிகள் முதலில் இல்லாமலிருந்து மத்தியில்தோன்றி முடிவில் இல்லாமற்போகின்றன. அவ்விஷயத்தில் ஏன் புலம்பவேண்டும்? துக்கப்படுகிறமனிதன் மாண்டவனைப் பின்தொடருகிறதில்லை. துக்கப்படுகிறமனிதன் சாகிறதுமில்லை. உலகம் இந்தத்தன்மையுள்ளதாயிருக்கையில், ஏன் விசனப்படுகிறீர்? யுத்தஞ்செய்யாதவனும் மாண்டுபோகிறான். யுத்தஞ்செய்பவனும் பிழைத்திருக்கிறான். மஹாராஜரே! ஒருவனுமது காலத்தைக் கடந்து பிழைக்கவில்லை. கௌரவர்களுள் சிறந்தவரே! காலமானது

பெருமூச்சுவிட்டுக்கொண்டு இதனை உரைத்தார்கள். "மகாராஜரே! வேந்தரே! பூமிக்கு இறைவரே! உம்முடைய புத்திரன் எவ்விதத்திலும் எவராலும் செய்யமுடியாதகாரியத்தைச்செய்து பரிவாரங்களுடன் கூட்டவே இந்திரலோகஞ்சென்றான். பரதர்களுள் சிறந்தவரே! துர்யோதனனுடைய சேனையினின்று நாங்கள் மூன்று ரதிகர்களே விடுபட்டோம். மற்ற உமதுசேனை முழுவதும் நசித்துவிட்டது" என்றனர். சாரத்வதரான கிருபர் அரசனைப்பார்த்து இவ்வண்ணம் உரைத்துவிட்டு, பிறகு, புத்திரசோகத்தினால் பீடிக்கப்பட்ட காந்தாரியைப்பார்த்து இந்த வசனத்தை உரைக்கலானார். பயமற்றவர்களாகப் போர்புரிந்த அந்த உன்னுடைய புத்திரர்கள் அனேக சத்துருக் கூட்டங்களைக் கொன்றும் வீரச்செயல்களைச் செய்தும் நாசமடைந்தார்கள். அவர்கள் குற்றமற்றவைகளும் சஸ்திரங்களால் ஜயிக்கப்பட்டவைகளுமான உலகங்களை நிச்சயமாகஅடைந்து பிரகாசிக்கின்ற தேகத்தைப்பெற்றுத் தேவர்கள்போல விளையாடுகிறார்கள். அரசியே! எல்லாரும் யுத்தத்தில் எதிர்த்துநின்று போர்புரிந்து உயிரை இழக்கும்படி செய்யப்பட்டார்கள். சூரர்களுள் யுத்தம் செய்பவன் ஒருவனாவது புறங்காட்டினவனாகவில்லை. ஆயுதத்தினாலேயே நாசத்தை அடைந்தான். ஒருவனாவது (பகைவரைக்) கும்பிடவில்லை. யுத்தத்தில் சஸ்திரத்தினால் மரணமானது க்ஷத்திரியனுக்குச் சிறந்த கதிஎன்று முன்னோர்கள் கூறுகின்றனர். அவர்களைப்பற்றி நீ துக்கிக்கத்தக்கவளல்லை. ராஜபத்னி! அவர்களுடைய பகைவர்களான பாண்டவர்களும் விடப்படவில்லை. அசுவத்தாமாவைத் தலைவனாகக்கொண்ட எங்களால் செய்யப்பட்டதைக் கேள். உன்னுடைய குமாரன் பீமஸேனனால் அதர்மத்தினால் கொல்லப்பட்டானென்பதைக் கேட்டு, உறங்கிக்கொண்டிருந்த பாண்டவர்களுடைய பாசறையை அடைந்து துன்பம் செய்யப்பட்டது. திருஷ்டத்யும்னனை முதன்மையாகக்கொண்ட எல்லாப் பாஞ்சாலர்களும்

---

பற்பலவிதமான எல்லாப்பிராணிகளையும் இழுக்கிறது. காலத்திற்கு ஒருவனாவது வேண்டியவனுமல்லன்; விரோதியுமல்லன். பரதர்களில் சிறந்தவரே! காற்று எவ்வாறு புற்களுடைய நுனிகளை எப்பக்கங்களிலும் சுழற்றுகிறதோ அவ்வாறே பிராணிகள் காலத்தின்வசத்தை அடைகின்றன. ஒரு கூட்டமாகச் சேர்ந்து புறப்பட்டவர்களும் அந்தக்கூட்டத்தில் சென்றுகொண்டிருப்பவர்களுமான எல்லாருள்ளும் எவனுக்குக் காலம் வந்ததோ அவன் முந்திச்செல்லுகிறான். அதில் ஏன் புலம்பவேண்டும்? அரசரே! யுத்தத்தில் கொல்லப்பட்டவர்களான எவர்களைப்பற்றி நீர் வியஸனப்படுகிறீரோ அந்த மகாத்மாக்கள் துக்கிக்கப்படத்

மற்றுமுள்ள துருபதனுடைய குமாரர்களும் திரௌபதீபுத்திரர்களும் கொல்லப்பட்டார்கள். உனது புத்திரனுடைய சத்துருவர்க்கத்தாருக்கு அவ்வாறான வதத்தைச் செய்துவிட்டு ஓடுகிறோம்.' மூவரும் யுத்தத்தில் நிற்பதற்குச் சக்தியற்றவர்கள். சூரர்களும் சிறந்த வில்லாளிகளுமான அந்தப்பாண்டவர்கள் கோபத்துக்கு வசப்பட்டவர்களாகவும் பழிக்குப்பழிதீர்க்க எண்ணங்கொண்டவர்களாகவும் விரைவாக வந்துவிடுவார்கள். அதிகமதங்கொண்டவர்களும் புருஷசிரேஷ்டர்களும் சூரர்களுமான அந்தப்பாண்டவர்கள் புத்திரர்கள்கொல்லப்பட்டார்களென்பதைக்கேட்டு (நம்முடைய) ஸ்தானத்தைத் தேடிக்கொண்டு விரைவாகவந்துவிடுவார்கள். அவர்களுக்குக் கெடுதலைச்செய்துவிட்டு நல்ல நிலைமையுடனிருப்பதற்கு நாங்கள் சக்தியுள்ளவர்களல்லோம். ராஜபத்னி! எங்களுக்கு அனுமதிகொடு. சோகத்தில் மனத்தைச் செலுத்தாதே. அரசரே! நீர் (எங்களுக்கு) விடைகொடும். உத்தமமான தைர்யத்தை அடையும். நீர் நாசத்தையும் முக்கியமான க்ஷத்திரியதர்மத்தையும் பாரும்' என்றார். பாரதரே! மஹாராஜரே! கிருபரும் கிருதவர்மாவும் துரோணபுத்திரரும் இவ்வாறு சொல்லிவிட்டு அரசனையும் பிரதக்ஷிணம்செய்து புத்திமானும் அரசனுமான அந்தத்திருதராஷ்டிரனைப் பார்த்துக்கொண்டே கங்கைக்கருகில் குதிரைகளை விரைவாக நடத்திச்சென்றார்கள். அரசரே! அந்த எல்லாமஹாரதர்களும் சிறிதுதூரம்சென்று மனவருத்தமுற்றவர்களாக ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டு அப்பொழுது அவர்கள் மூன்றாகப்பிரிந்து சென்றார்கள். அப்பொழுது சாரத்வதரான கிருபர் ஹஸ்தினபட்டணம் சென்றார். கிருதவர்மா தனது நாட்டுக்கே சென்றான். அஸ்வத்தாமா வியாஸருடைய ஆசிரமஞ்சென்றார். இவ்வண்ணமாக அந்த வீரர்கள் மஹாத்மாக்களான பாண்டுபுத்திரர்களுக்குத் தீங்கைச்செய்து பயத்தினால் பீடிக்கப்பட்டவர்களாக ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டே சென்றனர். சத்துருக்களைச்

---

தக்கவர்களல்லர். ஏனென்றால், அவர்களனைவரும் ஸ்வர்க்கத்தை அடைந்துவிட்டார்கள். (யுத்தத்தில்) சரீரத்தைவிடுகின்ற சூரர்கள் எவ்வாறு ஸ்வர்க்கத்தை அடைகிறார்களோ அவ்வாறு தக்ஷிணைகளுடன் கூடின யாகங்களாலும் தவங்களாலும் வித்தையினாலும் அடைவதில்லை. எல்லாரும் வேதத்தை அறிந்தவர்கள். எல்லாரும்சூரர்கள். விரதத்தை நன்குஅனுஷ்டித்தவர்கள். எல்லாரும் எதிர்த்து நின்று சண்டைசெய்து உயிரைவிட்டார்கள். அவர்கள்விஷயத்தில் ஏன்புலம்பவேண்டும்? அந்த உத்தமபுருஷர்கள் சூரர்களுடைய சரீரங்களாகிற நெருப்புகளில் பாணங்களாகிற ஆகுதிகளை ஹோமம்செய்தார்கள். ஹோமம்செய்யப்படு

க்ஷிப்பவர்களும் மஹாத்மாக்களுமான வீரர்கள் அப்பொழுது அரசனைச்சந்தித்துவிட்டு ஸூர்யன் உதிப்பதற்குள்ளாக இஷ்டப்படி சென்றார்கள்.' மன்னரே! மஹாரதர்களான அந்தப்பாண்டுபுத்திரர்கள் அப்பொழுதுதான் துரோணபுத்திரரை அடைந்து விக்கிரமத்தை வெளியிட்டு யுத்தத்தில் அவரை ஜயித்தார்கள்.

---

## பதினோராவது அத்யாயம்.

## ஜலப்ரதானிகபர்வம். (தொடர்ச்சி.)

(யுதிஷ்டிரர் கோவிந்தர்முதலானவர்களோடு திருதராஷ்டிரனிடம் சென்று வணங்கியதும், திருதராஷ்டிரன் யுதிஷ்டிரரை மெதுவாகக் கட்டிக்கொண்டு பிறகு பீமனை நொறுக்கக்கருதி மாதவரால் ஏமாற்றப்பட்டு இருப்புப்பதுமையை நொறுக்கியதும்.)

எல்லாச்சேனைகளும் கொல்லப்பட்ட தருணத்தில், தர்மராஜரான யுதிஷ்டிரர் பிராயமுதிர்ந்த பிதாவான திருதராஷ்டிரன் ஹஸ்திநபட்டணத்தினின்று புறப்பட்டதைக்கேட்டார். மஹாராஜரே! புத்திரசோகத்தினால் கவரப்பட்டவரும் துக்கிக்கின்றவருமான அந்த யுதிஷ்டிரர் அப்பொழுது பிராதாக்களோடுகூடி வீரரும் மஹாத்மாவுமான தாசார்ஹராலும் ஸாத்யகியினாலும் யுயுத்ஸுவினாலும் பின்தொடரப்பட்டுப் புத்திரசோகத்தினால் பீடிக்கப்பட்ட திருதராஷ்டிரனைநோக்கிச் சென்றார். அதிக துக்கத்தினால் பீடிக்கப்பட்டவளான திரௌபதியும் சோகத்தினால் வாட்டமுற்றவளாக அவ்விடத்தில் கூடியிருந்த பாஞ்சாலஸ்திரீகளோடு அந்த யுதிஷ்டிரரைப் பின்தொடர்ந்து, சென்றாள். பரதர்களுள் சிறந்தவரே! யுதிஷ்டிரர் அன்றிற்பக்ஷிகள்போலத் தீனமாக அலறுகின்ற மாதர்களுடைய கூட்டங்

---

இன் ப்ராணங்களையும் தாங்கினார்கள். மன்னரே! ஸ்வர்க்கத்துக்கு ஸாதனமான உத்தமமான மார்க்கத்தை இவ்வாறு உமக்கு உரைத்தேன். க்ஷத்திரியனுக்கு இவ்வுலகில் யுத்தத்தைக்காட்டிலும் மேலானது ஒன்றுமில்லை. அந்தக்ஷத்திரியர்கள் மஹாத்மாக்கள்; சூரர்கள்; யுத்தத்தில் நல்ல தேர்ச்சியுடையவர்கள்; உத்தமமான மனோரதத்தை அடைந்தார்கள். எல்லாருமே துக்கிக்கப்படத்தகாதவர்களன்றோ? புருஷச்ரேஷ்டரே! தாமே மனத்தைத்தேறுதலடையும்படி செய்து சோகத்தை அடையாமலிருப்பீராக. சோகத்தினால் ஆக்கிரமிக்கப்பட்ட நீர் இப்பொழுது கார்யத்தைவிடுதல் தகாது" என்று கூறினார்.

களை யுத்தபூமிக்கருகில் கண்டார். 'அரசருடைய தர்மத்தையறியும் தன்மை எங்கே? அந்தத்தயை எங்கே? தந்தையரையும் உடன் பிறந்தார்களையும் குருபுத்திரர்களையும் நண்பர்களையும் கொன்றீரே! மஹாபாஹுபலமுள்ளவரே! துரோணரையும் பிதாமஹரான பீஷ்மரையும் உயிரை இழக்கும்படிசெய்து ஜயத்ரதனையும் கொன்று எவ்வாறு உமக்கு(ராஜ்யபரிபாலனத்தில்)மனம் பிரவிர்த்தியுள்ளதாயிற்று? பாரதரே! தந்தையரையும் பிராதாக்களையும் ஜயிக்கமுடியாத அபிமன்யுவையும் திரௌபதீபுத்திரர்களையும் பாராமலிருக்கிற உமக்கு ராஜ்யத்தினால் செய்யத்தக்கது என்ன?' என்று அலறுகின்றவர்களும் கைகளைஉயரத்தூக்கினவர்களும் தைன்யமுற்றவர்களும் பாண்டவர்களுக்குப் பிரியர்களான அபிமன்யு முதலானவர்களாலும் அப்ரியர்களான துர்யோதனனாதிகளாலும் அழுகின்றவர்களுமான ஆயிரக்கணக்கான அந்தஸ்திரீகளால் அரசர் நாற்புறங்களிலும் சூழப்பட்டார். மிக்கபுஜபலமுள்ளவரும் தர்மராஜருமான யுதிஷ்டிரர் அன்றிற்பக்ஷிகளைப்போல அலறுகின்ற அந்தஸ்திரீகளைத் தாண்டிப் பெரியதகப்பனை வந்தனம்செய்தார். பிறகு, பகைவர்களைத் துன்புறுத்துகின்றவர்களான அந்தப் பாண்டவர்கள் எல்லாரும் வரிசையாகப்பிதாவை வந்தனம்செய்து பெயர்களையும் தெரிவித்தார்கள். புத்திரர்களுடைய வதத்தினால் பீடிக்கப்பட்டவனும் சோகத்தினால் எளிமையுற்றவனுமான திருதராஷ்டிரன் புத்திரர்களுடையநாசத்தையுண்டுபண்ணின அந்தப்பாண்டுநந்தனான யுதிஷ்டிரரைப் பிரீதியில்லாமலே கட்டிக்கொண்டான். பாரதரே! தர்மராஜனைக் கட்டிக்கொண்டு தேறுதலடையச்செய்து, எரிக்க எண்ணங்கொண்ட நெருப்புப்போலக் கெட்டஎண்ணங்கொண்டவனாகப் பீமனை (த்தழுவ) விரும்பினான். சோகமாகிற காற்றினால் மூட்டப்பட்ட அவனுடைய அந்தக் 'கோபமாகிறநெருப்பானது' பீமஸேனமயமான காட்டைத் கொளுத்த எண்ணங்கொண்டதுபோலக் காணப்பட்டது. ஸ்ரீவாஸுதேவர் பீமனைப் பற்றிய அமங்களமான அவனுடைய எண்ணத்தை அறிந்து பீமனை

---

**அத்கபாடத்தன இரண்டாவது அத்யாயம்.**

"புருஷச்ரேஷ்டனான திருதராஷ்டிரன் விதுரருடைய அந்தவாக்கியத்தைக்கேட்டு வாகனம்பூட்டும்படி சொல்லிவிட்டு மீண்டும், "காந்தாரியையும் பாரதமாதர்களனைவரையும் சீக்கிரமாக அழைத்துவா, அங்கே வேறு எந்தஸ்திரீகள் இருக்கிறார்களோ அவர்களையும் மருமகளான குந்தியுடன் அழைத்துவா" என்னும் சொல்லைச்சொன்னான்.

இருகைகளாலும் விலக்கிக்கொண்டு இரும்புமயமானபீமனைக்கொடுத்தார். மகாபுத்தியுள்ளவரும் ஜனார்த்தனருமான ஸ்ரீஹரியானவர் அவருடைய இங்கிதத்தை முந்தியே தெரிந்துகொண்டு அந்தவிஷயத்தில் தக்க ஏற்பாட்டைச்செய்தார். பலசாலியான அரசன் இரும்புமயமான பீமஸேனனை அவனென்றே எண்ணிக்கொண்டு இருகைகளாலும் தழுவிக்கொண்டே நொறுக்கினான்? பதினாயிரம் யானைக்குஸமமான புலமுள்ள அந்த அரசன் இரும்புமயமான பீமனை நொறுக்கி மார்பில் மிகநசுக்கப்பட்டவனாகி வாயினின்று ரக்தத்தைக் கக்கினான். பிறகு, பூத்திருக்கின்ற நுனிக்கிளையுடன்கூடின பாரிஜாதவிருக்ஷம் போல ரக்தத்தால் நனைக்கப்பட்டவனாக அப்படியே பூமியில் விழுந்தான். அப்பொழுது, கற்றறிந்தவனும் கவல்கணன்மைந்தனும்ஸூதனுமான ஸஞ்சயன் அந்தஅரசனை எடுத்தான்; அவனை ஸமாதானஞ்செய்கின்றவன்போலத் துக்கத்தைத் தணியச்செய்துகொண்டு, 'இவ்விதம் வேண்டாம்' என்றும் சொன்னான். அரசன், பீமன் மாண்டானென்று நினைத்துக் கோபத்தைவிட்டுப் பெரியமனமுள்ளவனாகிச் சோகத்தை அடைந்து, 'ஆ! ஆ! பீமா!' என்றலறினான். ஆண்மையிற் சிறந்தவரான வாஸுதேவர் அந்தத்திருதராஷ்டிரன் கோபத்தை விட்டுவிட்டானென்றும் பீமஸேனனுடைய வதத்தினால் பீடிக்கப்பட்டிருக்கிறானென்றும்அறிந்து இந்தவசனத்தை உரைக்கலானார்.

"பிரபுவே! த்ருதராஷ்டிரரே! நீர் வியஸனப்படவேண்டாம். உம்மால் பீமன் கொல்லப்படவேஇல்லை. உம்மால் இரும்புமயமான இந்தப் பீமஸேனனுடைய பிரதிமையானது தள்ளப்பட்டது. பரதர்களுள் சிறந்தவரே! உம்மைக் கோபத்திற்கு வசப்பட்டவரென்றறிந்து ம்ருத்யுவினுடைய கோரப்பற்களின் இடையை நாடியிருக்கின்ற குந்தீநந்தனன் என்னால் விலக்கப்பட்டான். ராஜஸ்ரேஷ்டரே! பலத்தில் உமக்குச்சரியானவன்ஒருவனுமில்லையன்றோ? மிக்க புஜபலமுள்ளவரே! எந்தமனிதன் உம்முடைய இருகைகளாலும் கட்டுதலை ஸஹிப்பான்? எவ்வாறு ஒருவன் அந்தகனை அடைந்து உயிரோடு மீண்டு வரமாட்டானோ அவ்வாறே உம்முடைய இரண்டு கைகளின் மத்தியத்தை அடைந்து ஒருவனும் உயிரோடிருக்கமாட்டான். குருவம்சத்திலுதித்தவரே! ஆதலால், உம்முடைய புத்திரனால் செய்யப்பட்டிருந்த இரும்புமயமான இந்தப் பீமஸேனனுடைய பிரதிமையானது என்னால் உமக்குக் காணிக்கையாக்கப்பட்டது. ராஜேந்திரரே! புத்திரசோகத்தால் நாற்புறங்களிலும் நன்கு தபிக்கப்பட்டிருக்கிற உம்முடையமனமானது தர்மத்தினின்று விலக்கப்பட்டுவிட்டது.

ஆதலால், நீர் பீமஸேனனைக் கொல்ல விரும்புகிறீர். அரசரே ! நீர் வ்ருகோதரனைக்கொல்ல எண்ணங்கொண்டது உமக்குத் தகுதியன்று. மஹாராஜரே ! உம்முடைய புத்திரர்கள் எவ்விதத்தினாலும் ஜீவிக்க மாட்டார்கள். ஆதலால், சாந்தியைக்குறித்து எண்ணங்கொண்ட நாம் செய்ததனைத்தையும் நீர் ஸம்மதியும். துக்கத்தில் மனத்தைச் செலுத்தவேண்டாம்" என்று கூறினார்.

---

## பன்னிரண்டாவது அத்யாயம்.

## ஜலப்ரதானிகபர்வம். (தொடர்ச்சி.)

(ஸ்ரீ வாஸுதேவருடைய வாக்யத்தினால் கோபத்தைவிட்ட திருதராஷ்டிரன் பீமன்முதலானவர்களைக் கட்டிக்கொண்டது.)

பிறகு, பரிசாரகர்கள் சுத்திபண்ணுவதற்காக அந்தத்திருதராஷ்டிரனை வந்தணுகினார்கள். சுத்திசெய்யப்பட்ட அவனை மதுஸூதனர் பார்த்து மறுபடியும் இவ்வாறு கூறலானார். "மன்னரே! வேதங்களும் பற்பல சாஸ்திரங்களும் உம்மால் அத்தியயனம் பண்ணப்பட்டிருக்கின்றன. புராணங்களும் தனித்த ராஜதர்மங்களும் உம்மால் கேட்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறு கற்றறிந்தவரும் பேரறிவாளருமான நீர் பலாபலங்களில் ஸமர்த்தராக இருந்துகொண்டும் யாதுகாரணம் பற்றி உமது குற்றத்தினாலே இவ்விதமான கோபத்தைப் பாராட்டுகிறீர்? பாரதரே ! அப்பொழுதே நானும் பீஷ்மரும் துரோணரும் விதுரரும் ஸஞ்சயனும் உமக்குச் சொன்னோம். வேந்தரே ! விதுரரும் ஸஞ்சயனும் சொல்லியிருக்கிறார்கள். அந்த வார்த்தையை நீர் அனுஷ்டிக்கவில்லை. குரு வம்சத்திலுதித்தவரே ! அப்பொழுது நீர் தடுக்கப்பட்டிருந்தும் பலத்திலும் சௌர்யத்திலும் பாண்டவர்கள் மேற்பட்டவர்களென்றறிந்தும் எம்முடைய சொல்லைச்செய்யவில்லை. எந்த அரசன் நிலைத்த அறிவுள்ளவனாகத் தானாகவே தோஷங்களைப் பார்க்கிறானோ, தேசகாலங்களின் பாகுபாட்டையும் அறிகிறானோ அவன் சிறந்த நன்மையைப் பெறுகிறான். நன்மையைப்பற்றிச் சொல்லப்படுகின்ற எந்த மனிதன் ஹிதாஹிதங்களை ஏற்றுக்கொள்வதில்லையோ அவன் ஆபத்துக்களை அடைந்து நாசத்தை அடைகிறானன்றோ? பாரதரே ! ஆதலால், உம்மை வேறுவிதமான நடையுள்ளவரென்று நன்றாகத்தெரிந்துகொள்ளும். அரசரே ! அடங்காத் சித்தத்துடன் கூடினவரான நீர் துர்யோதனனுடையவசத்தில்

நிலைபெற்றிருந்தீர். உம்முடைய குற்றத்தினாலே ஆபத்தையடைந்திருக்கிறீர். ஏன் பீமனைக் கொல்லவிரும்புகிறீர்? ஆதலால், உம்முடைய பாவத்தை நினைத்துக்கொண்டு நீர் கோபத்தை அடக்கிக்கொள்ளும். அல்பனான எந்தமனிதன் துவேஷத்தினால் அந்தப்பாஞ்சாலியை ஸபைக்கு இழுத்துவந்தானோ அவன் வைரத்தைத் தீர்க்க எண்ணங்கொண்ட பீமஸேனனால் கொல்லப்பட்டான். குற்றமில்லாமலிருக்க, நீர் பாண்டவர்களைக்கைவிட்டதென்னும் உம்முடைய அக்ரமத்தையும் துராத்மாவான புத்திரனுடைய அக்ரமத்தையும்பாரும்" என்றார்.

ஜனாதிபரே! இவ்வாறு கோவிந்தர் உண்மை அனைத்தையும் உரைக்கக்கேட்ட அந்தப் பூமிநாதனான திருதராஷ்டிரன், தேவகீநந்தனரைப்பார்த்துச் சொல்லலானான். 'மஹாபாகுபலமுள்ளவனே! மாதவ! நீ சொல்லுவது வாஸ்தவமே. பலமுள்ள புத்திரஸ்நேகமான்து என்னைத் தர்மத்தினின்று நன்கு நிலைகுலையச் செய்தது. கிருஷ்ணா! புருஷஸ்ரேஷ்டனும் மிக்கபலமுள்ளவனும் ஸத்யவிக்ரமனுமான பீமன் உன்னால் ரக்ஷிக்கப்பட்டவனாகப் பாக்கியத்தினால் என்னுடைய இருகைகளின் நடுவை அடையாமலிருந்தான். மாதவ! இப்பொழுதோ கவலையற்றவனாகவும் கோபத்தையும் தாபத்தையும் விட்டவனாகவும் இருக்கிற நான் வீரனான நடுவாமவனான பாண்டவனைத் தொடவிரும்புகிறேன். சிறந்த அரசர்களும் புத்திரர்களும் கொல்லப்பட்டிருக்கும் ஸமயத்தில் என்னுடைய தர்மமும் பிரீதியும் பாண்டவர்களிடம் நிலைபெற்றிருக்கின்றன' என்றான். பிறகு, அந்தத் திருதராஷ்டிரன் நல்ல சரீரமுள்ளவர்களான பீமனையும் தனஞ்சயனையும் புருஷஸ்ரேஷ்டர்களான மாத்ரீபுத்திரர்களையும் உரக்க அழுதுகொண்டு அங்கங்களால் தொட்டான்; அவர்களை ஸமாதானப்படுத்தி மங்களத்தையும் கூறினான்.

---

## பதின்மூன்றாவது அத்தியாயம்.

## ஜலப்ரதானிகபர்வம். (தொடர்ச்சி.)

(மாதவர் யுதிஷ்டிரர்முதலானவர்கள் காந்தாரியின் அருகில் சென்றதும் காந்தாரி யுதிஷ்டிரரைச்சபிக்க எண்ணியிருப்பதை அறிந்து முந்தியே வந்திருந்த வியாஸர் அவளுடைய கோபத்தைப் போக்கியதும்.)

பிறகு, கௌரவர்களுள்சிறந்தவர்களும் பிராதாக்களுமான அவர்களனைவரும் கேசவருடன்கூடினவர்களும் திருதராஷ்டிரனால்

அனுமதிகொடுத்தனுப்பப்பட்டவர்களுமாகக் காந்தாரியிடம் சென்றார்கள். பிறகு, புகழப்பட்டவளும் புத்திரசோகத்தினால் பீடிக்கப்பட்டவளுமான காந்தாரி சத்துருக்களை நாசம்செய்தவரும் தர்மராஜருமான யுதிஷ்டிரரைத்தெரிந்துகொண்டு சபிக்கவிரும்பினாள். யோஜனகந்தியின் புதல்வரான வியாஸர் பாண்டவர்களைப்பற்றிய அவளுடைய கெட்ட அபிப்பிராயத்தைத் தெரிந்துகொண்டு (அவள் சபிக்க விரும்பினதையும்)முன்னரே நன்குஅறிந்தார். பராசரருடைய புத்திரரும் கங்கையில் ஸ்நானம்செய்து பரிசுத்தரும் நியமமுள்ளவருமான அந்தப்பிரம்மரிஷியானவர் ஞானக்கண்ணினாலும் அகங்காரமற்ற மனத்தினாலும் அறிந்து மனத்தின்வேகம் போன்ற வேகமுள்ளவராக அந்தஇடத்தைவந்தடைந்தார். அவர் எல்லாப்பிராணிகளுடைய எண்ணத்தையும் எப்பொழுதும் அறிகிறார். மிக்கதவமுள்ளவரான அந்த வியாஸர் அப்பொழுது மருமகளைப்பார்த்துச் சாபத்துக்குக் காலம் அன்றென்றுதடுத்தும், ஸமாதானத்துக்குக் காலமென்று சொல்லியும் மங்களங்களைக் கூறினார். "காந்தாரி! பாண்டவனிடத்தில் கோபம்பாராட்டத்தக்கதன்று. சாந்தியை அடைவாயாக. ரஜோகுணத்தை அடக்கு. என்னுடைய இந்த வசனத்தையும்கேள். முன்பு யுத்தகாலத்தில் ஜயத்தைவிரும்பினபுத்திரனால், 'அம்மா! சத்துருக்களோடு போர்புரிகின்ற எனக்கு ஜயத்தைஅனுக்ரஹிப்பாயாக' என்று நீ உரைக்கப்பட்டாய்.கல்யாணி! யுத்தகாலத்தில் ஜயத்தை விரும்பினவனான புத்திரனால் அவ்வண்ணம் வேண்டப்பட்டவளான அப்படிப்பட்ட நீ, 'எங்கே தர்மமோ அங்கே ஜயம்' என்று சொன்னாயன்றோ? கீர்த்தியுள்ளவளே! சென்றுபோனவிஷயத்தில் வாக்கினால் கோபிப்பதில்கூட மனத்தைச்செலுத்தாதே. நான், பேசுகின்ற உன்னை மெய்பேசுவளென்று நினைக்கிறேன். அரசர்களுடைய கைகலந்த சண்டையில் அதிகஸம்சயத்தை அடைந்து பாண்டுபுத்திரர்களால் யுத்தத்தில் ஜயமடையப்பட்டது. ஆதலால், நிச்சயமாகத் தர்மம் மேலானது. முன்பு பொறுமையை இயற்கையாகக்கொண்டிருந்தவளான அப்படிப்பட்ட நீ இப்பொழுது ஏன்பொறுக்கிறாயில்லை? தர்மத்தை அறிந்தவளே! அதர்மத்தை விட்டுவிடு. எங்கு தர்மமோ அங்கு ஜயம். நல்லமனமுள்ளவளே! காந்தாரி! அந்த நீ தர்மத்தையும் சொல்லப்பட்டவாக்கையும் நினைத்து உன்னுடைய புத்திரர்களான பாண்டவர்கள்விஷயத்தில் கோபத்தை அடக்கு" என்று கூறினார்.

காந்தாரி சொல்லுகிறாள். "பகவானே! நான் அஸூயையைப்படவில்லை. இவர்கள் நசித்துப்போகவேண்டுமென்று நான் விரும்ப

வில்லை. புத்திரசோகத்தினால் என்மனம் பலாத்காரமாக நிலைதவறு கிறதுபோலும். குந்திபுத்திரர்கள் எவ்வாறு குந்தியினால் காக்கப்படத் தக்கவர்களோ அவ்வாறே என்னாலும் காக்கப்படத்தக்கவர்கள். எப்படி உம்மால் காக்கப்படத்தக்கவர்களோ அவ்வாறே திருதராஷ்டிரராலும் காக்கப்படத்தக்கவர்கள். துச்சாஸனன் ஸுபலபுத்திரனான சகுனி இவர்களுடைய குற்றத்தினாலும் கர்ண துர்யோதனர்களாலும் இந்தக்குருவம்சநாசமானது உண்டுபண்ணப்பட்டது. பீபத்ஸுவும் குற்றமுள்ளவனல்லன்; குந்திபுத்திரனானவிருகோதரனும் குற்றமுள்ளவனல்லன். நகுலனும் ஸஹதேவனும் ராஜாவான யுதிஷ்டிரனும் குற்றமுள்ளவரல்லர். ஒருவரிடத்தொருவர் அஹங்காரங்கொண்டவர்களானகௌரவர்கள் ஒன்றுசேர்ந்து யுத்தம்செய்து பகைவரால்கொல்லப்பட்டார்கள். அந்தவிஷயத்தில் எனக்கு வெறுப்பில்லை. ஆனால், பெரியமனமுள்ளவனை பீமன் துர்யோதனனைச் சண்டைக்கு அழைத்துக் கதாயுத்தத்தில் வாஸுதேவன் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே ஒரு கார்யத்தைச்செய்தான். பலவாறு யுத்தத்தில் ஸஞ்சரிப்பவனான துர்யோதனனைச் சிக்ஷையினால் தன்னை மீறினவனென்று அறிந்து நாபிக்குக்கீழே அடித்தான். அது எனக்குக் கோபத்தை விருத்தியடையச்செய்தது. தர்மத்தை அறிந்தவர்களான சூரர்கள், மஹாத்மாக்களால் விதிக்கப்பட்டிருக்கிற தர்மத்தை யுத்தத்தில் எவ்விதத்தினாலாவது பிராணனைக்காப்பாற்றுவதற்காக எவ்வாறு விடுவார்கள்?" என்று கூறினாள்.

---

## பதினைந்காவது அத்யாயம்.

## ஜலப்ரதானிகபர்வம். (தொடர்ச்சி.)

(பீமனுக்கும் காந்தாரிக்கும் ஸம்வாதம்.)

அந்தக்காந்தாரியினுடைய அந்த வசனத்தைக்கேட்டவுடன், பீமஸேனன் பயந்தவன்போல அவளைப்பார்த்து அப்பொழுது ஸமாதானத்துடன்கூடின இந்தவசனத்தை உரைக்கலானான். 'அந்த யுதத்தில் என்னைக்காத்துக்கொள்ளவிரும்பிய என்னால் தர்மமோ அதர்மமோ பயத்தினால் எது செய்யப்பட்டதோ அதனை நீ பொறுத்துக் கொள்ளவேண்டும். மகாபலசாலியும் உன்னுடைய புத்திரனுமான அந்தத்துரியோதனன் தர்மயுத்தத்தினால் ஒருவராலும் எவ்விதத்தினாலும் ஜயிக்கப்படமுடியாதவன். அதனால், அநியாயமானகாரியத்தைச் செய்தேன். அவனால் அதர்மத்தினால் முன்பு யுதிஷ்டிரரும் ஜயிக்கப்

பட்டார். எப்பொழுதுமே அவனால் நாங்கள் வஞ்சிக்கப்பட்டோம். அதனால் கெட்டகார்யத்தைச் செய்தேன். சேனையில் இவன் ஒருவன் மிகுந்தவன்; கதாயுத்தத்திலும் வீர்யமுள்ளவன். கவர்ந்து கொள்ளப்பட்டராஜ்யத்தைவிடமாட்டானென்றுஎன்னால் அந்தக்கார்யம்செய்யப்பட்டது. பதிவ்ரதையாயிருப்பவளும் ஒற்றை வஸ்திரத்தைத்தரித்தவளும் வீட்டுக்குவிலக்காயிருப்பவளுமான பாஞ்சாலியை உன்னுடையகுமாரன் சொல்லியது உன்னால் முழுதும் அறியப்பட்டிருக்கிறது. துர்யோதனனைக்கொல்லாமல் ஸமுத்திரங்களுடன் கூடின தனித்தபூமியானது எங்களால் அனுபவிக்கஸாத்தியமாகாது. அதனால், இது என்னால்செய்யப்பட்டது. ஸபையின்நடுவில் திரௌபதிக்கு இடத்தொடையைக் காண்பித்ததாகிய வெறுப்பான காரியத்தை எங்களுக்கு உன்னுடைய புத்திரன் செய்தான். அம்மா! கெட்டநடையுள்ள உன்னுடைய அந்தக்குமாரன் அப்பொழுதே எங்களால் கொல்லப்படத்தக்கவன். முன்பு, தர்மராஜருடைய கட்டளையினாலேயே ப்ரதிஜ்ஞையில் கட்டுப்பட்டிருந்தோம். ராஜபத்னி! உன்னுடைய புத்திரன் அரசரிடத்தில் பெரியபகையை வளர்த்தமையாலும் காட்டில் எப்பொழுதும் கிலேசத்தை அடைவிக்கப்பட்டோமாதலாலும் இது என்னால் செய்யப்பட்டது. யுத்தத்தில் துர்யோதனனைக்கொன்று நாங்கள் விரோதவைரத்தின் முடிவைக் கண்டோம். யுதிஷ்டிரர் ராஜ்யத்தை அடைந்தவுடனே, நாங்களும் கோபத்தை விட்டுவிட்டோம்' என்றான்.

காந்தாரி சொல்லலுற்றாள். "அப்பா! நீ புகழ்கிற என்னுடைய பிள்ளைக்கு இவ்விதவதமானது தக்கதன்று. என்னிடத்தில் எதைச்சொல்லியிருந்தாயோ அதனைத்தையும் நீ செய்துவிட்டாய். பாரத! விருஷஸேனன் நகுலனுடைய குதிரைகளைக்கொன்ற தருணத்தில், யுத்தத்தில் துச்சாஸனனுடைய சரீரத்தினின்றுபெருகும் ரத்தத்தைப் பானம்செய்தாய். வ்ருகோதர! ஆதலால், பெரியோர்களால் நிந்திக்கப்பட்டதும் கோரமானதும் இழிந்தவர்களால் செய்யப்பட்டதும் தகாததும் க்ரூரமாயிருப்பதுமானகாரியத்தைச்செய்தாய்" என்றாள். பீமன், "யுத்தத்தில் விருஷஸேனனால் நகுலன்குதிரைகள் கொல்லப்பட்டதைக்கண்டு மிக்கமனக்களிப்புற்ற சத்துருக்களுக்கு என்னால் பயமானது நன்கு உண்டுபண்ணப்பட்டது. அப்படிப்பட்ட நான், 'சத்துருவின்ரக்தத்தைக் குடிக்கிறேன்' என்று ப்ரதிஜ்ஞைசெய்தேன். ரக்தமானது தந்தத்தையும் உதட்டையும் தாண்டி உள்ளே செல்லவில்லை. அம்மா! நீ வியஸனப்படாதே. பிறனு

டைமீதாயிருந்தாலும் ரக்தம் குடிக்கத்தக்கதன்று. அவ்வாறிருக்க, தன்னுடைய ரக்தமானது குடிக்கத்தகாததென்பதில், ஸந்தேகம் என்ன? தானெப்படியோ அவ்வாறேதான் ப்ராதாவும். (அதில்) எவ்வித வித்யாஸமுமில்லை, வம்சத்தை ஆனந்தப்படுத்துகிறவளே! யமன் அதனை உள்ளபடி அறிகிறானன்றோ? அம்மா! அதனை மனத்தில் வையாதே. பாபமற்றவளே! அது என்னால் குடிக்கப்படவில்லை. சூதாட்டத்தினால் திரௌபதியினது கூந்தலைப்பிடித்து இழுத்தபொழுது நான் கோபத்தால் சொல்லியதும் என்னுடைய மனத்தில் இருக்கின்றது. ராஜபத்னி! அந்த ப்ரதிஜ்ஞையை நிறைவேற்றுமற்போவேனேயாகில் அநேகவருஷகாலம் க்ஷத்திரிய தருமத்தினின்று நழுவினவனாவேன். ஆதலால், நான் அதனைச் செய்தேன். கல்யாணி! தீங்கிழைத்தவரல்லாத எங்கள்விஷயத்தில் அக்ரமஞ்செய்தவர்களான புத்திரர்களை முன்பு அடக்காமல் என் மீது குற்றமிருப்பதாக நீ ஸந்தேகிப்பது தகாது" என்றான்.

காந்தாரி, "சத்துருக்களால் ஜயிக்கப்படாதவனான நீ முதியவரான இந்தத்திருதராஷ்டிரருடைய நூறு பிள்ளைகளையும் கொன்றாயே. சொற்பக்குற்றமுள்ளவனான ஒருவனையாவது ஏன் மிகுக்கவில்லை? அப்பா! பிராயமுதிர்ந்தவர்களும் ராஜ்யத்தை இழந்தவர்களுமான எங்களிருவர்களுடைய ஒரு ஸந்தானத்தை இரண்டு முதியவர்களுக்கு (ஊன்றுகோலான) ஒருதடியாக ஏன் நீ மிகுக்கவில்லை? ஐயா! நீ தர்மத்தைச் செய்திருந்து என்புத்திரர்களுள் (பலமுதலியன) குறைந்துள்ள ஒருவனாவது மிகுந்திருந்தாலும் இப்பொழுது துக்கமானது குறைவதாகும்.

---

## பதினைந்தாவது அத்யாயம்.

## ஜலப்ரதானிகபர்வம். (தொடர்ச்சி.)

(யுதிஷ்டிரர் முதலானவர்கள் காந்தாரியையும் குந்தியையும் வணங்கியதும் அவ்விருவரும் திரௌபதியைத் தேற்றியதும்.)

புத்ரபௌத்ரர்களுடைய வதத்தினால் பீடிக்கப்பட்டவளும் கோபமுள்ளவளுமான காந்தாரி அந்தப்பீமனை இவ்வாறுசொல்லிவிட்டு, 'அந்த அரசன் எங்கே?' என்று யுதிஷ்டிரரைப்பற்றி வினவினாள். குந்திபுத்திரரான யுதிஷ்டிரரோ நடுக்கமுற்றுக் கரங்குவித்து அந்தக்காந்தாரியிடம்வந்து, 'தேவி! உன்னுடையபுத்திரர்களைக் கொன்றவனும் க்ரூரனுமான யுதிஷ்டிரனென்கிறநான் சாபத்திற்குத் தகுந்த

வன்; பூமியின் நாசத்திற்கும் காரணமானவன். என்னைச்சபித்துவிடு. அப்படிப்பட்ட ஸுஹ்ருத்துக்களைக்கொன்று மிக்கஅறியாமையுள்ளவனும் ஸுஹ்ருத்துக்களுக்குத் துரோஹம்செய்தவனுமான எனக்கு உயிரினாலாவது ராஜ்யத்தினாலாவது ஸுகத்தினாலாவது பயனில்லை" என்று மதுரமானவாக்யத்தைச் சொன்னார். அரசரே ! இவ்வாறு சொல்லுகின்றவரும் பயந்தவரும் அப்பொழுது பக்கத்தையடைந்தவருமான அந்த யுதிஷ்டிரரைப்பார்த்துக் காந்தாரி பெருமூச்சுவிட்டுக்கொண்டு ஒன்றும் சொல்லவில்லை. தர்மங்களை அறிந்தவளும் தீர்க்காலோசனையுள்ளவளுமான அந்தத்தேவி, வணங்கினதேகத்துடன் கூடியவரும் கால்களில்விழப்போகிறவரும் அரசருமான அந்தயுதிஷ்டிரருடைய விரல்நுனிகளைத் தன்கண்களைமறைத்திருக்கும் பட்டுவஸ்திரத்தின் இடைவெளியினால் கண்டாள். பிறகு, அழகியநகங்களுள்ள அந்த அரசர் விகாரமான நகங்களுள்ளவராகிவிட்டார். அவரைக்கண்ட அர்ஜுனன் வாஸுதேவருடையபின்புறத்திற்சென்றான். பாரதரே ! இவ்வாறு இங்குமங்குமாக விலகுகின்ற அவர்களைக் காந்தாரியானவள் கோபத்தைவிட்டுத் தாய்போல ஸமாதானப்படுத்தினாள். விசாலமானமார்பையுடையவர்களான அந்தப்பாண்டவர்கள் காந்தாரியினால் அனுமதிகொடுக்கப்பட்டவர்களாக மாத்ஸர்யத்தைவிட்டு ஒன்றுசேர்ந்து தாயான குந்தியைநோக்கிச்சென்றார்கள். புத்திரர்கள்விஷயமான மனோவ்யாதிகளால் கவரப்பட்டவளான அந்தக்குந்திதேவி வெகுகாலத்திற்குப்பிறகு புத்திரர்களைக் கண்டு வஸ்திரத்தினால் முகத்தைமூடிக்கொண்டு கண்ணீர்சொரிந்தாள். பிறகு, குந்திதேவியானவள் புத்திரர்களோடு கண்ணீர்வடித்துச் சஸ்திரஸமூகங்களால் பலவாறு காயப்படுத்தப்பட்டஅந்தக்குமாரர்களைக் கண்டாள். அவள் அந்தப்புத்திரர்கள் ஒவ்வொருவரையும் அடிக்கடிதொட்டுத் துக்கத்தால் பீடிக்கப்பட்டவளாக (அவர்களைப் பற்றியும்) புத்திரர்கள்கொல்லப்பட்ட திரௌபதியைப்பற்றியும் மிக்க துயரமுற்றாள். பிறகு, பூமியில்விழுந்து அழுகின்ற பாஞ்சாலியைக் கண்டாள். திரௌபதிசொல்லலானாள். "பெரியவளே! அபிமன்யுவுடன்கூடிய உன்னுடையஎல்லாப்பௌத்திரர்களும் மாண்டார்கள். இகழப்படாதவளே ! உன்னை வெகுகாலத்துக்குப்பிறகு பார்த்து இப்பொழுது அவர்கள் எதிர்கொண்டுவரவில்லை. சிறந்த புத்திரர்களை இழந்தவளான எனக்கு ராஜ்யத்தினால் செய்யத்தக்கதுயாது ?" என்றாள். ரோதனம்செய்கிறவளும் சோகத்தினால் பீடிக்கப்பட்டவளும் நல்லபற்களையுடையவளுமான அந்தப்பாஞ்சாலியை விசாலமானகண்

களையுடைய குந்தியானவள் மடியில் தூக்கிவைத்துக்கொண்டு ஸமாதானஞ்செய்தாள். அந்தத்திரௌபதியுடன்கூடியவளும் புத்திரர்களால் பின்தொடரப்பட்டவளும் அதிகவியஸனத்தை அடைந்திருப்பவளுமான குந்தியானவள் வியஸனமுள்ளவளான காந்தாரியைத் தானே எதிர்நோக்கிச்சென்றாள். பிறகு, குந்தியுடன்கூடின காந்தாரி கீர்த்தியுள்ளவளான அந்தப்பாஞ்சாலியைப்பார்த்து, 'பெண்ணே! இவ்வாறு நீ சோகத்தினால் துன்பமுற்றவளாகாதே. துக்கமுடையவளான என்னையும் பார். காலபரம்பரையினால் தூண்டப்பட்டதும் மயிர்க்கூச்சத்தை உண்டுபண்ணுகின்றதும் அவசியம் ஏற்படக்கூடியதுமான இந்தலோகவிநாசமானது ஸ்வபாவத்தினால் வந்துவிட்டதென்று எண்ணுகிறேன். கிருஷ்ணனுடைய ஸமாதானம் பலிக்காமல் போனகாலத்தில் மகாபுத்திசாலியான விதுரர் எதைச்சொன்னாரோ அவருடைய மஹிமையுள்ள அந்தவசனமானது இதோ வந்துவிட்டது. தடுக்கமுடியாததும் விசேஷித்துச் சென்றுவிட்டதுமான அந்தக் காரியவிஷயத்தில் துக்கப்படாதே. யுத்தத்தில் நாசத்தை அடைந்தவர்களான அவர்கள் துக்கிக்கப்படத்தக்கவர்களல்லர். நான் எப்படியோ அப்படியே நீ. எவன் உன்னையும் என்னையும் தேற்றப்போகிறான்? என்னுடைய குற்றத்தினாலேயே' சிறந்தகுலம் நாசம் செய்யப்பட்டது." என்று கூறினாள்.

ஜலப்ரதானிகபர்வம் முற்றிற்று.

---

## பதினாறுவது அத்யாயம்.

## ஸ்திரீவிலாபபர்வம்

(காந்தாரி வியாஸரதருளால் ஞானக்கண்பெற்றுப் போர்க்களத்தைப் பார்த்ததும், திருதராஷ்டிரன் யுதிஷ்டிரர்முதலானவர்கள் ஸ்திரீகளோடு போர்க்களத்துக்குவந்ததும், மாதர்கள் அழுததும், காந்தாரி அதை வாஸுதேவருக்குக் காட்டியதும்.)

கற்புள்ளவளும் மஹாபாக்கியமுள்ளவளும் கணவனை ஒத்திருப்பதான விரதத்தை அனுஷ்டிப்பவளும் உக்கிரமான தவமுள்ளவளும் எப்பொழுதும் உண்மைபேசுகிறவளுமான காந்தாரி இவ்வாறு சொல்லிவிட்டு அவ்விடத்திலிருந்துகொண்டே கௌரவர்களுடைய போர்க்களமனைத்தையும் உள்ளது உள்ளபடி அச்சமயத்தில் கண்டாள். புண்யமானசெய்கையுள்ளவரும் மஹரிஷியுமான ஸ்ரீவியாஸருடைய வரதானத்தினால் திவ்யஞானபலத்தையடைந்து பற்

பலவிதமாகப் புலம்பினாள். புத்தியுள்ளவளான அந்தக் காந்தாரி ஆச்சரியகரமானதும் மயிர்பொடித்தலை உண்டுபண்ணுகின்றதும் எலும்புகளாலும் மயிர்களாலும் ஊனீர்களாலும் நான்குபக்கத்திலும் வியாபிக்கப்பட்டதும் ரக்தவெள்ளத்தினால் எங்கும் நிறைக்கப்பட்டதும் நாற்புறங்களிலும் அனேகஆயிரம்சரீரங்கள் விசேஷமாக இறைக்கப்பட்டுள்ளதும் யானைகள் குதிரைகள் ரதங்கள் யுத்தவீரர்கள் இவர்களுடைய ரக்தங்களால் நனைக்கப்பட்டதும் யானைகள் குதிரைகள் நரவீரர்கள் இவர்களின் உயிரை இழந்த தலைஇல்லாதசரீரங்களாலும் தேகமில்லாத தலைகளுடைய கூட்டங்களாலும் நான்குபக்கத்திலும் மூடப்பட்டதும் நரிகளுடையகூட்டங்களாலும் குள்ளநரிகளாலும் கழுகுகளாலும் காக்கைகளாலும்மடையப்பட்டதும் மனிதர்களைப்பக்ஷிக்கின்ற ராக்ஷஸர்களுக்கு ஸந்தோஷத்தை உண்டுபண்ணுகின்றதும் அன்றிற் பக்ஷிகளால் அங்குமிங்கும் வியாபிக்கப்பட்டதும் அமங்களகரமான நரிகளாலும் ஒலியுள்ளதாகச்செய்யப்பட்டதும் பெருங்கழுகுகளால் அடையப்பட்டதுமான அந்த வீரர்களுடையபோர்க்களத்தைத் தூரத்திலிருந்தாலும் ஸமீபத்திலிருப்பதுபோலக் கண்டாள். பிறகு, திருதராஷ்டிரன் வ்யாஸரால் அனுமதிகொடுக்கப்பட்டான். யுதிஷ்டிரரை முதன்மையாகக்கொண்ட அந்த எல்லாப் பாண்டுபுத்திரரும் வாஸுதேவரையும் பந்துக்கள்கொல்லப்பட்ட அரசனையும் முன்னிட்டுக்கொண்டும் கௌரவஸ்திரீகளையழைத்துக்கொண்டும் போர்க்களத்தைக்குறித்துச் சென்றார்கள். கணவர்கள்கொல்லப்பட்ட அந்த மாதர்கள் குருக்ஷேத்திரத்தை அடைந்து அந்த இடத்தில் கொல்லப்பட்டிருக்கின்றவர்களும் மாம்ஸாசிகளாலும் நரிகளுடைய கூட்டங்களாலும் காக்கைகளாலும் பூதங்களாலும் பிசாசங்களாலும் ராக்ஷஸர்களாலும் பற்பல நிசாசரர்களாலும் தின்னப்படுகின்றவர்களுமான புத்திரர்களையும் உடன்பிறந்தவர்களையும் தந்தைமார்களையும் கணவர்களையும் கண்டார்கள். அப்பொழுது அம்மாதர்கள் ருத்திரருடைய விளையாட்டிடத்திற்கொப்பான யுத்தரங்கத்தைக்கண்டு அன்றிற்பேடுகள்போலச் சோகத்தால் பீடிக்கப்பட்டவர்களாக அலறிக்கொண்டு கீழேவிழுந்தார்கள். துக்கத்தால் பீடிக்கப்பட்ட பாரதமகளிர் இதற்குமுன்பார்க்கப்பட்டிராத யுத்தபூமியைப்பார்த்தும் சரீரங்களில் தடுக்கியும் உயிரை இழந்தவர்கள்போலக் கீழேவிழுந்தார்கள். களைத்தவர்களும் நாதனற்றவர்களும் அப்பொழுது மிகக்கதறுகின்றவர்களுமான பாஞ்சாலமாதர்கள் கௌரவமங்கையர்கள் இவர்களின் பெரிதான அப்படிப்பட்ட தீனமான ரோதன

மானதுதோன்றியது. தர்மங்களையறிந்தவளான அந்தக் காந்தாரி, துக்கத்தால்பீடிக்கப்பட்ட சித்தத்தையுடைய ஸ்திரீகளால் நான்குபக்கத்திலும் சப்தமுள்ளதாகச்செய்யப்பட்டிருக்கின்றதும் அதியுக்ரமாயிருப்பதுமான யுத்தபூமியைக்கண்டு பிறகு புருஷோத்தமரான புண்டரீகாக்ஷரை அழைத்துக் கௌரவர்களுடைய ஆபத்தைக்கண்டு இவ்வசனத்தை உரைக்கலானாள்.

'ஓ! புண்டரீகாக்ஷ! மாதவா! வீர! பிரபுவே! கணவர் கொல்லப்பட்டவர்களும் விரித்தகூந்தலேயுடையவர்களும் அன்றிற்பேடுகள் போல அலறுகின்றவர்களுமான இந்த என் மருமக்களைப் பார். இவர்கள் நேரில் இவ்விடம்வந்து பரதசிரேஷ்டர்களை நினைத்துக்கொண்டு தனித்தனியாகவே பிள்ளைகளையும் உடன்பிறந்தார்களையும் தகப்பன்மார்களையும் கொழுனர்களையும் தேடிச்செல்லுகின்றார்கள். மிக்க புஜபலமுள்ளவனே! மைந்தர்களை மாளக்கொடுத்தவர்களான வீரமாதாக்களால் சூழப்பட்டதும் ஓரிடத்தில் வீரர்கள் மாண்ட வீரபத்னிகளால் சூழப்பட்டதும் புருஷசிரேஷ்டர்களும் ஜ்வலிக்கின்றஅக்கினி போன்றவர்களுமான கர்ணன், பீஷ்மர், அபிமன்யு, துரோணர், துருபதன், சல்யன் இவர்களால் விளங்குகின்றதும் பொற்கவசங்களாலும் பொன்முணயங்களாலும் மிகவும் விலையுயர்ந்தரத்னங்களாலும் அற்புதமான கையிலணிந்துகொண்டிருந்ததோள்வளைகளாலும் மாலைகளாலும் நன்றாயலங்கரிக்கப்பட்டதும் வீரர்களுடையகைகளால் ப்ரயோகிக்கப்பட்ட சக்திகளாலும் பரிகங்களாலும் கூர்மையான புறபல கத்திகளாலும் அம்புகளுடன்கூடின விற்களாலும் சூழப்பட்டதும் ஓரிடத்தில் ஸந்தோஷமுள்ளவைகளும் சேர்ந்துநிற்கின்றவைகளுமான ஊனுண்ணும் பிராணிகளுடைய கூட்டங்களாலும் ஓரிடத்தில் விளையாடுகின்றவைகளும்ஓரிடத்தில் படுத்துக்கொண்டிருப்பவைகளுமான மற்றவைகளாலும் வ்யாபிக்கப்பட்டதுமாக இவ்விதமிருக்கின்ற இந்த யுத்தபூமியைப்பார். செந்தாமரைக்கண்ணனே! மிக்ககாந்தியுள்ளவனே! உன்னால் யுத்தகார்யமானது கேட்கும்படிசெய்யப்பட்டது. ஜனார்த்தன! மதுஸூதன! நான், பார்த்துச் சோகத்தால் எரிக்கப்படுகிறேன். நான், பாஞ்சாலர்கள் கௌரவர்கள் இவர்களின்னாசத்தை ஐந்துபூதங்களுடைய வதமென்றே எண்ணினேன். ரக்தத்தால் நனைக்கப்பட்டிருக்கின்றஅவர்களைக் கருடன்களும் கழுகுகளும் இழுக்கின்றன; ஆயிரக்கணக்கான கழுகுகள் கால்களால் இழுத்துத்தின்னுகின்றன. ஜயத்ரதன், கர்ணன், துரோணர், பீஷ்மர், அபிமன்யு இவர்களுடைய நாசத்தை எவன் நினைப்பதற்குத்தகுதியுள்ளவன்? பெரும்பான்மை

யாகக் கொல்லப்படமுடியாதவர்களும் கொல்லப்பட்டவர்களும் பலத்தைஇழந்தவர்களும் பிரஜ்ஞையை இழந்தவர்களும் க்ருத்ரங்களாலும் கங்கங்களாலும் காகங்களாலும் ஸ்யேனங்களாலும் நாய்களாலும் நரிகளாலும் சூழப்பட்டவர்களும் கோபத்திற்குவசப்பட்டவர்களும் துர்யோதனனுடைய வசத்தில் இருந்தவர்களும் நன்றாகத்தணிந்தநெருப்புப்போன்றவர்களுமான இந்தப் புருஷஸ்ரேஷ்டர்களைப்பார். எல்லோரும் மெதுவாயும் பரிசுத்தமாயுமுள்ள படுக்கைகளில் படுத்துப்பழகினவர்கள். அவர்கள் இப்பொழுது விபத்தை அடைந்து மூடப்படாத தரையில் படுத்திருக்கின்றார்கள். காலத்தில் ஸ்தோத்திரம்செய்கின்ற ஸ்துதிபாடகர்களாலே எப்பொழுதும் மகிழ்விக்கப்பட்டிருக்கின்ற வீரர்கள் நரிகளுடைய அமங்களகரமாயும் கோரமாயும் பற்பலவிதமாயுமுள்ளசத்தங்களைக் கேட்கிறார்கள்; புகழ்பெற்றவர்களான எந்த வீரர்கள் முன்பு சந்தனங்களாலும் அகிற்சாந்துகளாலும் பூசப்பட்ட அங்கங்களுடன் படுக்கைகளில் படுத்திருப்பார்களோ அவர்கள் இப்பொழுது புழுதிகளில் படுத்திருக்கிறார்கள். கோரமான இந்தக்குள்ளநரிகளும் கழுகுகளும் நரிகளும் காக்கைகளும் அடிக்கடிசப்தித்துக்கொண்டு அவர்களுடைய ஆபரணங்களைப் பற்றியிழுக்கின்றன. யுத்தத்தில் பற்றுள்ளவர்களான எல்லாரும் உயிரோடிருப்பவர்கள்போலவே பாணங்களையும் நன்றாகத் தீட்டப்பட்டவைகளும் துலைந்தவைகளுமான கத்திகளையும் பளபளப்பான கதைகளையும் வகிக்கின்றார்கள். நல்ல உருவமுள்ளவர்களும் நிறமுள்ளவர்களும் காளைகளுடைய கண்களுக்கு ஒப்பான கண்களையுடையவர்களுமான அனேகவீரர்கள் ஆயிரக்கணக்காக மாம்ஸாசிகளான பிராணிகளால் பிடுங்கப்பட்டவர்களாகப் படுத்திருக்கிறார்கள். பரிகம்போன்ற கைகளையுடையவர்களான மற்றச்சூரர்களோ ப்ரியமான ஸ்திரீகளைக் கட்டிக்கொள்வதுபோலக் கதைகளைக் கட்டிக்கொண்டு அவற்றை நோக்கினவர்களாகப்படுத்திருக்கின்றார்கள். ஜனார்த்தன! மற்றும்சிலர் கவசங்களையும் மாசற்ற ஆயுதங்களையும் தரித்துக்கொண்டிருக்கின்றார்கள். ஊனுண்பவைகள் (இவர்கள்) ஜீவித்திருக்கிறார்களென்றெண்ணி ஹிம்ஸிக்கவில்லை. மாம்ஸாசிகளால் இழுக்கப்படுகின்ற மற்ற மஹாத்மாக்களுடைய பொன்மயமாயும் விசித்திரமாயுமுள்ள மாலைகள் நான்கு பக்கத்திலும் இறைக்கப்பட்டிருக்கின்றன. பயங்கரமான இந்த நரிகள் கொல்லப்பட்டிருக்கின்ற புகழுள்ளவர்களான வீரர்களுடைய கழுத்திலுள்ள ஹாரங்களை ஆயிரக்கணக்காக இழுக்கின்றன. வ்ருஷ்ணிகுலத்திலுதித்தோர்களுள் சிறந்தவனே! கற்பிக்கப்

பட்டவர்களான வந்திகள் விடியற்காலங்களிலெல்லாம் எவர்களைச் சிறந்த ஸ்தோத்திரங்களாலும் உபசாரங்களாலும் ஸ்தோத்திரம் செய்தார்களோ' அவர்களைக் குறித்து இப்பொழுது துக்கத்தால் பீடிக்கப்பட்டவர்களும் எளிமையுற்றவர்களும் துக்கத்தாலும் சோகத்தாலும் மிகவும் பீடிக்கப்பட்டவர்களுமான உத்தமஸ்திரீகள் புலம்புகின்றார்கள். கேசவ! அழகியவைகளும் வறண்டவைகளுமான உத்தமஸ்திரீகளுடைய முகங்கள் சிவந்த தாமரைக் காடுகள்போல விளங்குகின்றன. இந்தக் கௌரவஸ்திரீகள் அழுது ஓய்ந்தவர்களாகவும் சிந்திக்கின்றவர்களாகவும் சிரமத்தையுடையவர்களாகவும் துக்கத்தை அடைந்தவர்களாகவும் அந்த அந்த வீரனையேநோக்கிச்செல்லுகின்றார்கள். ஆதித்யனுடைய வர்ணமுள்ளவைகளும் ஸ்வர்ணத்துக்கு ஒப்பானவைகளும் அழுகையினால் சிவந்திருப்பவைகளுமான கௌரவமாதர்களுடைய இந்தமுகங்களைப் பார். கேசவ! யௌவனத்திலிருப்பவர்களும் சிறந்த நிறமுள்ளவர்களும் வெண்மை நிறமுள்ளவர்களும் ஒற்றைவஸ்திரம் தரித்தவர்களுமான துர்யோதனனைச்சார்ந்த உத்தமஸ்திரீகளுடைய கூட்டங்களைப் பார். இந்தப் பெண்களுடைய பொருள்நிரம்பாத புலம்பல்களைக் கேட்டு ஒருவர் ஒருவருடைய புலம்பலை அறியவில்லை. துக்கிக்கின்ற இம்மங்கையரைப் பார்த்து வீரர்கள் பெருமூச்சு விட்டுக்கொண்டும் அதிகமாக அலறிஅழுதுகொண்டும் துக்கத்தினால் துடித்துக்கொண்டும் உயிரை விடுகிறார்கள். பலமாதர்கள் சரீரங்களைக்கண்டு அழுகிறார்கள்; புலம்புகின்றார்கள். மெதுவான கைகளையுடையவர்களான மற்றவர்கள் கைகளால் தலைகளில் அடித்துக்கொள்ளுகின்றார்கள். பூமியானது, வீழ்ந்திருக்கிற தலைகளாலும் கைகளாலும் துண்டம்துண்டமாகச் செய்யப்பட்டவைகளும் ஒன்றோடொன்று சேர்ந்திருப்பவைகளுமான எல்லாஅங்கங்களாலும் வியாபிக்கப்பட்டதாக விளங்குகிறது. பிறகு, (யுத்தத்தைப் பார்த்த) பழக்கமில்லாதஸ்திரீகள், தலையில்லாதவைகளும் புகழப்பட்டவைகளுமான இந்தச்சரீரங்களையும், தேகமில்லாத தலைகளையும் கண்டு மதிமயக்கத்தை அடைகிறார்கள். இந்த ஸ்திரீகள், அந்தவிடத்தில் தலையைக்காணமல் வேறு தலையை உடலுடன் சேர்த்துப் பார்க்கின்றவர்களாகவும் மனநிலைதவறினவர்களாகவும் இது இவனுடையதன்றென்று துக்கத்தை அடைகிறார்கள். இந்த ஸ்திரீகள், தலைஇல்லாதவர்களும் வெவ்வேறாகப் பாணங்களால் வெட்டப்பட்டவர்களுமான (இவர்களுடைய) கைகளையும் தொடைகளையும் கால்களையும் மற்றவைகளையும் ஒன்றுசேர்த்துப்

பார்க்கின்றவர்களாகவும் துக்கத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டவர்களாக வும் அடிக்கடி மூர்ச்சையை அடைகின்றார்கள். சில பாரதஸ்திரீகள், தலை அறுக்கப்பட்டவர்களும் மிருகங்களாலும் பக்ஷிகளாலும் தின்னப்பட்டவர்களுமான வேறுசில மனிதர்களைக்கண்டு பர்த்தாக்களென்று அறிகிறார்களில்லை. மதுஸூதன! சில பாரதஸ்திரீகள் சத்துருக்களால் கொல்லப்பட்டிருக்கிற உடன்பிறந்தார்களையும் தந்தையர்களையும் பிள்ளைகளையும் கணவர்களையும் கண்டு கைகளால் தலைகளில் அடித்துக்கொள்ளுகிறார்கள். பரதஸ்ரேஷ்டனே! *பூமியானது மாம்ஸங்களுடன்கலந்த ரக்தத்தினால் சேறுள்ளதும் உயிரை இழந்த பிராணிகளாலும் கத்திகளுடன்கூடின கைகளாலும் குண்டலங்களுடன்கூடின தலைகளாலும் பெரும்பாலும் பிரவேசிக்கமுடியாததுமாயிற்று. முன்பு துக்கங்களையறியாதவர்களான உத்தமஸ்திரீகள், பிராதாக்களும் பர்த்தாக்களும் புத்திரர்களும் அருகில் சிதறிக்கிடக்கிற பூமியில் துக்கத்துடன் பிரவேசிக்கிறார்கள். ஜனார்த்தன! பெண்குதிரைகளுடைய கூட்டங்களைப்போல அழகியகூந்தலையுடையவர்களான திருதராஷ்டிரருடைய மருகிகளின் பலவாறான கூட்டங்களைப் பார். கேசவ! இந்தப்பெண்கள் எல்லாரும் பற்பல விதமாக அலறுகிறார்களென்னும் இதைவிட அதிகதுக்ககரமானது எனக்கு என்னஇருக்கிறதென்று தோன்றுகிறது? மாதவ! நான், கொல்லப்பட்டிருக்கிற புத்திரர்களையும் பேரர்களையும் உடன்பிறந்தார்களையும் பார்க்கிறேனாதலால் என்னால் முன்ஜன்மங்களில் நிச்சயமாகப் பாவம்செய்யப்பட்டிருக்கவேண்டும்' என்றாள். புத்திரசோகத்தால் வருத்தப்பட்ட காந்தாரி தீனையாக இவ்வண்ணம் புலம்பி ஜனார்த்தனரைப் பார்த்துப் பேசிப் பிறகு கொல்லப்பட்ட புத்திரனைக் கண்டாள்.

---

## பதினேழாவது அத்யாயம்.

## ஸ்திரீவிலாபபர்வம். (தொடர்ச்சி.)

(காந்தாரி துர்யோதனனைக் கட்டிக்கொண்டு மாதவரிடத்தில் புலம்பியது.)

கொல்லப்பட்டிருக்கிற துர்யோதனனைப் பார்த்துக் காந்தாரியானவள் சோகத்தினால் பீடிக்கப்பட்டவளாகிக் காட்டில் வெட்டப்பட்ட வாழைமரம்போலப் பூமியில் உடனே விழுந்தாள். அந்தக்

---

* பொருந்தாமையால் ஒருவிளிவிடப்பட்டது.

காந்தாரீ மீண்டும் பிரஜ்ஞையை அடைந்து உரக்க அலறியும் புலம்பியும், படுத்திருப்பவனும் ரக்தத்தினால் நனைக்கப்பட்டவனுமான துர்யோதனனைப் பார்த்துக் கட்டி அணைத்துக்கொண்டு தீனமாக அழுதாள். சோகத்தினால் பீடிக்கப்பட்டவளும் பொறிகள் கலங்கினவளுமான அந்தக்காந்தாரி, 'ஆ! ஆ! மகனே!' என்று புலம்பினாள். சோகத்தினால் வாட்டப்பட்டவளான அவள், அழகியதும் மறைந்திருக்கின்ற தோள்எலும்புடன் கூடியதும் விசாலமானதும் ஹாரங்களாலும் ஸ்வர்ணாபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டதுமான மார்பைக் கண்ணிலுண்டான கண்ணீரினால் நனைத்துக்கொண்டு ஸமீபத்தில் இருக்கிற ஹ்ருஷீகேசரைப் பார்த்து இந்தவசனத்தை உரைக்கலானாள். "பிரபுவே! விருஷ்ணிவம்சத்தில் உதித்தவனே! ஞாதிகளுக்கு முழுதும் நாசத்தை உண்டுபண்ணுகிறதான இந்தயுத்தம் ஸமீபித்தகாலத்தில் ராஜசிரேஷ்டனான இந்தத்துர்யோதனன் கைகுவித்துக்கொண்டு என்னைப்பார்த்து, 'அம்மா! இந்தஞாதிகளுடைய சண்டையில் எனக்கு ஜயத்தைக்கூறவேண்டும்' என்றுசொன்னான். ஆண்மையிற்சிறந்தவனே! இவ்வண்ணம் சொல்லப்பட்டவுடன், எனக்கு வரப்போகிற வியஸனமனைத்தையும் அறிந்தவளான நான், 'எங்கு தர்மமோ அங்குஜயம்' என்று சொன்னேன். 'நல்ல என்னருமை மைந்த! பிரபுவே! அவ்வாறு நிச்சயங்கொண்டு யுத்தம்செய்கின்ற நீ தேவனைப்போலச் சஸ்திரங்களால் ஜயிக்கப்பட்டலோகங்களை அடைவாய்; இது நிச்சயம்' என்று இவ்வாறாக முன்பு உரைத்தேன். பிரபுவே! இவனைப்பற்றி நான் வியஸனப்படவில்லை. ஆனால், பந்துக்கள் கொல்லப்பட்டவரும் தீனருமான திருதராஷ்டிரரைப்பற்றியன்றோ நான் துக்கிக்கிறேன். மாதவ! கோபமுள்ளவனும் யுத்தம் செய்பவர்களுள் சிறந்தவனும் அஸ்திரங்களில் தேர்ச்சிபெற்றவனும் யுத்தத்தில் அடங்காத மதங்கொண்டவனும் வீரசயனத்தில் படுத்திருக்கின்றவனுமான என்புதல்வனைப் பார். சத்துருக்களைத் தவிக்கச்செய்பவனும் முடிசூடினமன்னர்களுக்கு முன்னே செல்பவனுமான இந்தத்துரியோதனன் இப்பொழுது புழுதிகளில் படுத்திருக்கிறான். காலத்தினுடைய மாறாட்டத்தைப் பார். வீரர்களால் விரும்பப்பட்ட படுக்கையில் நிமிர்ந்து படுத்திருக்கிறானாதலால் வீரனான துரியோதனன் எளிதில் அடையமுடியாத கதியை அடைந்தான்; இது நிச்சயம். முற்காலத்தில் அரசர்கள் எவனை அணுகி உபசரித்து மகிழ்விப்பார்களோ வீரசயனத்தில் படுத்திருக்கிறஅவனைக் கழுகுகள் நாற்பக்கங்களிலும் வந்துநாடுகின்றன. அவனை

முன்பு மங்கையர்கள் மனத்தைக்கவரும் விசிறிகளால் வீசுவார்களோ அவனை இப்பொழுது பக்ஷிகள் சிறகுக்காற்றுக்களால் வீசுகின்றன. நீண்டகைகளுள்ளவனும் பலசாலியும் உண்மையான வல்லமையுள்ளவனுமான இந்தத்துர்யோதனன் ஸிம்மத்தினால் யானைபோல் யுத்தத்தில் பீமஸேனனால் விழும்படி செய்யப்பட்டுப் படுத்திருக்கிறான். கிருஷ்ணா! கதையை நன்றாகத் துடைத்துக்கொண்டு *பீமஸேனனால் கொல்லப்பட்டிருக்கிறவனும் ரக்தத்தினால் நனைக்கப்பட்டவனும் படுத்திருப்பவனுமான துர்யோதனனைப் பார். கேசவ! மகாபாகுபலமுள்ளவனான எவன் முன்பு பதினோர் அக்ஷௌஹிணிகளை அழைத்துவந்தானோ அவன் இப்பொழுது யுத்தத்தில் அநீதியினால் நாசமடைந்தான். பெரியவில்லையுடையவனும் மஹாபலசாலியுமான இந்தத்துர்யோதனன் ஸிம்மத்தினால் புலி தள்ளப்படுவதுபோலப் பீமஸேனனால் தள்ளப்பட்டுப் படுத்திருக்கிறான். சிறுவனும் மந்தர்களை அடைந்தவனும் மந்தனுமான இவன் விதுரரையும் பிதாவையும் அவமதித்து விருத்தர்களுடைய அவமானத்தினால் மிருத்யுவினுடைய வசத்தை அடைந்தான். பூமியானது எவனுடையவசத்தில் சத்துருக்களில்லாததாகப் பதின்மூன்று வருஷகாலமிருந்ததோ அப்படிப்பட்ட அரசனான என்புத்திரன் கொல்லப்பட்டுப் பூமியில்படுத்திருக்கிறான். விருஷ்ணிகுலத்திலுதித்தவனே! கிருஷ்ணா! பூமியைத் தார்த்தராஷ்டிரனால் ஆளப்பட்டதாகவும் யானைகளாலும் பசுக்களாலும் குதிரைகளாலும் நிறைந்ததாகவும் கண்டேன். ஆனால், அதனை நெடுங்காலம் நான் பார்க்கவில்லை. மஹாபாகுபலமுள்ளவனே! அதேபூமியை இப்பொழுது அன்யர்களாலாளப்பட்டதாகவும் யானைகளாலும் பசுக்களாலும் குதிரைகளாலும் விடுபட்டதாகவும் பார்க்கிறேன். மாதவ! நான் எதற்காகப் பிழைத்திருக்கிறேன்? இந்தஸ்திரீகள், யுத்தரங்கத்தில் கொல்லப்பட்டிருக்கின்ற சூரர்களைச் சூழ்ந்திருப்பதாகிய, என்புத்திரனுடைய வதத்தைக்காட்டிலும் அதிககஷ்டமான இதைப் பார். க்ருஷ்ண! விரித்தகூந்தலையுடையவளும் அழகியஇடையையுடையவளும் பொன்னாலாகிய வேதிக்கொப்பானவளும் துர்யோதனனுடைய தோள்நடுவை * அடைந்தவளுமாயிருக்கின்ற லக்ஷ்மணனுடைய தாயைப்பார். நல்லமனமுள்ளவளான இந்தச்சிறுபெண், முன்புபெரிய தோள்களுள்ளவனான துர்யோதனன் ஜீவித்திருக்குங்காலத்தில், அழகியகைகளையுடையவனான அந்தத் துரியோதனனுடைய இருகைகளையுமடைந்து சுகித்தாள்; நிச்சயம். யுத்தத்தில் பேரனோடுகூடக்

---

ஒருசொல் விடப்பட்டது.

கொல்லப்பட்டிருக்கின்ற புத்திரனைப்பார்க்கின்ற என்னுடைய இவ்வுள்ளமானது ஏன் நூறுதுண்டுக்காகச் சிதறிப்போகவில்லை? இகழப்படாதவளும் அழகிய தொடைகளுள்ளவளுமான(இவள்) ரக்தத்தால் நன்றாக நனைக்கப்பட்டிருக்கின்ற புத்திரனை முகர்ந்து (பார்த்துக்) கொண்டும் துரியோதனனைக் கையினால் நாற்பக்கத்திலும் தடவிக்கொண்டுமிருக்கிறாள். நல்லமனமுள்ளவளான அவள் பர்த்தாவைப் பற்றித் துக்கப்படுவளா? கொல்லப்பட்டிருக்கின்ற புத்திரனைப்பற்றித் துக்கிப்பளா? அவள் (பர்த்தாவையும்) புத்திரனையும் நேரில்பார்த்து அப்படிப்பட்ட நிலைமையையடைந்தவளாக விளங்குகிறாள். மாதவ! நீண்டகண்களையுடையவளான இவள் இரண்டுகைகளாலும் தன் தலையிலடித்துக்கொண்டு வீரனான குருராஜனுடைய மார்பில் விழுகிறாள். வெண்டாமரைபோன்றவளும் செந்தாமரைமலரின் நடுவிலுள்ள காந்திக்குச் சமமான காந்தியையுடையவளும் இரக்கப்படத்தக்கவளுமான இந்தப்பெண் மகன் கொழுநன் இவர்களின் முகத்தைத் துடைத்துக்கொண்டு விளங்குகிறாள். சாஸ்திரங்கள் ஸத்யமாயிருக்குமாகில் அவ்வாறே வேதங்களும் ஸத்யமாயிருக்குமாகில், இந்த அரசன் தன்தோள்வன்மையால் ஸம்பாதிக்கப்பட்ட உலகங்களை அடைந்தானென்பது நிச்சயம்.

## பதினெட்டாவது அத்யாயம்.

## ஸ்திரீவிலாபபர்வம். (தொடர்ச்சி.)

(காந்தாரீ மாதவரிடம் புலம்பியது.)

மாதவ! (யுத்தத்தில்) ஸ்ரமமடையாதவர்களும் யுத்தத்தில் பீமஸேனனால் கதாயுதத்தினால் பெரும்பான்மையாகக் கொல்லப்பட்டவர்களுமான என்னுடைய நூறுபிள்ளைகளையும்பார். பிள்ளைகள் கொல்லப்பட்டவர்களும் சிறுமிகளுமான என்னுடையமருமக்கள் கூந்தலை விரித்துக்கொண்டு போர்க்களத்தில் நான்குபக்கத்திலும் ஓடுவது எனக்கு இப்பொழுது அதிகமான துக்கமன்றோ? பூஷணங்களையணிந்தகால்களாலே உப்பரிகைகளில் ஸஞ்சரிக்கின்றவர்களான என்மருகிமார்கள் இப்பொழுது ரக்தத்தால் நனைந்திருக்கின்ற இந்தப்பூமியை உடம்பினால் தொடுகின்றார்கள். துக்கத்தால் பீடிக்கப்பட்டவர்களும் மதங்கொண்டவர்கள்போலச் சுழலுகின்றவர்களுமான இந்தப்பெண்கள் கழுகுகளையும் நரிகளையும் காக்கைகளையும் பிரயாஸத்தினால் ஓட்

டிக்கொண்டு திரிகின்றார்கள். பிடியில் அடங்கும் இடையுள்ளவளும் தோஷமற்ற அங்கங்களுள்ளவளுமான இந்தவேறொருபெண் கோரமான யுத்தகளத்தைக்கண்டு அதிகதுக்கத்துடன் கீழேவிழுகிறாள். மஹாபாகுபலமுள்ளவனே ! ராஜபுத்திரியும் லக்ஷ்மணனுக்குத்தாயும் க்ஷத்திரியப்பெண்ணுமான இவளைப்பார்த்து என்மனத்திற்கு ஆறுதல் உண்டாகவில்லை. வேறான இந்தப்பெண்கள் பூமியில் கொல்லப்பட்டிருக்கின்ற உடன்பிறந்தார்களையும் தகப்பன்மார்களையும் பிள்ளைகளையும்பார்த்து (அவர்களின்) மிகப்பெரிய புஜங்களைப் பிடித்துக்கொண்டு நாற்பக்கங்களிலும் விழுகிறார்கள். பகைவரால் ஜயிக்கப்படாதவனே ! பயங்கரமான யுத்தத்தில் உறவினர்கள்கொல்லப்பட்டவர்களான நடுவயதிலுள்ளமாதர்கள் பிராயம்சென்றமாதர்கள் இவர்களின் அழுகையைக் கேள். நீண்டகைகளையுடையவனே ! ரதங்களின்கூடுகளையும் கொல்லப்பட்ட யானைகுதிரைகளுடைய சரீரங்களையும் பிடித்துக்கொண்டு ஸ்ரமத்தாலும் மோகத்தினாலும் பீடிக்கப்பட்டு நிற்கின்ற ஸ்திரீகளைப்பார். கிருஷ்ண! மற்றொருத்தி, உடலினின்று அறுக்கப்பட்டதும் அழகிய குண்டலங்களுடன்கூடியதும் உயர்ந்தமூக்குள்ளதுமான தன்பந்துவினுடைய தலையை (கையில்) எடுத்துக்கொண்டு நிற்கிறாள் ; பார். தோஷமற்றவனே! ஜனார்த்தன ! தர்மராஜனால் நம்முடைய இந்தவம்சம் நாசம்பண்ணப்பட்டமையால் தோஷமற்றவர்களான இந்தப்பெண்களாலும் புண்யம்குறைந்தவளான என்னாலும் பூர்வஜன்மத்தில் *அதிகமானபாவம் பண்ணப்பட்டதென்றெண்ணுகிறேன். வ்ருஷ்ணிவம்சத்திலுதித்தவனே ! நல்வினைதீவினை இவ்விரண்டுக்கும் அழிவில்லை. யௌவனப்பிராயம் வந்தவர்களும், அழகிய கொங்கைகளும் முகங்களுமுள்ளவர்களுமான இந்தப்பெண்களைப் பார். மாதவ ! நற்குலங்களிலுதித்தவர்களும் வெட்கமுள்ளவர்களும் கறுத்தஇமைமயிர்களையும் விழிகளையும் கூந்தல்களையுமுடையவர்களும் அன்னபக்ஷிபோலத்தழுதழுத்துப்பேசுகிறவர்களும் துக்கத்தினாலும் சோகத்தாலும் அதிகமதிமயக்கம்கொண்டவர்களுமான இந்தப் பெண்கள் ஸாரஸப்பேடுகள்போல் அலறிக்கொண்டு கீழேவிழுந்துவிட்டார்கள் ; பார். செந்தாமரைமலரைப்போன்றகண்களையுடையவனே! கிரணங்களுடன்கூடின இந்தஸூர்யன் மலர்ந்ததாமரைமலர்கள்போல் பிரகாசிக்கின்றவையும் தோஷமற்றவையுமான பெண்களுடையமுகங்களை வாட்டுகிறான். வாஸுதேவ ! மதயானைபோல் அகங்காரமுள்ளவர்களும் பொறாமையுள்ளவர்களுமான என்புத்திரர்களுடைய அந்தப்புரஸ்திரீகளை இப்பொழுது ஸாமானியஜனங்களும் பார்க்

கின்றார்கள். கோவிந்த! நன்றாகஹோமம்செய்யப்பட்ட அக்னிகள் போலப் பூமியில் ஜ்வலிப்பவைகளும் என்புத்திரர்களுடையவைகளுமான நூறுசந்திரப்பிரதிமைகளுடன்கூடின இந்தக்கேடகங்களையும் ஸூர்யன்போல் ஜ்வலிக்கின்ற த்வஜங்களையும் பொற்கவசங்களையும் பொன்மயமானகழுத்தணிகளையும் தலைப்பாகைகளையும் பார். சத்துருக்களைக் கொல்கின்றவனும் சூரனுமான பீமனாலே இதோ துச்சாஸனன், ரக்தம்குடிக்கப்பட்ட எல்லா அங்கங்களுடனுங்கூடினவனாகயுத்தத்தில் தள்ளப்பட்டுப் படுத்திருக்கிறான். மாதவ! சூதாட்டத்தாலுண்டான க்லேசங்களை நினைத்துத் திரௌபதியினால் தூண்டப்பட்ட பீமஸேனனால் கதையினால் (தள்ளப்பட்ட) என் புத்திரனைப் பார். ஜனார்த்தன! ப்ராதாவுக்கும்கர்ணனுக்கும் ப்ரியத்தைச்செய்யவிருப்பமுள்ள இந்தத்துச்சாஸனனால் சூதாட்டத்தால் ஜயிக்கப்பட்ட பாஞ்சாலியானவள், 'ஓ! பாஞ்சாலி! ஸஹதேவனோடும் நகுலனோடும் அர்ஜுனனோடுங்கூடவே அடிமையாகிவிட்டாய். எம்முடைய அரண்மனையில் சீக்கிரமாக நுழை' என்று ஸபையில் சொல்லப்பட்டாள். கிருஷ்ண! பிறகு, நான் அப்பொழுது துர்யோதனராஜனைப்பார்த்து, 'புத்திர! ம்ருத்யுபாசமாக அகப்பட்டிருக்கின்ற திரௌபதியை விட்டுவிடு. இந்த உன்மாமனை மிக்க கெட்டபுத்தியுள்ளவனென்றும் கலகப்பிரியனென்றும் தெரிந்துகொள். புத்ர! இவனைச் சீக்கிரம்விட்டுவிட்டுப் பாண்டவர்களோடு ஸமாதானஞ்செய்துகொள். கெட்டபுத்தியுள்ளவனே! கொள்ளிக்கட்டைகளால் யானையைச் சுடுவதுபோலக் கூர்மையான வாக்காகிற நாராசங்களாலே அதிககோபமுள்ள பீமஸேனனைத் துன்பம்செய்கிறாய். நீ (அவனை) அறியவில்லை' என்றுசொன்னேன். அவ்வாறான அந்தவாக்குச்சல்யங்களை மனத்தில் தரித்துக்கொண்டவனும் இரகசியத்தில் குரோதமுள்ளவனுமான பீமன் ஸர்ப்பமானது பெரிய காளைகளின்மீது விஷத்தைக் கக்குவதுபோல அந்தத் துரியோதனன் முதலான கௌரவர்களின்மீது (குரோதமாகிற) விஷத்தைக்கக்கினான். ஸிம்மத்தினால் பெரிய யானைகொல்லப்படுவதுபோலப் பீமஸேனனால் கொல்லப்பட்ட இந்தத் துச்சாஸனன் பெரியகைகளைவிரித்துக்கொண்டு படுத்திருக்கிறான். அளவுக்குமிஞ்சின கோபங்கொண்டவனான பீமஸேனன் குரோதத்தினால் யுத்தத்தில் துச்சாஸனனுடையரக்தத்தைக் குடித்தானதலால் மிகவும் பயங்கரமானகார்யத்தைச்செய்தான்.

## பத்தோன்பதாவது அத்யாயம்.

## ஸ்திரீவிலாபபர்வம். (தொடர்ச்சி.)

(காந்தாரீ புலம்பல் தொடர்ச்சி.)

மாதவ ! கற்றறிந்தவர்களால் நன்கு மதிக்கப்பட்டவனும் என்னுடைய புத்திரனுமான இந்தவிகர்ணன் பீமனால் நூறுதுண்டாகச் செய்யப்பட்டுப் பூமியில் படுத்திருக்கிறான். மதுஸூதன ! சரத்காலத்தில் கார்மேகத்தால் சூழப்பட்டசந்திரன்போல விகர்ணன் யானைகளுடையமத்தியில் கொல்லப்பட்டவனாகப் படுத்திருக்கிறான். விற்பிடித்ததினாலேயே உண்டுபண்ணப்பட்ட தழும்புள்ளதும் பெரிதுமானஇவனுடைய கையுறையுடன்கூடின கையானது, தின்னக்கருதியகழுகுகளால்அதிகபிரயாஸத்தினால் துண்டாடப்படுகிறது.மாதவ! சிறுபிராயமுள்ளவளும் இரக்கப்படத்தக்கவளுமான இவனுடைய மனைவி மாம்ஸத்தைத் தின்னவிரும்பிய கழுகுகளையும் காக்கைகளையும் ஓயாமல் ஓட்டுகிறாள். ஆனால், இயலவில்லை. புருஷோத்தம! மாதவ ! யௌவனமுள்ளவனும் தேவனுக்கு ஒப்பானவனும் ஸுகமாகவஸித்தவனும் ஸுகத்துக்குத் தகுந்தவனுமான விகர்ணன் புழுதிகளில் படுத்திருக்கிறான். கர்ணிகளாலும் நாளீகங்களாலும் நாராசங்களாலும் யுத்தத்தில் உயிர்நிலைகள் பிளக்கப்பட்டவனும் பரதர்களுள் சிறந்தவனுமான இவனை லக்ஷ்மியானவள் இன்னும் விடவில்லை. யுத்தத்தில் பகைவர்களுடைய கூட்டத்தைக் கொல்லுகிறவனை இந்தத்துர்முகன், யுத்தத்தில் சூரனும் பிரதிஜ்ஞையைப் பரிபாலனம் செய்யப்போகிறவனுமான பீமனால் கொல்லப்பட்டு நிமிர்ந்து படுத்திருக்கிறான். கிருஷ்ண ! அப்பா ! துஷ்டமிருகங்களால் பாதிக்கு அதிகம் தின்னப்பட்டிருக்கிற அவனுடைய இந்தமுகமானது ஸப்தமியில் சந்திரன்போல விளங்குகிறது. கிருஷ்ண ! யுத்தத்தில் சூரனான இந்தத் துர்முகனுடைய இப்படிப்பட்ட முகத்தைப் பார். அப்படிப்பட்ட என்னுடைய புத்திரன் எவ்வாறு சத்துருக்களால் கொல்லப்பட்டுப் புழுதிகளைக் கவ்வுகிறான். காண்டற்கினியவனே! எவனுடைய யுத்தத்தில் எதிர்த்துநிற்பவன் ஒருவனும்இல்லையோ தேவலோகத்தை ஜயித்தவனான அந்தத்துர்முகன் எவ்வாறு சத்துருக்களால் கொல்லப்பட்டான் ? மதுஸூதன ! திருதராஷ்டிரருடைய புத்திரனும் வில்லாளிகளுக்கு உபமானமாக இருப்பவனும் கொல்லப்பட்டுப் பூமியில் படுத்திருப்பவனுமான இந்தச் சித்திர

ஸேனனைப் பார். சித்திரமான மாலைகளையும் ஆபரணங்களையும் அணிந்தவனான அந்தச் சித்திரஸேனனைச் சோகத்தினால் பீடிக்கப்பட்டிருக்கிற யுவதிகள் அழுதுகொண்டு ஊனுண்ணும்ஜந்துக்களின் கூட்டங்களோடு சூழ்ந்திருக்கின்றார்கள். கிருஷ்ண! பெண்களுடைய இந்தஅழுகையொலியும் துஷ்டமிருகங்களுடைய கர்ஜனமும் ஆலோசிக்குங்கால், எனக்கு அதிக ஆச்சரியமாகத் தோன்றுகின்றன. மாதவ! யௌவனமுள்ளவனும் சிறந்தவனும் எப்பொழுதும் உத்தம ஸ்திரீகளாலடையப்பட்டவனுமான இந்த விவிம்சதியானவன் கொல்லப்பட்டுப் புழுதிகளில் படுத்திருக்கிறான். பாணங்களால் அறுக்கப்பட்ட கவசத்தையுடையவனும் வீரனும் யுத்தத்தில் கொல்லப்பட்டவனுமான விவிம்சதியைக் கழுகுகள் சூழ்ந்துகொண்டிருக்கின்றன. * கிருஷ்ண! பார்., சிறந்தவீரனான அந்தவிவிம்சதி யுத்தத்தில் பாண்டவர்களுடைய படையில் பிரவேசித்து ஸத்புருஷர்களுக்குத்த . நதியான வீரசயனத்தில் படுத்திருக்கிறான். கிருஷ்ண! புன்னகை புள்ளதும் அழகியமூக்குடன்கூடியதும் அழகியபுருவங்களுள்ளது ; சந்திரனுக்குஒப்பானதும் பார்க்க மிகஇனியதுமான விவிம்சதியு . னுடைய முகத்தைப் பார். விளையாடுகின்றகந்தர்வனை ஆயிரமாயிரமாகத் தேவகன்னிகைகள், உபாஸிப்பதுபோலப் பலவாறாக உத்தமஸ்திரீகளால் உபாஸிக்கப்படுகின்றவனும் பகைவரின் படைகளை அழிப்பவனும் சூரனும் யுத்தத்தில் திறமையுள்ளவனும் பகைவர்களை நாசம்செய்பவனுமான துஸ்ஸஹனை எவன் தாங்குவான்? அம்புகளால் சூழப்பட்டிருக்கிற துஸ்ஸஹனுடைய இந்தச்சரீரமானது, மலர்களுள்ளவைகளும் தன்மீது முளைத்தவைகளுமான கோங்கு மரங்களால் நாற்புறங்களிலும் நிறைக்கப்பட்டமலைபோல விளங்குகின்றது. துஸ்ஸஹன் உயிரை இழந்திருந்தும் பொன்மயமான மாலையினாலும் பிரகாசிக்கின்ற கவசத்தினாலும் அக்னியினால் சுவேதபர்வதம் போல் விளங்குகிறான்.

---

## இருபதாவது அத்யாயம்.

## ஸ்திரீவிலாபபர்வம் (தொடர்ச்சி.)

(காந்தாரி அழுகின்றமாதர்களைக் கண்ணபிரானுக்குக் காட்டியது.)

கேசவ! தாசார்ஹ! எவனைப் பலத்திலும் சௌர்யத்திலும் பிதாவான அர்ஜுனனிலும் உன்னிலும் அரைமடங்கு அதிகமானவ

---

* வேறுபாடம் கொள்ளப்பட்டது.

னென்றும் கொழுத்தசிங்கம்போல வீர்யமுள்ளவனென்றும் சொல்லு கிறார்களோ, எவன் ஒருவனுகவே எவ்விதத்திலும் பிளக்கமுடியாத என் புத்திரனுடைய சேனையைப் பிளந்தானே அந்த அபிமன்யு மற்ற வர்களுக்கு மிருத்யுவாக இருந்து தானே மிருத்யுவசத்தை அடைந்தான். கிருஷ்ணு! அளவற்ற தேஜஸையுடையவனும் அர்ஜுனனுடையகுமாரனுமான அந்தஅபிமன்யு கொல்லப்பட்டிருந்தும் ஒளியானது தணியவேஇல்லை என்று நான் எண்ணுகிறேன். புகழப் பட்டவனும் சிறுமியும் காண்டீவத்தை வில்லாகக்கொண்ட அர்ஜுன னுக்கு மருமகளுமான இந்த விராடபுத்ரி, கொல்லப்பட்டிருக்கிற வீர னை தன் கணவனைப்பார்த்துத் துக்கிக்கிறாள். கிருஷ்ண! மனைவியான இந்த விராடபுத்ரி ஸமீபத்திலிருக்கிற அந்தக்கணவனைநாடிக் கையி னால் தடவிக்கொடுக்கிறாள். நல்லமனமுள்ளவளும் ஆசைப்படத் தக்க ரூபமுள்ளவளுமான இந்த உத்தரையானவள், மலர்ந்தகமலம் போன்றதும் சங்குபோலத்திரண்டிருக்கும் கழுத்தையுடையதுமான அந்த அபிமன்யுவினுடைய முகத்தைமோந்து கட்டிக்கொள்ளுகிறாள். கோபமுள்ளவளான இவள், முன்பு லஜ்ஜையுள்ளவளாகவும் மது மயக்கம் மிஞ்சினவளாகவும் இவனை ஆலிங்கனம்செய்துகொள்வள். கிருஷ்ண! ரக்தத்தினால் நன்றாகப்பூசப்பட்டதும் ஸுவர்ணத்தினால் அலங்கரிக்கப்பட்டதுமான அவனுடைய கவசத்தைக்கழற்றிச் சரீ ரத்தை எல்லாப்பக்கத்திலும் பார்க்கிறாள். கிருஷ்ணு! சிறுபெண்ணான அவள் அவனைப்பார்த்துக்கொண்டே உன்னைநோக்கி, 'புண்டரீகா க்ஷரே! உமக்கு ஸமமான கண்களையுடையவரும் பலத்திலும் வீர் யத்திலும் உம்மை ஒத்தவருமான இவர் வீழ்த்தப்பட்டார். தோஷ மற்றவரே! தேஜஸினாலும் அவ்வாறே ரூபத்தினாலும் உமக்கு மிக வும் ஒப்பான வீரர் தள்ளப்பட்டுப் பூமியில் படுத்திருக்கிறார்' என்று கூறுகிறாள். (உத்தரை பின்னும் அபிமன்யுவைப்பார்த்து,) 'அதிக மென்மையானவரும் கம்பளங்களிலும் தோலிலும்படுக்கிறவருமான உம்முடையசரீரமானது இப்பொழுது பூமியில் வருத்தத்தை அடை யாமலிருக்கிறதா? யானைத்துதிக்கை போன்றவைகளும் நாண்கயிறு மோதுவதினால் கடினமான தோல்களுள்ளவைகளும் பொன்மயமான தோள்வளைகளுள்ளவைகளும் நீண்டிருக்கின்றவைகளுமான இருகை களையும் பரப்பிக்கொண்டு பலவாறுதேகப்பயிற்சிசெய்து சிரமத்தினால் ஸுகமாகத்தூங்குகிறவர்போலப் படுத்திருக்கிறீர்; இது நிச்சயம். இவ் வாறு புலம்புகின்றவளும் துன்பமுள்ளவளுமான என்னைப்பார்த்து நீர் ஏன்மறுமொழிசொல்லவில்லை? உமது விஷயத்தில் நான் ஒருகுற்ற

முஞ்செய்ததாகத்தெரியவில்லை. என் என்னைப்பார்த்து மறுமொழி சொல்லாமலிருக்கிறீர்? நாதரே! முன்பு நீர் என்னைத் தூரத்திலிருந்து பார்க்கும்போதே ஸல்லாபம் செய்வீரே? நான் குற்றஞ்செய்ததாக நினைக்கவில்லை. என் என்னைப்பார்த்து மறுமொழிசொல்லவில்லை? பூஜ்யரே! பூஜிக்கத்தக்கவளான ஸுபத்ரையையும் தேவர்களுக்கொப்பான இந்தத் தகப்பன்மார்களையும் துக்கத்தினால் எளியவளான என்னையும் விட்டுவிட்டு நீர் எங்கேபோகப்போகிறீர்?" என்று ரக்தத்தினால் நனைக்கப்பட்டிருக்கின்ற அவனுடைய கேசங்களைக் கையினால் உயரவெடுத்து மடியில் அவனுடைய முகத்தைவைத்துக்கொண்டு உயிரோடிருப்பவனைப்போல வினவுகிறாள். பின்னும், அவள், 'வாஸுதேவருக்கு மருகரும் அர்ஜுனருக்குப்புத்திரருமான உம்மை யுத்தமத்தியிலிருக்கும் பொழுது இந்த மகாரதர்கள் எவ்வாறு கொன்றார்கள்? எவர்களால் நான் விதவையாகச்செய்யப்பட்டேனோ க்ரூரமானகார்யத்தைச்செய்தவர்களான அந்தக்கிருபரையும் கர்ணனையும் ஜயத்ரதனையும் துரோணரையும் துரோணபுத்திரரையும் நிந்திக்கவேண்டும். பாலரும் ஸஹாயமற்றவருமான உம்மைச்சூழ்ந்துகொண்டு கொன்றவர்களும் அநேகர்களுமான எல்லாரதிகசிரேஷ்டர்களுடைய மனமும் அப்பொழுது எவ்வாறு துணிந்தது? வீரரே! நாதனுள்ளவரான நீர் பாண்டவர்களும் பாஞ்சாலர்களும் பார்த்துக்கொண்டிருக்கும் பொழுதே அநாதனைப்போல எவ்வாறு மரணத்தை அடைந்தீர்? யுத்தத்தில் அநேகர்களால் கொல்லப்பட்ட உம்மைப்பார்த்து வீரரும் புருஷசிரேஷ்டரும் பாண்டுநந்தனருமான உம்முடைய பிதா எவ்வாறு ஜீவித்திருக்கிறார்? செந்தாமரைமலர்போன்ற கண்களை உடையவரே! பார்த்தர்களுக்குப் பெரிதான ராஜ்யலாபமும் சத்துருக்களுக்குநேர்ந்த அவமானமும் நீர் இல்லாவிடில் மகிழ்ச்சியையுண்டு பண்ணா. தர்மத்தினாலும்மனவடக்கத்தினாலும்உம்மால்சஸ்திரங்களால் தேடப்பட்டிருக்கிறலோகங்களுக்கு நானும் விரைவாகப் பின்தொடர்ந்து வரப்போகிறேன். அவ்விடத்தில் என்னை எதிர்பாரும். துர்ப்பாக்கியமுள்ளவளான நான் யுத்தத்தில் கொல்லப்பட்டிருக்கிற உம்மைப் பார்த்தும் ஜீவித்திருப்பதினால் காலம் வாராமலிருக்கும்தருணத்தில் ஒரு பிராணியினாலும் மரணமடைவது ஸாத்யமாகாது. புருஷோத்தமரே! இப்பொழுது நீர் பித்ருலோகத்தைஅடைந்து என்னைப் போன்ற வேறெந்தப்பெண்ணைநோக்கி இன்பமானதும் புன்னகையுடன்கூடியதுமான வாக்கினால் அழைக்கப்போகிறீர்? சிறந்தரூபத்தினையும் பன்சிரிப்புடன்கூடினவாக்கினாலும் ஸ்வர்க்கத்தில் அப்

ஸரஸுகளுடைய மனங்களைக் கலக்கப்போகிறீர் ; நிச்சயம். ஸுபத்ராபுத்ரரே ! புண்யம்செய்தவர்களுக்குரிய லோகங்களை அடைந்து அப்ஸரஸுகளோடு சேர்ந்து விளையாடிக்கொண்டிருக்கிற நீர் ஸமயத்தில் என்னுடைய நல்லகார்யங்களை நினைத்துக்கொள்ளும். வீரரே ! இவ்வுலகில் என்னுடன் உமக்கு இந்த ஆறுமாதகாலம் வரையில்தான் வாழ்க்கை ஏற்படுத்தப்பட்டது. ஏழாவதுமாதத்தில் நீர் மரணத்தைஅடைந்துவிட்டீர்' என்று இவ்வண்ணம் வசனத்தைச்சொல்லுபவளும் துக்கமுள்ளவளும் எண்ணம் வீணானவளுமான இந்த உத்தரையை மத்ஸ்யராஜனுடைய வம்சத்தைச்சேர்ந்த ஸ்திரீகள் விலக்குகிறார்கள். துன்பமுற்றவளான இந்த உத்தரையை மிக்க துன்பத்தை அடைந்தவர்களான ஸ்திரீகள் தாங்களாகவே இழுத்துவிலக்கி, கொல்லப்பட்டிருக்கிற விராடனைக்கண்டு அலறுகின்றனர் ; புலம்புகின்றனர். துரோணருடைய அஸ்திரங்களாலும் பாணங்களாலும் அறுக்கப்பட்டவனும் ரத்தத்தினால் நனைக்கப்பட்டவனும் படுத்திருப்பவனுமான விராடராஜனை இந்தக்கழுகுகளும் நரிகளும் காக்கைகளும் மிகுதியாகக் கொத்துகின்றன. பக்ஷிகளால் கொத்தப்படுகின்ற விராடனைக் கறுத்தகண்களையுடையவர்களும் வ்யஸனமுற்றவர்களுமான ஸ்திரீகள், பக்ஷிகளைத்தடுத்துப் பாதுகாப்பதற்குச் சக்தியுள்ளவர்களாகவில்லை. வெய்யிலால் வாட்டப்பட்டவர்களும் ஆயாஸத்துடன் கூடியவர்களுமான இந்தமாதர்களுடைய சிரமத்தினால் நிறம்மாறியிருக்கிற முகங்களுடைய நல்லரூபமானது அழிந்திருக்கிறது. மாதவ ! உத்தரனையும் அபிமன்யுவையும் காம்போஜனை ஸுதக்ஷிணனையும் அபிமன்யுவினால் அடிக்கப்பட்டவனும் இனிய தோற்றமுள்ளவனும் போர்நிலையின்நடுவில் படுத்திருப்பவனுமான லக்ஷ்மணனையும் பார்.

---

## இருபத்தோராவது அத்யாயம.

## ஸ்திரீவிலாபபர்வம். (தொடர்ச்சி.)

(காந்தாரி கர்ணன்மனைவியரைக் காட்டியது.)

மகாவில்லாளியும் மகாரதனுமான இந்தக்கர்ணன், யுத்தத்தில், எரியும் நெருப்பு அவிக்கப்படுவதுபோல அர்ஜுனனுடைய தேஜஸ்ஸினால் அவிக்கப்பட்டுப் படுத்திருக்கிறான். அநேக அதிரதர்களைக் கொன்று பூமியில் விழுந்தவனும் படுத்திருப்பவனும் ரக்தப்

பெருக்குப் பரவியிருக்கும் அங்கங்களுள்ளவனும் ஸூர்யனுக்குப் புத்திரனுமான கர்ணனைப் பார். பொறுமையுள்ளவனும் தீர்க்க ரோஷமுள்ளவனும் பெரிய வில்லைப் பிடித்தவனும் மஹாரதனும் சூரனுமானகர்ணன் யுத்தத்தில் அர்ஜுனனால் கொல்லப்பட்டுப் படுத்திருக்கிறான். புருஷோத்தம! மஹாரதர்களான என்னுடைய புத்திரர்கள் யூதபதியை முன்னிட்டுக்கொண்டு யானைகள் யுத்தம் செய்வதுபோலப் பாண்டவர்களிடத்திலிருந்து உண்டான பயத்தினால் எவனை முன்னிட்டுக்கொண்டு யுத்தம் செய்தார்களோ, சிங்கத்தினால் புலியும் மதயானையினால் மற்றொருயானையும் வீழ்த்தப்படுவதுபோல யுத்தத்தில் ஸவ்யஸாசியினால் வீழ்த்தப்பட்டவனும் யுத்தத்தில் சூரனும் கொல்லப்பட்டவனுமான அந்தக்கர்ணனை அவனுடைய இந்த ஸ்திரீகள் விரிக்கப்பட்டிருக்கின்ற கூந்தலையுடையவர்களாக நாற்புறங்களிலும் சூழ்ந்துகொண்டிருக்கிறார்கள். மாதவ! தர்மராஜனான யுதிஷ்டிரன் எவனிடத்தினின்று எப்பொழுதும் பயந்தவனாக (அவனை) நினைத்துக்கொண்டே பதின்மூன்றுவருஷகாலம் நித்திரையை அடையவில்லையோ, சத்துருக்களால் இந்திரன் வெல்லப்பட முடியாததுபோலப் பகைவர்களால் யுத்தத்தில் வெல்லப்படமுடியாதவனும் கொழுந்துவிட்டெரிகின்ற ஊழித்தீப்போன்றவனும் இமயமலைபோல மிக்க உறுதியுடன் நிற்பவனுமான அந்தக்கர்ணன் முன்பு துர்யோதனனுக்கு ரக்ஷகனாக இருந்து (இப்பொழுது) காற்றினால் முறிக்கப்பட்ட மரம்போல அடித்துத்தள்ளப்பட்டுப் பூமியில் படுத்திருக்கிறான். இந்தப்பூமியானது தேருருளையை விழுங்கினமையால் ஆசார்யசாபமானது உன்னைத் தொடர்ந்துவிட்டது; இது நிச்சயம். அக்காரணத்தினால் யுத்தமண்டலத்தின் மத்தியில் தனஞ்சயனால் பாணத்தினால் உன்னுடைய தலை அபகரிக்கப்பட்டது' என்று அடிக்கடி புலம்புகிறவளும் தீனமாக அழுபவளும் பூமியில் விழுந்தவளுமான விருஷஸேனனுடைய தாயான கர்ணனுடைய மனைவியை நீ பார். ஸ்வர்ணத்தினால் இழைக்கப்பட்ட கச்சையையுடையவனும் மகாபாகுபலமுள்ளவனும் கம்பீரமான பலத்துடன்கூடியவனுமான கர்ணனைப் பார்த்து இந்த ஸுஷேணனுடைய தாயானவள் மிக்க வ்யஸனத்தினால் பீடிக்கப்பட்டவளாகவும் கதறுகின்றவளாகவும் பிரஜ்ஞையற்றுக் கீழேவிழுந்துவிட்டாள். ஆ! ஆ! கஷ்டம். நாற்பக்கத்திலும் சரீரங்களைத்தின்கின்ற மிருக பக்ஷிகளால் மஹாத்மாவான கர்ணன் சிறிது மிகுந்திருக்கும்படி செய்யப்பட்டானன்றோ? இவன் கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசியில் சந்திரன்

போலப் பார்க்க விரும்பத்தக்கவனாயில்லை. புத்திரவதத்தினால் நன்கு வாட்டப்பட்டவளும் பூமியில் விழுந்திருப்பவளும் மறுபடியும் எழுந்திருந்து மனமெலிவுற்றவளுமான அப்படிப்பட்ட இந்தஸுஷேணனுடைய மாதாவானவள் கர்ணனுடைய முகத்தை நாற்புறங்களிலும் மோந்துபார்த்து அதிகமாக அலறுகிறாள்.

---

## இருபத்திரண்டாவது அத்யாயம்.

## ஸ்திரீவிலாபபர்வம். (தொடர்ச்சி.)

(காந்தாரி, பாஹ்லீகன் முதலானவர்களையும் அவர்களின் மங்கையரையும் காட்டியது.)

**பீ**மஸேனனால் கீழே வீழ்த்தப்பட்டவனும் சூரனும் தூரத்திலிருக்கிற பந்துஜனங்களுள்ளவனும் பந்துக்களில்லாதவன் போன்றவனுமான அவந்திதேசாதிபதியைக் கழுகுகளும் நரிகளும் பக்ஷிக்கின்றன. மதுஸூதன! சூரர்களுக்குத் துன்பத்தைச்செய்து வீரசயனத்தில் படுத்திருப்பவனும் ரக்தத்தினால் நனைக்கப்பட்டிருப்பவனுமான அந்த அவந்திதேசாதிபதியைப் பார். அவனை நரிகளும் கழுகுகளும் பற்பலவிதமான மாம்ஸாசிகளும் அந்த அந்தவழியினால் இழுக்கின்றன. காலத்தின் வேறுபாட்டைப்பார்! வீரசயனத்தில் படுத்திருப்பவனும் சூரனும் அழுகையை உண்டுபண்ணுகின்றவனுமான அவந்திதேசாதிபதியை மங்கையர்கள் அழுதுகொண்டு நாற்பக்கங்களிலும் சூழ்ந்துநிற்கின்றார்கள். கிருஷ்ண! ப்ரதீபன்புத்ரரும் பெரிதானவில்லையுடையவரும் பீமனால் கொல்லப்பட்டிருப்பவரும் நன்றாக உறங்குகின்றபுலிபோன்றவரும் நல்லமனமுள்ளவருமான பாஹ்லீகரைப்பார். கொல்லப்பட்டிருந்தும் இந்தப்பாஹ்லீகருடைய முகத்தின் வர்ணமானது பௌர்ணமாஸியில் உதித்திருக்கின்ற பூர்ணசந்திரனுடையகாந்திபோல் மிகவும் பிரகாசிக்கின்றது. புத்திரசோகத்தால் வாட்டப்பட்டவனும் பிரதிஜ்ஞையைப் பாதுகாக்கின்றவனும் இந்திரகுமாரனுமான அர்ஜுனனால் யுத்தத்தில் விருத்தக்ஷத்ரன்குமாரனை ஜயத்ரதன் கொல்லப்பட்டான். ஸத்யத்தைப் பாதுகாக்க எண்ணங்கொண்ட அர்ஜுனனால் பதினொரு *சமூஸேனைகளைக்கொன்று கொல்லப்பட்டவனும் மஹாத்மாக்களால் காப்பாற்றப்பட்டிருந்தவனுமான இந்த ஜயத்ரதனைப்பார். ஜனார்த்தன! ஸிந்துதேசத்திற்கும் ஸௌவீரதேசத்திற்கும் நாதனாக

---

* ஆதிபர்வம் ௬௧-ம் பக்கத்திற்காண்க.

இருப்பவனும் கொழுப்புமிக்கவனும் உறுதியானமனமுள்ளவனுமான ஜயத்ரதனை நரிகளும் கழுகுகளும் தின்னுகின்றன. அச்சுத! காதல் மனைவியரால் நன்கு பாதுகாக்கப்படுகின்ற இந்தஜயத்ரதனைப் பயங்கரமானவிலங்குகள் பள்ளமானகாட்டிற்கு அருகில் இழுக்கின்றன. மஹாபாகுபலமுள்ளவனை இந்தஜயத்ரதனை ஸிந்து, ஸௌவீரம், காம்போஜம், காந்தாரம், யவனம்ஆகிய நாட்டினரான இந்தமாதர்கள் பார்த்துக்கொண்டு நாற்புறங்களிலும் சூழ்ந்திருக்கின்றார்கள். ஜனார்த்தன! எப்பொழுது ஜயத்ரதன் திரௌபதியைஎடுத்துக்கொண்டுகேகயர்களோடு ஓடினானோ அப்பொழுதே இவன் பாண்டவர்களால் கொல்லப்படத்தக்கவன். பாண்டவர்கள் துச்சலையைக் கௌரவித்தமையாலன்றோ அப்பொழுது ஜயத்ரதன் விடப்பட்டான்? கிருஷ்ண! அவர்கள் இப்பொழுது ஏன் அவனைக் கௌரவிக்கவில்லை? பிரியமான என்புத்ரியானவள் ஸைந்தவனைக்குறித்துத் துக்கிக்கின்றவளாக அதிகமாகத் தடுமாற்றமுற்றவள்போலவும் பாண்டவர்களை நிந்திக்கின்றவள்போலவும் தன்னைமாய்க்க ப்ரயத்னப்படுகிறாள். கிருஷ்ண! பிரியமான என் பெண்ணும் விதவையாகி, என் நாட்டுப்பெண்களும் நாதனை இழந்தவர்களானார்கள். எனக்கு இதைவிட மேற்பட்ட துக்கம் என்ன உண்டாகப்போகிறது? ஆ! ஆ! நாயகனது நிலையைக்காணாமல் இங்குமங்கும் ஓடுகின்றவளும் சோகத்தையும் பயத்தையும் விட்டவள்போலிருக்கின்றவளுமான துச்சலையைப் பார். கஷ்டம். எவன், புத்திரனிடத்தில் பேராவலுள்ள எல்லாப்பாண்டவர்களையும் தடுத்தானோ அந்தஜயத்ரதன் மிகுந்தஸேனைகளைக்கொன்று தானும் ம்ருத்யுவசத்தை அடைந்தான். மதயானையைப்போன்றவனும் வீரனும் எவ்விதத்தாலும் ஜயிக்கப்படத்தகாதவனுமான அவனை நாற்புறங்களிலும் சூழ்ந்துகொண்டு சந்திரன்போன்ற முகமுள்ள இந்தப்பெண்கள் அழுகின்றார்கள்.

## இருபத்துமூன்றாவது அத்யாயம்.

## ஸ்த்ரீவிலாபபர்வம். (தொடர்ச்சி.)

(காந்தாரி பீஷ்மர்முதலானவர்களுடைய தணங்களைக்கூறி அவர்களின் சரீரங்களையும் அழுகின்றமாதர்களையும் காட்டியது.)

அப்பா! யுத்தத்தில் தர்மங்களையறிந்தவனை தர்மராஜனால் கொல்லப்பட்டவனும் ஸாக்ஷாத் நகுலனுக்குமாதுலனுமான சல்யன் இதோ படுத்திருக்கிறான். புருஷோத்தம! எல்லாவிஷயத்திலும்

எவன் எப்பொழுதும் உன்னோடு போட்டிபோடுவானோ மஹாபலசாலியான அப்படிப்பட்ட இந்தமத்ரராஜன் கொல்லப்பட்டுப் படுத்திருக்கிறான். சொல்லக்கருதுகிறவர்கள் ஜயத்ரதன்விஷயத்திலாவது எவ்விதத்தாலாவது ஒருகுற்றத்தைக் கூறுவார்கள். மத்ரராஜகுமாரன் விஷயத்தில் எவ்வாறு குற்றத்தைக் கூறுவார்கள்? ஐயா! யுத்தத்தில் கர்ணனுடைய ரதத்தின்மீதேறிக் குதிரைகளை நடத்துகின்ற இந்தச்சல்யனால் அப்பொழுது பாண்டுபுத்திரர்களுக்கு ஜயம்வருவதின் பொருட்டுக் கர்ணனுடைய* தேஜோவதம்செய்யப்பட்டது. அந்தோ! கஷ்டம். பூர்ணசந்திரன்போல்அழகிய காட்சியுள்ளதும் தாமரையிதழ் போன்ற கண்களையுடையதும் காக்கைகளாலே சிறிதுகொத்தப்பட்டதும் காயமில்லாததுமான சல்யனுடையமுகத்தைப் பார். கிருஷ்ண! பொன்போன்ற காந்தியையுடையவனை இந்தச்சல்யனுடைய வாயினின்று வெளிவந்திருப்பதும் புடம்போட்ட தங்கத்துக்கொப்பான காந்தியுள்ளதுமான இந்தநாவானது பக்ஷிகளால் தின்னப்படுகிறது. யுதிஷ்டிரனால்கொல்லப்பட்டவனும் யுத்தத்தில்ஸமர்த்தனும் மத்ரநாதனுமானசல்யனைக் குலஸ்திரீகள் அழுதுகொண்டு சூழ்ந்துநிற்கிறார்கள். மிக்க மெல்லியவஸ்திரத்துடன்கூடிய இந்தக்ஷத்திரியமாதர்கள் அலறிக்கொண்டு புருஷஶ்ரேஷ்டனும் க்ஷத்ரிய ஶ்ரேஷ்டனும் கீழே விழுந்திருப்பவனுமான இந்தச்சல்யனை அணுகிச் சேற்றில் அமிழ்ந்த காளையைச்சுற்றித் தலையீற்றுப்பசுக்கள்நிற்பதுபோல் நான்குபக்கங்களிலும் சூழ்ந்துகொண்டு நிற்கின்றார்கள். வ்ருஷ்ணிநந்தன! ரக்ஷிக்கிறவனும் சூரனும் வீரசயனத்தில் படுத்திருப்பவனும் அம்புகளால் துண்டாடப்பட்டவனுமான இந்தச் சல்யனைப் பார். மலையை இருப்பிடமாகக்கொண்டவனும் பிரதாபசாலியும் யானையின்மாவெட்டியைத் தரித்தவனும் காந்தியுள்ளவனுமான இந்தப்பகதத்தராஜன் அடித்துத்தள்ளப்பட்டுப் பூமியிற்படுத்திருக்கிறான். துஷ்டமிருகங்களால் தின்னப்படுகின்ற இவனுடையதலையிலிருக்கின்ற இந்தப்பொன்மாலையானது தலைமயிர்களைவிளங்கச்செய்கின்றதுபோலப் பிரகாசிக்கின்றது. வ்ருத்ராஸுரனுடன் இந்திரனுக்கு (நேர்ந்தது)போல இந்தப்பகதத்தனோடு பார்த்தனுக்கு மயிர்பொடிக்கலை உண்டுபண்ணுகின்றதும் அதியுக்ரமானதும் மிக்க அச்சந்தருவதுமானயுத்தம் நடந்ததாம். நீண்ட கைகளையுடையவனை இந்தப்பகதத்தன் குந்தீபுத்ரனை தனஞ்சயனோடு போர்புரிந்து அவனை ப்ராணஸம்சயத்தை அடைவித்துக் குந்தீபுத்திரனை அவனால் கொல்லப்பட்டான். சௌர்யத்திலும் வீர்யத்திலும் உல

---

மனத்தின் ஊக்கத்தைக் கெடுத்தல்.

கத்தில் எவருக்குச்சமானன் ஒருவனுமில்லையோ யுத்தத்தில் பயங்கரமானகார்யத்தைச்செய்கின்ற அப்படிப்பட்ட இந்தப்பீஷ்மர் கொல்லப்பட்டுப் படுத்திருக்கிறார். கிருஷ்ண! யுகாந்தத்தில் காலத்தினால் ஆகாயத்தினின்று தள்ளப்பட்ட ஸூர்யன்போல (யுத்தபூமியில்) படுத்திருப்பவரும் ஸூர்யனுடைய ஒளிபோன்ற ஒளியையுடையவருமான சந்தனுபுத்திரரைப் பார். கேசவ! வீர்யசாலியும் நரஸூர்யருமான இந்தப் பீஷ்மர், யுத்தத்தில் சஸ்த்ரங்களென்னும் தாபத்தினால் சத்ருக்களைத் தபிக்கச்செய்து ஸூர்யன் அஸ்தமயத்தை அடைவதுபோல அஸ்தமயத்தையடைகிறார். சாதல்பத்தையடைந்தவரும் ஜிதேந்திரியரும் (விரதத்தினின்று) நழுவாதவரும் சூரர்களாலடையப்படும் வீரசயனத்தில் படுத்திருப்பவருமான பீஷ்மரைப் பார். இவர் கர்ணிகளாலும் நாளீகங்களாலும் நாராசங்களாலும் உத்தமமான சயனத்தைப்பரப்பி அதன்மேல் தனிச் சரவணத்தில் ஸ்கந்தபகவான் படுத்திருப்பதுபோலப் படுத்திருக்கிறார். மாதவ! கங்கையின்கட்டளைப் பக்காப்பவரும் ஊர்த்வரேதஸும் கீர்த்தியுடையவரும் யுத்தத்தில் நிகரற்றவரும் கங்காபுத்திரருமான இந்தப் பீஷ்மர் பல்குனனால் நிரப்பப்படாமல் மூன்றுபாணங்களுடன்கூடியதும் காண்டீவத்தைவில்லாகக்கொண்ட அர்ஜுனனால்கொடுக்கப்பட்டிருக்கின்றதுமான உத்தமமான தலையணையைத் தலைக்காதாரமாக வைத்துக்கொண்டு படுத்திருக்கிறார். ஐயா! தர்மாத்மாவும் எல்லாம் தெரிந்தவருமான இந்தப்பீஷ்மர் மரிக்குமியற்கையுள்ள மனிதராயிருந்தும் தேவன்போல இம்மைமறுமைகளை அறிந்திருந்ததால் உயிரைவைத்திருக்கிறார். சந்தனுபுத்ரரான பீஷ்மர் சத்ருக்களால் அடிக்கப்பட்டு இப்பொழுது படுத்திருத்தலால் யுத்தத்தில் ஒருவனும் ஸமர்த்தனல்லன்; கற்றறிந்தவனுமல்லன்; பராக்ரமசாலியுமல்லன்; சூரரும் பாண்டவர்களால் கேட்கப்படுகின்றவரும் தர்மத்தை அறிந்தவரும் ஸத்யவாதியுமான இந்தப் பீஷ்மராலே மரணோபாயமானது யுத்தத்தில் தம்மாலேயே சொல்லப்பட்டது. முழுதும் நசித்துப் போனகுருவம்சமானது எவரால் மீண்டும் மேலபிவிருத்திசெய்யப்பட்டதோ மஹாபுத்திசாலியான அந்தப் பீஷ்மர் கௌரவர்களோடு அவமானத்தை அடைந்தார். மாதவ! தேவவிரதரென்னும் பெயருள்ளவரும் தேவனுக்கொப்பானவரும் புருஷோத்தமருமான பீஷ்மர் கொல்லப்பட்டபிறகு கௌரவர்கள் எந்தத்தர்மத்தினால் எதைக் காணப்போகிறார்கள்? அர்ஜுனனுக்குக்கற்பிப்பவரும் அவ்வாறே ஸாத்யகிக்கு ஆசார்யரும் கௌரவர்களுக்கு உத்தமகுருவும் வீழ்ந்திரு

க்கிறவருமான அந்தத்துரோணரைப் பார். மாதவ ! தேவதைகளுக் கெல்லாம் ப்ரபுவான இந்திரன்போலவும் சுக்ராசார்யர்போலவும் மஹாவீர்யமுள்ளவரான துரோணரும் * நான்குவிதமான அஸ்திரங் களையும் அறிந்திருக்கிறார். எவருடைய அருளால் பாண்டு நந்தன ரான பீபத்ஸுவானவன் செய்யமுடியாதகாரியத்தைச் செய்தானோ அவர் கொல்லப்பட்டுப் படுத்திருக்கிறார். இவரை அஸ்திரங்கள் பாதுகாக்கவில்லை. கௌரவர்கள் எவரைமுன்னிட்டுப் பாண்டவர் களை யுத்தத்திற்கு அழைத்தார்களோ சஸ்திரதாரிகளுள் சிறந்தவ ரான அப்படிப்பட்ட இந்தத்துரோணர் சஸ்திரத்தினால் வெட்டப் பட்டார். ஸேனையை மிச்சமின்றி எரிக்கின்ற எவருடையகதியானது அக்னியினுடையகதிபோலிருந்ததோ அவர் கொல்லப்பட்டு ஜ்வாலை தணிந்தநெருப்புப்போலப் பூமியில் படுத்திருக்கிறார். மாதவ ! கொல் லப்பட்டிருந்தும் உயிரோடிருப்பவர்போன்ற துரோணருடைய விற் பிடியும் கையுறையும் சிதறாமலிருப்பனவாகக் காணப்படுகின்றன. கேசவ ! ஆதியில் நான்முகனிடத்தினின்று விலகாமலிருந்தது போலச் சூரரானஎவரிடத்தினின்று நான்குவேதங்களும் எல்லாஅஸ் திரங்களும் விலகாமலிருந்தனவோ சந்தனப்பூச்சுக்குரியவையும் வந்திகளால் ஸ்தோத்திரம்செய்யப்பட்டவையும் மங்களகரமானவை யும் நூறுசிஷ்யர்களால் அர்ச்சிக்கப்பட்டவையுமான அவருடைய இந்த இருகால்களையும் நரிகள் இழுக்கின்றன. மதுஸூதன ! துரு பதபுத்திரனால் கொல்லப்பட்டிருக்கிற துரோணரருகில் கிருபியான வள் துக்கத்தினால் அறிவழிந்து மனந்தளர்ந்து உட்கார்ந்திருக்கிறாள். அழுபவளும் மனவருத்தமுள்ளவளும் அவிழ்ந்த தலைமயிரையுடைய வளும் தலைகுனிந்திருப்பவளுமான அந்தக்கிருபி, கொல்லப்பட்ட வரும் சஸ்திரதாரிகளுள் சிறந்தவரும் பர்த்தாவுமான துரோணரரு கில் உட்கார்ந்திருப்பதைப் பார். கேசவ ! திருஷ்டத்யும்னனால் பாணங்களால் கவசம் பிளக்கப்பட்ட துரோணரைச் சடையுள்ள வளும் பிரம்மசாரிணியுமான கிருபியானவள் யுத்தபூமியில் தைன்யத் துடன் உபாஸிக்கிறாள். மென்மையானவளும் கீர்த்தியுள்ளவளு மான கிருபியானவள், மனவருத்தமுற்றவளாக யுத்தத்தில் கொல்லப் பட்டிருக்கிற பர்த்தாவினுடைய ப்ரேதக்ருத்யத்திலும் முயல்கிறாள். ஸாமகர்கள் விதிப்படி அக்னிகளை மூட்டிச் சிதையை நாற்பக்கங்களி லும் கொளுத்தித் துரோணரை அதில் வைத்து மூன்று ஸாமங்களைக் கானம் செய்கின்றார்கள். மாதவ ! சடையுள்ளவர்களான இந்தப்

* ஆதிபர்வம், 526-ம் பக்கம் குறிப்பிற்காண்க.

பிரம்மசாரிகள் சிதையை ஏற்படுத்துகின்றார்கள். விற்களாலும் சக்திகளாலும் ரதநீடங்களாலும் மற்றப் பற்பலபாணங்களாலும் அதிக தேஜஸ்வியான் துரோணரை எரிக்கப்போகிறார்கள். அந்தப்பிரம்மசாரிகள் துரோணரை எடுத்துக்கொண்டு ஸாமகானம் செய்கின்றார்கள். ரோதனத்தையும் செய்கின்றார்கள். மற்றவர்கள் அந்தஸ்தங்களான மூன்று ஸாமங்களால் துதிக்கின்றார்கள். துரோணசிஷ்யர்களான பிராம்மணர்கள் அக்னியில் அக்னியைச் சேர்த்துத் துரோணரை அக்னியில் ஹோமம்செய்து சிதையை அப்ரதக்ஷிணமாகச் சுற்றிவந்து அவ்வாறு கிருபியை முன்னிட்டுக்கொண்டு கங்கையை நோக்கிச் செல்லுகின்றார்கள்.

---

## இருபத்துநான்காவது அத்யாயம்.

## ஸ்திரீவிலாபபர்வம். (தொடர்ச்சி.)

(காந்தாரி பூரிஸ்ரவஸ்முதலியவர்களையும் அவர்களின் மனைவியரையும் காட்டியது.)

மாதவ! ஸாத்யகியினால் கொல்லப்பட்டவனும் பக்கத்தில் அனேகபக்ஷிகளால் கொத்தப்படுகின்றவனுமானஸோமதத்தனுடைய குமாரனைப் பார். ஜனார்த்தன! புத்திரசோகத்தினால் மிகவாட்டப்பட்ட ஸோமதத்தன் சிறந்த வில்லாளியான யுயுதானனை நிந்திக்கிறவன் போலக் காணப்படுகிறான். இகழப்படாதவளான இந்தப் பூரிஸ்ரவவின் தாயானவள் சோகத்தினால் கவரப்பட்டவளாகப் பர்த்தாவான ஸோமதத்தனை ஸமாதானம் செய்கிறாள், 'மகாராஜரே! பாக்கியத்தினால் பயங்கரமானதும் பாரதர்களுக்கு நாசத்தை உண்டுபண்ணுகின்றதுமான இந்தக் கௌரவயுத்தமாகிற கோரமான யுகாந்தத்தைப் பாராமலிருக்கிறீர். யூபஸ்தம்பம்போன்ற கைகளையுடையவனும் வீரனும் அனேக ஆயிரக்கணக்காகத் தக்ஷிணைகளைக் கொடுப்பவனும் அனேக யாகங்களால் தேவர்களைப் பூஜிப்பவனும் கொல்லப்பட்டவனுமான புத்திரனைப் பாக்கியத்தினால் பாராமலிருக்கிறீர். மஹாராஜரே! ஸமுத்திரத்தில் ஸாரஸப்பக்ஷிகளுடைய சப்தத்தைப்போல் யுத்தத்தில் மருமக்களுடைய கோரமான பலவிதப் புலம்பலைப் பாக்கியத்தினால் கேளாமலிருக்கிறீர். புத்திரர்களும் நாதனும் கொல்லப்பட்டவர்களான உம்முடைய இந்த ஐந்துநாட்டுப் பெண்களும் ஒற்றையாடை உடுத்தவர்களும் கறுத்தகூந்தலை விரித்

தவர்களுமாக நான்குபக்கங்களிலும் ஓடுகின்றார்கள். ஆ! அர்ஜுனனால் கைகளறுக்கப்பட்டவனும் கீழே தள்ளப்பட்டவனும் துஷ்டமிருகங்களால் தின்னப்படுகின்றவனுமான புருஷசிரேஷ்டனை நீர் பாக்கியத்தினால் பாராமலிருக்கிறீர். யுத்தத்தில் கொல்லப்பட்ட சலனையும் பூரிசிரவஸையும் பலவாறாயுள்ள மருமக்களனைவரையும் பாக்கியத்தினால் இப்பொழுது இவ்விடத்தில் நீர் பார்க்கவில்லை. யூபத்தை த்வஜமாகக்கொண்டவனும் மஹாத்மாவுமான ஸோமதத்தனாகிய (உமது) குமாரனுடைய ரதமத்தியில் சிதறியிருக்கிற அந்தப்பொற்குடையைப் பாக்கியத்தினால் நீர் பாராமலிருக்கிறீர்' என்றாள். கறுத்த கண்களையுடையவர்களான இந்தப் பூரிசிரவஸினுடைய மனைவிகள், ஸாத்யகியினால் கொல்லப்பட்டிருக்கிற பர்த்தாவைச் சுற்றியிருந்துகொண்டு வ்யஸனிக்கின்றார்கள். கேசவ! பர்த்தாவினுடைய விபத்தினாலுண்டான சோகத்தினால் பீடிக்கப்பட்டவர்களான இந்தப் பெண்கள் தீனமாகப்புலம்பிப் பரிதாபப்படும்படி எதிரில் பூமியில் விழுகின்றார்கள். கஷ்டம், மாதவ! அஜாக்கிரதையுடன்கூடினவனும் சூரனும் யாகம்செய்பவனுமான இவனுடையகையைப் பீபத்ஸுவானவன் அறுத்தானன்றோ? இந்த மிக்க அருவருப்பான காரியத்தை எவ்வாறு செய்தான்? மேலும், ஸாத்யகி, ப்ராயோபவேசஞ் செய்தவனும் கூர்மையானபுத்தியுள்ளவனுமான பூரிஸ்ரவஸைக் கொன்றதனால் அதைவிட மிக்க பாவமான காரியத்தைச் செய்தான். க்ஷத்திரியதர்மமுள்ளவனான இவன் ஒருவன் இருவர்களால் கொல்லப்பட்டவனாகப் படுத்திருக்கிறான். ஸாத்யகி, ப்ரவமாயும்இகழ்ச்சியைத் தருவதாயுமுள்ள இந்தக் காரியத்தை நல்லோர்களிடத்திலும் கோஷ்டிகளிலும் ஸபைகளிலும் தானாக எவ்வாறு சொல்வான்?' என்று இந்த யூபத்வஜனுடைய மனைவிகள் அலறுகிறார்கள். கைப்பிடியில் அடங்குமிடையுள்ளவளான இந்தயூபத்வஜனுடைய மனைவி கணவனுடையகையை மடியில்வைத்துக்கொண்டு தீனமாகப் புலம்புகிறாள். 'இந்தக்கையானது சூரர்களைக் கொன்றது; மித்ரர்களுக்கு அபயங்கொடுத்தது; ஆயிரம்பசுக்களைக் கொடுத்தது; க்ஷத்திரியர்களுக்கு நாசத்தை உண்டுபண்ணினது. அப்படிப்பட்ட இந்தக் கையானது மேகலையை இழுப்பது; பருத்தகொங்கைகளை மர்த்திப்பது; நாபியையும் தொடைகளையும் ஜகனத்தையும் ஸ்பர்சிப்பது. ஆடையின் முடிச்சையும் அவிழ்ப்பது. வேறுஒருவனோடு யுத்தத்தில் போர்புரிகின்றவரும் அஜாக்கிரதையுள்ளவருமான (இந்த என்பர்த்தாவினுடைய கையானது) வாஸுதேவருக்கில் ஸ்ரமமின்றிக் காரியங்

களைச்செய்கிற பார்த்தனால் அறுத்துத்தள்ளப்பட்டது. ஜனார்த்தனரே! அர்ஜுனனுடைய பெரிதானகாரியத்தை ஸபைகளிலும் கதைகளிலும் எவ்வண்ணம் உரைக்கப்போகிறீர்? கிரீடியானவன் தானேயும் எவ்வாறு சொல்வான்?" என்று இவ்வாறு சிந்தித்து உத்தமியான இந்தப்பெண் பேசாமலிருந்துவிட்டாள். சக்களத்திகள் தம் மருமகளைப் பார்த்துத் துக்கிப்பதுபோல அப்படிப்பட்ட இவளைக்குறித்துத் துக்கிக்கின்றார்கள். பலசாலியும் உண்மையான பராக்ரமமுடையவனும் மாதுலனும் காந்தாரராஜனுமான சகுனியானவன் மருமகனான ஸஹதேவனால் கொல்லப்பட்டான். எவன் முன்பு பொற்காம்புகளுள்ள இரண்டு விசிறிகளால் வீசப்பட்டானோ படுத்திருக்கிற அப்படிப்பட்ட இவன் பக்ஷிகளுடைய சிறகுகளால் வீசப்படுகிறான். எவன் நூறுநூறாகவும் ஆயிரம்ஆயிரமாகவும் ஸ்வரூபங்களை உண்டுபண்ணிக்கொள்வனோ மாயாவியான அவனுடைய மாயைகள் பாண்டவதேஜஸினால் எரிக்கப்பட்டன. வஞ்சனையில் ஸமர்த்தனான எவன் மாயையினால் ஸபையில் யுதிஷ்டிரனை ஜயித்துப் பெரிதான ராஜ்யத்தைக் கவர்ந்தானோ அவன் எவ்வாறு உயிரை இழந்தான்? கிருஷ்ண! என்புத்திரனுடைய அழிவுக்கே கல்விகற்றவனும் சூதாடியுமான சகுனியை நாற்பக்கங்களிலும் பறவைகள் நெருங்கியிருக்கின்றன. என்புத்திரர்களுடைய வதத்தின்பொருட்டும் பரிவாரங்களுடன் தான் நாசமடைவதின்பொருட்டும் இவனால் பாண்டவர்களோடு பெரியபகையானது நன்கு ஏற்படுத்தப்பட்டது. பிரபுவே! நல்லலோகங்கள் என்புத்திரர்களுக்குச் சஸ்திரங்களால் ஜயிக்கப்பட்டதுபோலவே துர்ப்புத்தியுள்ளவனான இவனாலும் சஸ்திரத்தினால் லோகங்கள் ஜயிக்கப்பட்டன. மதுஸூதன!, கோணலான எண்ணமுள்ள இந்தச்சகுனி, நேரான புத்தியுள்ள என்புத்திரர்களைப் ப்ராதாக்களோடு ஏன் விரோதிக்கும்படி செய்யாமலிருப்பான்?

---

## இருபத்தைந்தாவது அத்யாயம்.

## ஸ்திரீவிலாபபர்வம.(தொடர்ச்சி.)

(காந்தாரி கௌரவபாண்டவர்களின் அழிவுக்குக் க்ருஷ்ணனுடைய உபேக்ஷயே காரணமென்பதைக்கூறி அவரது சுற்றத்தார் யாவரும்அழியும்படி சபித்தது.)

மாதவ! (எவ்விதத்தாலும்) ஜயிக்கமுடியாதவனும் காம்போஜதேசத்திய விரிப்பில் படுக்கத்தக்கவனும் காளையின் திமில்போன்ற

தோள்களையுடையவனும் கொல்லப்பட்டுப் புழுதிகளில் படுத்திருப்பவனுமான காம்போஜனைப் பார். ரக்தத்தால் செவ்வனே பூசப்பட்ட இந்தக் காம்போஜனுடைய சந்தனப்பூச்சுள்ள இருகைகளையும் பார்த்து அதிக துக்கமுள்ளவளும் பந்துக்கள் ஸமீபத்தில் இல்லாதவளும் நாதனை இழந்தவளும் நடுக்கமுற்றவளும் இனியகுரலுள்ளவளுமான இவனுடைய மனைவி, 'ஜனேஶ்வர! முன்பு எந்த இருகைகளின் நடுவை அடைந்திருக்கின்ற என்னை அன்பானது விட்டுவிலகாதோ, பரிகம்போன்றவைகளும் சந்தனத்தால் பூசப்பட்டவைகளுமான அந்த இரண்டுகைகளும் இதோ இருக்கின்றன. உம்மால் விடுபட்டிருக்கின்ற நான் எந்தக்கதியையடைவேன்?' என்று தீனமாகப் புலம்புகிறாள். பலவிதமாலைகளுடைய காந்தியானது வெயிலில்வாட்டப்பட்டும் நீங்காததுபோல வாட்டமுற்றிருக்கின்ற ஸ்திரீகளுடைய காந்தியானது சரீரங்களை விடவில்லை. மதுஸூதன! பக்கத்தில் படுத்திருப்பவனும் சூரனும் ஜ்வலிக்கின்றதோள்வளைகளை அணிந்தவனும் வில்லாளிகளுக்கு உபமானமாயிருப்பவனுமான களிங்கதேசாதிபதியைப் பார். ஜனார்த்தன! மகததேசாதிபதியான ஜயத்ஸேனனைச் சூழ்ந்துகொண்டு மாகதஸ்திரீகள் மிகஅலறுகின்றார்கள்; பார். ஜனார்த்தன! மான்களுடைய கண்கள்போல நீண்டகண்களையுடையவர்களும் அதிகமாக அலறுகின்றவர்களுமான மகதமங்கையருடைய மனத்தையுங் காதையுங்கவருகின்ற நாதமானது என்னுடைய மனத்தைக்கவருகின்றதுபோலும். நன்றாக விரிக்கப்பட்ட படுக்கையோடிருப்பவர்களான மகதமாதர்கள் நன்கு சிதறுகின்றவஸ்திரங்களையும் ஆபரணங்களையுமுடையவர்களும் அழுபவர்களும் சோகத்தால் பீடிக்கப்பட்டவர்களுமாகிப் பூமியில் படுக்கின்றார்கள். கோஸலதேசாதிபதியும் ராஜபுத்திரனுமான ப்ருஹத்பலனென்கிற பர்த்தாவைச்சூழ்ந்துகொண்டு இந்தப்பெண்கள் தனியாக இரைந்து கதறுகின்றார்கள். இவனுடைய உடம்பில் பாய்ந்திருப்பவைகளும் அர்ஜுனகுமாரனான அபிமன்யுவினுடைய புஜபலத்தினால் ப்ரயோகிக்கப்பட்டவைகளுமான பாணங்களை இந்தப்பெண்கள் துக்கத்தால் கவரப்பட்டவர்களாகிப் பிடுங்குகின்றார்கள்; அடிக்கடி மூர்ச்சை அடைகின்றார்கள். மாதவ! எல்லாவிதத்தாலும் குற்றமற்றவர்களான இந்த ஸ்திரீகளினுடைய முகங்கள், வெயிலாலுண்டான பரிஶ்ரமத்தினால் நன்றாக வாட்டமுற்றிருக்கின்ற தாமரைப்புஷ்பங்களுடையகாந்திபோன்ற காந்தியுள்ளவைகளாக விளங்குகின்றன. அழகியதோள்வளைகளையுடையவர்களும் சிசுக்களும் ஸ்வர்ணமாலை அணி

ந்தவர்களும் சூரர்களுமான த்ருஷ்டத்யும்னனுடைய புத்திரர்களை வரும் த்ரோணரால் கொல்லப்பட்டுப் படுத்திருக்கிறார்கள். ரதமாகிற அக்னிக்ருஹத்தையும் வில்லாகிற ஜ்வாலையையுமுடையதும் பாணங்களும் சக்திகளும் கதைகளுமாகிறவிறகுகளையுடையதுமான த்ரோணராகிற நெருப்பையடைந்து இவர்கள் விட்டிற்பூச்சிகள்போல எரிக்கப்பட்டார்கள். அவ்வாறே, சூரர்களும் அழகிய தோள்வளைகளையுடையவர்களும் யுத்தத்தில் முன்வந்தவர்களும் ஸஹோதரர்களுமான ஐந்து கேகயர்கள் த்ரோணரால் கொல்லப்பட்டு யுத்தத்தில் படுத்திருக்கிறார்கள். புடம்போட்டபொன்னலாகிய கவசங்களையணிந்தவர்களும் ஒருபனையுயரம் த்வஜங்களுள்ள தேர்க்கூட்டங்களுடன்கூடியவர்களுமான இவ்வீரர்கள், ஜ்வலிக்கின்ற நெருப்புக்கள்போல ஒளியினால் பூமியைப் பிரகாசிக்கச்செய்கின்றார்கள். மாதவ! வனத்தில் பெரிய சிங்கத்தினாலே கொல்லப்பட்ட பெரியயானையைப்போல த்ரோணரால் யுத்தத்தில் தள்ளப்பட்டிருக்கும் த்ருபதனைப் பார். செந்தாமரைக்கண்ணா! அழுக்கில்லாததும் வெண்ணிறமுள்ளதுமான பாஞ்சாலராஜனுடையகுடையானது சரத்காலத்தில் சந்திரன்போல ப்ரகாசிக்கின்றது. இந்த மருகிமாரும் மனைவிமாரும் துக்கமுள்ளவர்களாக வயதுசென்றவனும் பாஞ்சாலதேசத்தரசனுமான துருபதனைத் தகனம்செய்துவிட்டு இடமாகச் செல்லுகின்றார்கள். துரோணரால் கொல்லப்பட்டவனும் சூரனும் சேதிதேசத்துவீரர்களுள் சிறந்தவனும் மஹாத்மாவுமான த்ருஷ்டகேதுவை மாதர்கள் மனமிழந்தவர்களாகக் கொண்டுபோகின்றார்கள். மதுஸூதன! சிறந்த வில்லாளியான இவன் யுத்தத்தில் துரோணருடைய அஸ்திரத்தை எதிர்த்தடித்துக்கொல்லப்பட்டவனாக வஜ்ரத்தினால் அடிக்கப்பட்ட மரம்போலப் படுத்திருக்கிறான். சேதிதேசாதிபதியும் சூரனும் மஹாரதனுமான இந்தத் திருஷ்டகேதுவானவன் யுத்தத்தில் ஆயிரம் ஆயிரமாகச் சத்துருக்களைக் கொன்றுவிட்டு, கொல்லப்பட்டவனாகப் படுத்திருக்கிறான். ஹ்ருஷீகேச! சேனையோடும் பந்துக்களோடும் கொல்லப்பட்டிருக்கின்றவனும் பக்ஷிகளால் மிகவும் கொத்தப்படுகிறவனுமான அந்தச் சேதிராஜனை (அவனுடைய) மனைவிகள் அடைந்திருக்கின்றார்கள். தாசார்ஹ! இந்தச்சேதிராஜனுடைய உத்தமஸ்திரீகள் வீரனும் படுத்திருக்கிறவனும் உண்மையான வல்லமையுள்ளவனுமான பேரனை மடியில் எடுத்து வைத்துக்கொண்டு அழுகின்றார்கள். ஹ்ருஷீகேச! அழகியமுகமுள்ளவனும் அழகிய குண்டலங்களுள்ளவனும் துரோணரால் யுத்தத்தில்

பலவாறாகப் பாணங்களால் அறுக்கப்பட்டிருப்பவனுமான இவனுடைய புத்திரனைப் பார். மதுஸூதனா! யுத்தரங்கத்திலிருப்பவனும் சத்துருக்களோடு போர்புரிகின்றவனும் * வீரனுமான பிதாவை இன்னமும் நிச்சயமாக விட்டுவிலகவில்லை. மகாபாஹுபலமுள்ளவனே! சத்துருவீரர்களைக்கொல்பவனும் என் புத்திரனுக்குப் புத்திரனுமான லக்ஷ்மணனும் இவ்வண்ணமாகப் பிதாவான துர்யோதனனைப் பின்தொடர்ந்து சென்றான். மாதவ! ஹைமந்தருதுவின் முடிவில் காற்றினால் முறிக்கப்பட்ட பூத்த இரண்டு ஸாலவிருக்ஷங்கள்போல வீழ்ந்திருக்கின்ற அவந்திதேசாதிபதிகளான விந்தானுவிந்தர்களைப் பார். படுத்திருக்கின்ற இவ்விருவரும் ஸ்வர்ணமயமான தோள்வளைகளையும் கவசத்தையும் அணிந்தவர்களும் அம்புகளையும் கத்தியையும் வில்லையும் தரித்தவர்களும் காளைகளுக்கொப்பானகண்களுள்ளவர்களும் நிர்மலமான பூமாலைகளை அணிந்தவர்களுமாயிருக்கிறார்கள். கிருஷ்ணா! எவர்கள், துரோணர் பீஷ்மர் சூரியகுமாரனான கர்ணன் கிருபர் துர்யோதனன் துரோணபுத்திரர் ஸிந்துதேசாதிபதியான ஜயத்ரதன் ஸோமதத்தன் விகர்ணன் சூரனானகிருதவர்மா இவர்களிடத்தினின்று விடுபட்டார்களோ அப்படிப்பட்டபாண்டவர்கள் அனைவருமே உன்னுடன்கூடக் கொல்லப்படத்தகாதவர்கள் தாம். எந்தப் புருஷசிரேஷ்டர்கள் சஸ்திரங்களுடைய வேகத்தினால் தேவர்களைக்கூடக் கொல்வார்களோ அப்படிப்பட்ட இந்த வீரர்கள் யுத்தத்தில் கொல்லப்பட்டார்கள். காலத்தினுடைய மாறுபாட்டத்தைப் பார். மாதவ! சூரர்களான இந்த க்ஷத்திரிய சிரேஷ்டர்களும் சூரர்களும் வித்தையைக் கற்றவர்களும் மனவுறுதியுள்ளவர்களுமான எனது புத்திரர்களும் க்ஷத்திரியர்களால் கொல்லப்பட்டார்களாதலால் நிச்சயமாகத் தெய்வத்துக்கு அதிகபாரமானது ஒன்றுமில்லை. கிருஷ்ணா! நீ விருப்பம் நிறைவேறாமல் மறுபடியும் உபப்லாவ்யத்துக்குத்திரும்பிப்போனபொழுதே, பலசாலிகளான என் புத்திரர்கள் மாண்டார்கள். சந்தனுவின் புதல்வரான பீஷ்மராலும் புத்திமானான விதுரராலும், 'உன்பிள்ளைகளிடம் நேசம்பாராட்டாதே' என்று அப்பொழுதே சொல்லக்கேட்டேன். ஜனார்த்தனா! அவ்விருவருடைய இந்த எண்ணமானது வீணாகத்தகாததன்றோ. சீக்கிரத்திலேயே என்னுடைய புத்திரர்கள் சாம்பலாகிவிட்டார்கள்" என்றாள்.

பாரதரே! சோகமிகுந்தவளான காந்தாரி இவ்வண்ணமுரைத்துத் துக்கத்தால் அறிவழிக்கப்பட்டவளாகித் தைரியத்தைவிட்டுப்

* ஒருசொல் விடப்பட்டது

பூமியில் விழுந்தாள். பிறகு, கோபத்தால் கவரப்பட்ட அங்கங்களுள்ளவளும் புத்ரசோகத்தால் கவரப்பட்டவளுமான அவள் துன்பமுற்ற இந்திரியங்களுடன் கூடியவளாக ஸ்ரீகேசவர்மீது தோஷத்தைக் கூறலானாள். "கிருஷ்ண! ஜனார்த்தன! ஒருவரோடொருவர் கோபங்கொண்டவர்களும் அழிந்துபோகின்றவர்களுமான பாண்டவர்களும் தார்த்தராஷ்டிரர்களும் உன்னால் யாதுகாரணத்தால் உபேக்ஷிக்கப்பட்டார்கள்? மதுஸூதன! மஹாபாஹுபலமுள்ளவனே! வல்லமையுள்ளவனும் அனேக வேலைக்காரருடன் கூடியவனும் பெரிதானசேனையில் நிலைபெற்றிருப்பவனும் இருதிறத்திலும் ஸமர்த்தனும் செல்வாக்குள்ளவனும் (இந்நாசத்தை) விரும்பினவனுமான நீ கௌரவர்களுடைய அழிவை உபேக்ஷித்தமையால் அதன்பயனை அடைவாயாக. நான் கணவருக்குப் பணிவிடைசெய்வதால் சிறிது ஸம்பாதித்ததும் (பிறரால்) அடையமுடியாததுமான தவத்தினால், சக்ரத்தையும் கதையையும் தரித்திருக்கிற உன்னைச் சபிக்கிறேன். கோவிந்த! அன்யோன்யம் கொல்லுகின்ற ஞாதிகளானகௌரவர்களும் பாண்டவர்களும் உன்னால் உபேக்ஷிக்கப்பட்டமையால் (உன்னுடைய) ஞாதிகளை வதம்செய்யப்போகிறாய். மதுஸூதன! இதுமுதல் முப்பத்தாறாவது வருஷம் வந்தவுடனே, நீயும், ஞாதிகளும் மந்திரிகளும் புத்ரர்களும் கொல்லப்பட்டவனாகவும் காட்டில் ஸஞ்சரிப்பவனாகவும் அநாதன்போல அறியப்படாதவனாகவும் உலகங்களில் காணப்படாதவனாகவும் நிந்திக்கப்பட்ட உபாயத்தினால் நாசத்தையடையப்போகிறாய். இந்தப் பரதஸ்திரீகள்போல உன்னுடைய ஸ்திரீகளும் இவ்வாறு புத்ரர்களும் ஞாதிகளும் பந்துக்களும் கொல்லப்பட்டவர்களாகப் பரிதவிக்கப்போகின்றார்கள்" என்று சபித்தாள்.

உதாரமான மனமுள்ள வாஸுதேவர் கோரமான அந்தவசனத்தைக்கேட்டுக் காந்தாரீதேவியைப்பார்த்து எதிரில் சிறிது புன்சிரிப்புடன் சொல்லலானார். "க்ஷத்ரியஸ்திரீயே! நானும் இதை இவ்வாறு ஆகப்போகிறதென்று அறிவேன். என்னாலனுஷ்டிக்கப்பட்டதையே நீ அனுஷ்டிக்கிறாய். வ்ருஷ்ணிகள் தெய்வத்தினாலேயே விநாசம் அடையப்போகிறார்கள். இதில் ஸம்சயமில்லை. கல்யாணி! என்னைத்தவிர வேறொருவன் வ்ருஷ்ணிகளின் கூட்டத்தை ஸம்ஹரிப்பவன் இல்லை. அவர்கள் வேறு மனிதர்களாலாவது தேவர்களாலாவது தானவர்களாலாவது கொல்லப்படத்தகாதவர்கள். யாதவர்கள் ஒருவருக்கொருவரால் செய்யப்படும் நாசத்தை அடையப்போகிறார்

கள்" என்றுகூறினர். தாசார்ஹர் இவ்வாறு கூறியவுடன், பாண்டவர்கள் மனத்தில் நடுக்கமுற்றவர்களும் மிக்க துன்பத்தையடைந்தவர்களும் உயிரில் ஆசையற்றவர்களுமானார்கள்.

ஸ்திரீவிலாபபர்வம் முற்றிற்று.

## இருபத்தாறுவது அத்யாயம்.

## ஸ்ராத்தபர்வம்.

(சோகத்தால் பூமியில்விழுந்த காந்தாரியைக் கோவிந்தர் தேற்றியதும், யுதிஷ்டிரருடைய அநுமதிப்படி மரித்தவர்களை விதுரர் ஸஞ்சயன் முதலானவர்களால் தகனம் செய்வித்ததும்.)

ஸ்ரீபகவான் சொல்லுகிறார். "காந்தாரி! எழுந்திரு; எழுந்திரு. சோகத்தில் மனத்தைச் செலுத்தாதே. துராத்மாவும் பொறாமையுள்ளவனும் அளவுக்குமிஞ்சி அகங்காரங்கொண்டவனும் கொடியவனும் பகையில்விருப்பமுள்ளவனும் பெரியோர்களுடைய கட்டளையை மீறுபவனும் உன்புத்திரனுமான துர்யோதனனை முன்னிட்டு (உன்னுடைய) கெட்டநடையை நல்லதென்று எண்ணுகிறாய். ஆதலால், உன்னுடைய குற்றத்தினாலேயே கௌரவர்கள் நாசமடைந்தார்கள். உன்னால் செய்யப்பட்டிருக்கிற குற்றத்தை இப்பொழுது என் மீது ஏற்றுவதற்கு ஏன்விரும்புகிறாய்? எவன் மரித்தவனைப்பற்றியோ, ஓடிப்போனவனைப்பற்றியோ, காணமல்போனவனைப்பற்றியோ வியஸனப்படுகிறானோ அவன் துக்கத்தோடு துக்கத்தையடைகிறான். இரண்டனர்த்தங்களை அடைகிறான். ப்ராம்மணஸ்திரீயானவள் தவஞ்செய்பவனைக் கர்ப்பமாகத் தரிக்கிறாள். பசுவானது பாரத்தைச் சுமக்கக்கூடிய காளையைக் கர்ப்பமாகத்தரிக்கிறது. பெண்குதிரையானது ஓடுந்தன்மையுள்ள குதிரையைக் கர்ப்பமாகத்தரிக்கின்றது. சூத்ரப்பெண்ணானவள் பணிவிடைசெய்பவனைக் கர்ப்பமாகத்தரிக்கிறாள். வைஸ்யப்பெண்ணானவள் பசுக்காப்பவனைக் கர்ப்பமாகத்தரிக்கிறாள். உன்னைப்போன்ற ராஜபுத்ரி யுத்தத்தில் மரணத்தைவிரும்பும் க்ஷத்ரியனைக் கர்ப்பத்தில் தரிக்கிறாள்" என்றார். வாஸுதேவர் மறுபடியும் சொல்லியதும் அப்பிரியமாயிருப்பதுமான அந்த வார்த்தையைக் கேட்டுக் காந்தாரியானவள் சோகத்தால கண்கலக்கமுற்றவளாகப் பேச்சற்றிருந்துவிட்டாள்.

தர்மத்தை அறிந்தவனும் ராஜரிஷியுமான திருதராஷ்டிரனே புத்திக்குறைவினாலுண்டான அஜ்ஞானத்தை அடக்கிக்கொண்டு தர்மராஜரான யுதிஷ்டிரரைப்பார்த்து, "பாண்டுநந்தன! உயிரோடிருந்தபோர்வீரர்களுடைய தொகையை அறிந்தவனாயிருக்கிறாய். மாண்டவர்களுடைய தொகையையும் அறிவாயாகில் எனக்குச் சொல்" என்று வினவ, யுதிஷ்டிரர், "அரசரே! இந்த யுத்தத்தில் பத்துக்கோடிவீரர்களும் இருபதினாயிரம்வீரர்களும் அறுபத்தாறுகோடிவீரர்களும் கொல்லப்பட்டார்கள். ராஜேந்திரரே! பாரதரே! * காணாமற்போன வீரர்களின்தொகை பதினாலாயிரமும் வேறுபதினாயிரமும் நூறாயிரமும் அறுபதினாயிரமுமாம்" என்று கூறினார். திருதராஷ்டிரன், "புருஷோத்தம! யுதிஷ்டிர! அவர்கள் என்னகதியை அடைந்தார்கள்? மஹாபாஹு! பலமுள்ளவனே! அதை எனக்குச் சொல். நான் உன்னை எல்லாம் தெரிந்தவனென்றெண்ணுகிறேன்" என்று வினவ, யுதிஷ்டிரர், "உத்தமமான யுத்தத்தில் மகிழ்ச்சியுள்ளவர்களான எவர்களால் சரீரங்கள் ஹோமம்செய்யப்பட்டனவோ உண்மையான வல்லமையுள்ள அவர்கள் தேவராஜனுடையலோகத்திற்கு ஸமமான லோகங்களை அடைந்தார்கள். பாரதரே! எவர்கள் சாகவேண்டுமென்றெண்ணங்கொண்டு ஸந்தோஷமில்லாத மனதுடன் போர்புரிந்து யுத்தத்தில்கொல்லப்பட்டார்களோ அவர்கள் கந்தர்வர்களோடு சேர்ந்தார்கள். எவர்கள் யுத்தபூமியிலின்றுபின்வாங்கினவர்களாகவும் பயிரை யாசிக்கின்றவர்களாகவும் சஸ்திரத்தினால் மரணத்தையடைந்தார்களோ அவர்கள் குஹ்யகர்களைக்குறித்துச் சென்றார்கள். எந்தவீரர்கள் யுத்தத்தில் பகைவர்களாலடித்துத் தள்ளப்படுகின்றவர்களும் பலங்குறைந்தவர்களும் ஆயுதமிழந்தவர்களும் வெட்கத்தையடைந்தவர்களும் மஹாத்மாக்களும் சத்துருக்களுக்குநேரில் நிற்பவர்களும் கூர்மையான சஸ்திரங்களால் வெட்

'ஆலக்ஷாணாம்'* என்பது 'அலக்ஷாணாம்' என்று மாற்றப்பட்டது.

நூற்றறுபத்தாறுகோடியே இருபதினாயிரவர் இந்தப்போரில் கொல்லப்பட்டார்கள். ராஜேந்திரரே! காணாமல்போனவீரர்களின் (தொகை) பதினாலாயிரமும் வேறுபதினாயிரமும் நூற்றறுபதும் ஐந்துமாம்' என்பது வியாகயான புஸ்தகபாடம்.

'One billion six hundred and sixty millions and twenty thousand men have fallen in this battle. Of the heroes that have escaped, the number is twenty four thousand one hundred and sixty five' என்பது இங்கிலீஷ் மொழிபெயர்ப்பு.

டப்படுகின்றவர்களும் க்ஷத்திரியதர்மத்தைக் கைக்கொண்டவர்களுமாகக் கொல்லப்பட்டார்களோ நல்ல ஒளியுள்ளவர்களான அந்த வீரர்கள் ப்ரம்மலோகத்தையடைந்தார்கள். மன்னரே! எவர்கள் இந்த யுத்தபூமியில் யுத்தமத்தியில் எவ்வாறாயினும்கொல்லப்பட்டார்களோ அந்தமனிதர்கள் மேலானகதியை அடைந்தார்கள்" என்று கூறினார். திருதராஷ்டிரன், "புத்ரா! மஹாபாஹு-பலமுள்ளவனே! நீ எந்த ஞானபலத்தினால் ஸித்தனைப்போல் இவ்வாறு கண்டறிகிறாய்? என்னால் கேட்கத்தக்கதாயின் அதனை எனக்குச் சொல்" என்றுவினவ, யுதிஷ்டிரர், "உம்முடைய கட்டளையினால் முன்பு வனத்தில் ஸஞ்சரித்தபோது என்னால் தீர்த்தயாத்திரைசெய்ததினால் இந்த அனுக்ரகத்தை அடைந்தேன். தேவரிஷியான லோமசர் காணப்பட்டார். அவரிடத்திலிருந்து ஞாபகசக்தியையடைந்தேன். முற்காலத்தில் ஞானயோகத்தால் ஞானக்கண்ணும் அடையப்பட்டது" என்று கூறினார். திருதராஷ்டிரன், "அப்பனே! பாண்டுநந்தன! நாதனற்றவர்களும் நாதனுள்ளவர்களுமான ஜனங்களுடைய சரீரங்களைச் சாஸ்திரமுறைப்படி தகனம்செய்வார்களா?" என்று வினவ, யுதிஷ்டிரர், "ஐயா! கருமங்கள் பலவாயிருப்பதால் மாண்ட இந்த யுத்தவீரர்களுள் எவர்களுக்குச் சாந்தியைச் செய்கின்றவர்களில்லையோ, எவர்கள் யாகஞ்செய்தவர்களல்லரோ அவர்களுக்குச் செய்ய வேண்டிய கருமங்களை நாமே செய்வோம். எவர்களை ஆங்காங்கு பருந்துகளும் கழுகுகளுமிழுக்கின்றனவோ அவர்களுக்கு ஸங்கர்ஷணலோகங்கள் கிடைக்கப்போகின்றன; ஸம்சயமில்லை" என்று கூறினார்.

மஹாராஜரே! குந்திபுத்திரரான யுதிஷ்டிரர் இவ்வாறு உரைத்துவிட்டு ஸுதர்மாவையும் தௌம்யரையும் ஸூதனான ஸஞ்சயனையும் மஹாபுத்திமானான விதுரரையும் குருவம்சஸ்தனான யுயுத்ஸுவையும் இந்திரஸேனன்முதலான வேலைக்காரர்களையும் ஆயிரமாயிரமாக இருக்கின்ற ஸூதர்களையும் பார்த்து, "நீங்கள் நாதனில்லாதவர்களுடைய சரீரங்கள் சிறிதும் கெடாதுபோகாதபடி இவர்களுக்குப் பிரேதகார்யங்களனைத்தையும் செய்யுங்கள்" என்று கட்டளையிட்டார். தர்மராஜருடைய கட்டளையினால் விதுரரும் ஸூதனான ஸஞ்சயனும் தௌம்யருடன்கூடின ஸுதர்மாவும் அவ்வாறே இந்திரஸேனன் முதலானவர்களும் சந்தனக்கட்டைகளையும் அகிற்கட்டைகளையும் அவ்வாறே * காலீயகக்கட்டைகளையும் நெய்யையும் எண்ணெயையும்

* வாஸனையுள்ள ஒருவகை மரம்.

கந்தங்களையும் வெண்பட்டுக்களையும் வஸ்திரங்களையும் மிகச்சிறந்த
வைகளான கட்டைகளுடைய குவியல்களையும் அந்தஇடத்தில் ஓடிக்
கப்பட்டிருந்த ரதங்களையும் பற்பலஆயுதங்களையும் சேகரித்துப்
பிரயத்னத்துடன் சிதைகளை அமைத்து எவர்எவர்கள் தலைவர்களான
அரசர்களோ அவரவர்களை ஒருவழிச்சென்ற மனமுள்ளவர்களாகச்
சாஸ்திரத்தினால் காணப்பட்டவிதிப்படி தகனம்செய்தார்கள். பாரத
ரே ! துர்யோதனராஜன், மஹாரதர்களான இவனுடைய பிராதாக்
கள், சல்யன், சலன், ராஜாவான பூரிஸ்ரவஸ், ராஜாவான ஜயத்ரதன்,
அபிமன்யு, துச்சாஸனபுத்திரன், லக்ஷ்மணன், ராஜாவான திருஷ்ட
கேது, ப்ருஹத்பலன், ஸோமதத்தன், மஹாரதனான ஸ்ருஞ்சயன்,
ராஜாவானக்ஷேமதன்வா, விராடன், துருபதன், பாஞ்சாலகுமாரனான
சிகண்டி, பார்ஷதனான திருஷ்டத்யும்னன், யுதாமன்யு, விக்கிரமசாலி
யான உத்தமௌஜஸ், கோஸலராஜகுமாரன், த்ரௌபதீபுத்திரர்கள்,
ஸுபலனுடைய புத்திரனான சகுனி, அசலன், விருஷகன், ராஜா
வான பகதத்தன், ரோஷமுள்ளவனும் ஸூர்யபுத்திரனுமானகர்ணன்,
அவனுடைய குமாரர்கள், மஹாவில்லாளிகளான கேகயர்கள், மஹா
ரதர்களான திரிகர்த்தர்கள், ராக்ஷஸேந்திரனான கடோத்கசன், பக
னுடைய பிராதா, ராக்ஷஸேந்திரனான அலம்புஸன், ராஜாவான ஜல
ஸந்தன் இவர்களையும் ஆயிரமாயிரமாக மற்ற அனேகமன்னர்களை
யும் நெய்த்தாரைகளால் ஹோமம்செய்யப்பட்டவைகளும் ஜ்வலிக்
கின்றவைகளுமான அக்னிகளால் தகனம்செய்தார்கள். மஹாத்மாக்
களான சிலருக்குப் பித்ருமேதஸம்ஸ்காரங்களும் நடந்தன. ஸாமங்
களாலும் கானம்பண்ணினார்கள். அவர்கள் மற்றவர்களோடு செய்ய
வேண்டியமுறைகளை விதித்தார்கள். ஸாமங்கள் ருக்குக்கள் இவற்றின்
நாதத்தினாலும் மாதர்களுடைய அழுகைச்சத்தங்களாலும் இரவில்
எல்லாப்பிராணிகளுக்கும் மதிமயக்கமுண்டாயிற்று. ஹோமம்செய்யப்
பட்டவைகளும் அவைகளால் நன்றாக எரியும்படி செய்யப்பட்டவை
களும் மூண்டெரிகின்றவைகளுமான அக்னிகள் ஆகாயத்தில ஸ்வல்
பமானமேகங்களால் சூழப்பட்டிருக்கின்ற கிரஹங்கள்போலக் காணப்
பட்டன. விதுரர், அரசரின்கட்டளையினால், பற்பலதேசங்களினின்று
வந்தவர்களான எந்தமனிதர்கள் நாதனற்றவர்களாக அங்கு மரித்
திருந்தார்களோ அவர்களனைவரையும் கொண்டுவந்து ஆயிரமாயிர
மாகக்குவித்துச் சிதையடுக்கி அவர்களனைவர்களையும் ஊக்கமுள்ள
வேலைக்காரர்களைக்கொண்டு எண்ணெயுள்ள மிகுதியான கட்டை
களால் தகனம்செய்வித்தார். குருராஜரானயுதிஷ்டிரர், அவர்த்ருத

உத்தரக்ரியைகளைச் செய்வித்துத் திருதராஷ்டிரனை முன்னிட்டுக் கொண்டு கங்கையைநோக்கிச் சென்றார்.

---

## இருபத்தேழாவது அத்யாயம்.

### ஸ்ராத்த பர்வம். (தொடர்ச்சி.)

(திருதராஷ்டிரன் யுதிஷ்டிரர்முதலியோர் கங்கைக்கரைக்குவந்ததும், இறந்தவர்களுக்கு தர்ப்பணஞ்செய்யத் தொடங்கியவுடன், குந்தி கர்ணனும் தனதுபிள்ளையென்பதை யுதிஷ்டிரருக்குக்கூறி அவனுக்கும் தர்ப்பணஞ்செய்யச்சொல்லியதும், யுதிஷ்டிரர்முதலியோர் உதகதானஞ் செய்ததும்.)

அவர்கள், மங்களகரமானதும் புண்யஜலத்துடன் கூடியதும் ஸந்தோஷத்தை உண்டுபண்ணுகிறதும் தெளிந்ததும் பெரிய உருவமுள்ளதும் பெரிய காடுகளுள்ளதுமான கங்கையை அடைந்து பூஷணங்களையும் உத்தரீயங்களையும் தலைப்பாகைகளையும் விசித்திரமான கவசங்களையும் கழற்றிவைத்துவிட்டுக் கங்கையில் மூழ்கினார்கள். பிறகு, எல்லாக்கௌரவஸ்த்ரீகளும் மிக்க துயரத்துடன்கூடியவர்களாக அழுதுகொண்டே தகப்பனார்களுக்கும் உடன்பிறந்தார்களுக்கும் பேரன்மார்களுக்கும் தம்முடைய பந்து ஜனங்களுக்கும் புத்திரர்களுக்கும் சிறந்தபெரியோர்களுக்கும் கணவர்களுக்கும் ஜலதர்ப்பணஞ்செய்தார்கள். தர்மங்களை அறிந்தவர்கள், ஸ்நேகிதர்களுக்குங்கூட ஜலதர்ப்பணஞ்செய்தார்கள். வீரபத்னிகளால் வீரர்களுக்கு ஜலதானஞ் செய்யப்படுகையில், கங்கையானது நல்லஇறங்குந் துறையுள்ளதாயிற்று; மீண்டும் அதிகமாகப் பெருகவும் பெருகியது. கடலுக்கொப்பானதும் ஆனந்தமில்லாததும் உத்ஸவமில்லாததுமான அந்தக் கங்காதீரமானது வீரபத்னிகளால் நாற்பக்கத்திலும் சூழப்பட்டதாகவிளங்கியது.

மஹாராஜரே! பிறகு, சோகத்தினால் பீடிக்கப்பட்டிருப்பவளான குந்தியானவள் அழுதுகொண்டு வெட்கத்தினால் மெதுவானவாக்கினால் புத்திரர்களைப்பார்த்து இந்தவசனத்தை உரைக்கலானாள். "பாண்டவர்களே! மஹாவில்லாளியும் ரதயூதபதிகளுக்கெல்லாம் யூதபதியும் வீரலக்ஷணங்களால் அலங்கரிக்கப்பட்டவனுமான எந்தவீரன் யுத்தத்தில் அர்ஜுனனால் கொல்லப்பட்டானோ, எவனை ஸூதபுத்திரனென்றும் ராதாபுத்திரனென்றும் எண்ணினீர்களோ, எந்தப்பிரபுவானவன் ஸேனைநடுவில் சூரியன்போல விளங்கினானோ, எவன்

முன்பு பரிவாரங்களுடன்கூடின உங்களனைவர்களையும் எதிர்த்துச் சண்டைசெய்தானோ, எவன் துர்யோதனனுடைய சேனை முழுவதையும், நன்றாக நடத்திக்கொண்டு விளங்கினானோ, வீர்யத்தில் எவனுக்கு நிகரானவன் பூமியில் ஒருவனும் இல்லையோ, சூரனான எவன் பூமியில் எப்பொழுதும் பிராணனை விடுவதாலும் புகழையே விரும்பினானோ, ஸத்யஸந்தனும் யுத்தங்களில் ஓடாதவனும் சிறந்த செய்கைகளையுடையவனும் பிராதாவுமான அந்தக் கர்ணனுக்கு உதகதானம் செய்யுங்கள். அவன் உங்களுக்கு முந்திப்பிறந்த பிராதா. அந்தச்சூரன் குண்டலங்களுடனும் கவசத்துடனும் ஸூர்யனுக்கு ஸமமான காந்தியுடனும்கூடியவனாக ஸூர்யனால் என்னிடத்தில்பிறந்தான்" என்று சொன்னாள். மாதாவினுடைய அப்ரியமான வசனத்தைப் பாண்டவர்களனைவரும் கேட்டு, கர்ணனைக் குறித்தே வியஸனப்பட்டு மீண்டும் அதிக துயரத்தை அடைந்தவர்களானார்கள். பிறகு, புருஷஶ்ரேஷ்டரும் வீரரும் குந்திபுத்திரருமான அந்தயுதிஷ்டிரர் ஸர்ப்பம்போலப்பெருமூச்சுவிட்டுக்கொண்டுதாயைப் பார்த்து (பின்வருமாறு) உரைக்கலானார். "எந்தமஹாரதனென்கிற பெருமடுவானது பாணங்களாகிற அலைகளுள்ளதாகவும் த்வஜங்களாகிறநீர்ச்சுழலுள்ளதாகவும் பருத்தபுஜங்களாகிற பெரியமுதலைகளுள்ளதாகவும் தலத்வனியினால் நன்றாக அலைக்கப்பட்டதாகவும் இருந்ததோ, எவனுடைய அம்புவிழும்இடத்தைஅடைந்து தனஞ்சயனைத்தவிரவேறு ஒருவனும் நிற்கமாட்டானோ தேவகுமாரனும் • குண்டலங்களுடனும் கவசத்துடனும்கூடியவனும் சூரனும் சூரியனுக்குச்சமமான ஒளி பொருந்தினவனுமான அவன் எவ்வாறு உனக்குப் புத்திரனாக முந்தி உண்டானான்? எவனுடைய புஜங்களின்பிரதாபத்தினால் நாம் எப்பொழுதும் தவிக்கச்செய்யப்பட்டோமோ அவனை, அக்னியை வஸ்திரத்தினால் மறைப்பதுபோல, எவ்வாறு மறைத்தாய்? எவனுடைய கைகளின்பிரபாவத்தினால் துர்யோதனன் நம்மிடத்தில்பகைப்பதில் விருப்பம்வைத்தானோ அந்த மூத்தோனை எவ்வாறு சொல்லாமலிருந்தாய்? காண்டீவத்தை வில்லாகக்கொண்ட அர்ஜுனனுடைய பலமானது எங்களால் எவ்வாறு பின்பற்றப்பட்டதோ அவ்வாறே தார்த்தராஷ்டிரர்களால் பின்பற்றப்பட்ட மஹாவில்லாளியான கர்ணனை எவ்வாறு மறைத்திருந்தாய்? ரதிகனும் குந்திபுத்திரனுமான கர்ணனைத்தவிரப் பலசாலிகளுள் சிறந்தவனான வேறு ஒருரதிகன் எல்லாஅரசர்களுடைய படையையும் எதிர்க்கவில்லை. அவன் எங்களுக்கு முந்திப்பிறந்த பிராதா; எல்லாச் சஸ்திரதாரிகளுள்ளும் சிறந்

தவன். அத்புதவிக்கிரமத்தையுடைய அவனை நீ முந்தி எவ்வாறு பெற்றாய் ! அந்தோ ! நீ ரஹஸ்யத்தைமறைத்ததினால் நாங்கள் கெடுக்கப்பட்டோம். கர்ணனுடைய நாசத்தினால் பந்துக்களும் நாங்களும் துன்பப்படுத்தப்பட்டோமன்றோ ? அபிமன்யுவின் விநாசத்தினாலும் திரௌபதீபுத்திரர்களுடைய வதத்தினாலும் பாஞ்சாலர்களுடைய விநாசத்தினாலும் கௌரவர்களுடைய வதத்தினாலும் உண்டான துக்கத்தைவிட நூறுமடங்கு பெரிதான இந்தத்துக்கம் நேர்ந்துவிட்டது. கர்ணனைப்பற்றியே துக்கிக்கிறேன். அக்னியில்போடப்பட்டவன்போல எரிக்கப்படுகிறேன். இவ்வுலகில் கௌரவர்களுக்கு நாசத்தைஉண்டுபண்ணினதும் கோரமுமான இந்தஅனர்த்தமானது நேராமலிருக்குமாகில் ஸ்வர்க்கத்திலிருப்பதானாலும் அடையத்தகாதவஸ்து ஒன்றுமிராது". என்றார்.

அரசரே ! தர்மராஜரும் பிரபுவுமான யுதிஷ்டிரர் இவ்வண்ணம் அதிகமாகப் புலம்பி மெதுவாக அழுதார். அந்தக்கர்ணனுக்கு உதகத்தையும் விட்டார். பிறகு, அந்த உதகதானகர்மாவானது செய்யப்படும்போது,அவ்விடத்தில் இருபக்கத்திலுமிருந்த அந்தஸ்திரீகளனைவரும் உடனே உரக்க அலறினார்கள். பிறகு, குருதேசாதிபதியும் புத்திமானுமான யுதிஷ்டிரர், ஸஹோதரனிடத்திலுள்ள அன்பினால், பரிவாரங்களுடன்கூடின கர்ணனுடைய ஸ்திரீகளை அழைத்துவரச்செய்தார். தர்மாத்மாவான அந்த யுதிஷ்டிரர் அந்த ஸ்திரீகளோடு அடுத்துச்செய்யத்தக்க கர்ணனுடைய பிரேதகிருத்யம் அனைத்தையும் மிகுதியான தக்ஷிணைகளுள்ளதாக விதிப்படிசெய்தார். பாரதரே ! அந்தத் திருதராஷ்டிர ராஜனும் ஆலஸ்யமில்லாதவனாகத் தர்ப்பணம்செய்துவிட்டுப் பார்யையுடன் கங்கையினின்று கரை ஏறினான். கலக்கமற்ற இந்திரியங்களுடன் கூடினவரான அந்த யுதிஷ்டிரரோ, 'பாபியான என்னால் சிறந்தவனும் ஞாதியுமான அப்படிப்பட்ட பிராதா கொல்லப்பட்டான். ஆதலால், எது ரஹஸ்யமோ அது இனி ஸ்திரீகளுடைய மனத்தில் தங்காமலிருக்கக்கடவது' என்று இவ்வாறு சொல்லிவிட்டு, எல்லாப்பிராதாக்களுடனும் கங்கைநதியினின்றும் மேலே ஏறினார். கங்கையின் கரையை அடைந்தார்.

ஶ்ராத்தபர்வம் முற்றிற்று.

ஸ்திரீபர்வம் முற்றிற்று.